உ

# காரைக்காலம்மையார்

# புராணம்

(உரையுடன்)

(தேசிய உயர் கல்விச் சான்றிதழ்.
தமிழ்மொழிப் பரீட்சைக்குரியது 1977)

*

உரை :
"அடியவன்"

*

ஸ்ரீ லங்கா வெளியீடு
234, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
1992

உ

# காரைக்காலம்மையார்

# புராணம்

(உரையுடன்)

(தேசிய உயர் கல்விச் சான்றிதழ்.
தமிழ்மொழிப் பரீட்சைக்குரியது 1977)

※

உரை :
"அடியவன்"

※

ஸ்ரீ லங்கா வெளியீடு
234, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
1992

நான்காம் பதிப்பு - 1989

விலை ரூபா 37-50

உ

# முகவுரை

1977 ஆம் ஆண்டிலிருந்து தேசிய உயர்கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குத் தமிழ்மொழிப்பாட நூல்களுள் ஒன்றாகச் சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணத்திற்கு 'காரைக்காலம்மையார் புராணம்' ஆக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை அதிபரின் விருப்பத்திற்கிசைய இப்பகுதிக்கு என்னால் உரை எழுதப்பட்டு இந்நூல் வெளியாகின்றது. பதவுரை, பொழிப்புரை என்பவற்றோடு நான் கண்ட இலக்கிய நயங்களையும் இதன்கண் ஓரளவு விரிவாகவே தந்துள்ளேன். இலக்கண முடிவுகளும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. இவ்வகையில் இந்நூல் மாணவர்க்குப் பெரிதும் பயனாகும் என்பது என் நம்பிக்கை. அவர்கள் இதனை வாங்கிப் பயன் செய்வார்களாக.

குறுகிய காலத்தில் இந்நூலை நன்முறையிலே அச்சிட்டு வெளியிடும் ஸ்ரீ லங்கா புத்தகசாலை அதிபரின் உதவிகாலத்தாற் செய்ததாகும். இதனைப் போற்றி நன்றி பாராட்டுதல் நம்மனோர் கடன்.

01-02-77 'அடியவன்'

# காரைக்காலம்மையார்
# வரலாற்றுச் சுருக்கம்

காரைக்காலம்மையாரின் குழவித் திருநாமம் புனிதவதியார் என்பது. சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் பெரியபுராணத்தின் வாயிலாய் நாம் அறியும் செய்தியாகும். (காரைக்காலம்மையார் புராணம்: பாட்டில் 2) இவ்வம்மையார் தலையாலே நடந்து சென்று வழிபட்ட திருவாலங்காட்டினைக் 'காலால்மிதிக்க அஞ்சி அந்தத் திருத்தலத்தின் வெளிப்புறத்திலே திருஞானசம்பந்த நாயனர் தங்கினர் எனச் சேக்கிழார் உரைப்பர். இதிலிருந்து இவரின் பெருமை நன்கு புலனாகின்றது. திருஞானசம்பந்தர் தமது திருவாலங்காட்டுத் திருப்பதிகத்தின் முற்பாசுரத்திலே,

> வஞ்சப் படுத்தொருத்தி வாழ்நாள் கொள்ளும் வகைகேட்டு
> அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே.

என்று குறித்தருள்வதும் இக்கூற்றினை அரண்செய்யும்.

காரைக்காலம்மையார் சமய குரவருக்கு முன்னர் வாழ்ந்த சிவனடியாராவர். இவர் வாழ்ந்த காலம் சங்கமருவிய காலத்து இறுதிப் பகுதி என்பது பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்களின் கருத்து. கலாநிதி மா. இராசமாணிக்கனர் 'தமது சைவசமய வளர்ச்சி' என்னும் நூலில் இவரின் காலத்தைக் கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பர். தமிழிலே பதிகம் தோன்றுவதற்கு வழிவகுத்த முதல்வர் என்பதால் இவ்வம்மையாருக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

சோழ நாட்டிலே காரைக்கால் என்னும் துறைமுகப் பட்டினம் ஒன்று உண்டு. அங்குப் பெருவணிகராய் வாழ்ந்த தனதத்தன் என்பாரின் ஒரே மகளாராய் அவதரித்தவரே புனிதவதியார். இவருக்கு மணவினைப் பருவம் வந்ததும், நாகபட்டினத்து வணிகரான நிதிபதியின்

மைந்தன் பரமதத்தனுக்கு இவரை மணமுடித்து வைத்து. அளவிலாச் செல்வமும் அழகிய மனையும் சீதனமாய் அளித்துக் காரைக்காலி லேயே தந்தை குடியிருத்தினர்.

புனிதவதியார் இல்லறத்தை நல்லறமாய் ஒழுகிவருங் காலத்திற் பரமதத்தனின் வணிக நிலையத்திற்கு வந்து அவன் உதவியைப் பெற்றோர், அவனுக்குச் சுவை நிறைந்த இரு மாங்கனிகளைக் கையுறையாய்க் கொடுக்க அவன் அவற்றைக் அவர்களைக் கொண்டே தன் மனைவியாரிடம் சேர்ப்பித்தான்.

கணவனுக்கு உணவினை ஆக்கும் சமயற்றொழிலிலே ஈடுபட்டிருந்த புனிதவதியார் கணவன் அனுப்பிய மாங்கனிகளை ஒருபால் வைத்துத் தம் கருமமே கண்ணாயினர். அதிகாலை பசி மிகுதியும் உடையவரான சிவனடியார் ஒருவர் உணவு வேண்டி இல்லம் வந்தார். அவரை உபசரித்து அவருக்கு சோறு படைத்த அம்மையார் கறியமுது சமைத்து முடியாமையினால், கணவன் அனுப்பிய மாங்கனி ஒன்றைக் கறிக்குப்பதிலாக அளித்தார். அவற்றை உண்டு பசி தீர்ந்து மகிழ்ந்த அடியார் அம்மையாரை வாழ்த்திச் சென்றார்.

சிறிது பொழுதிலே தன் கடமைகளை முடித்து இல்லந் திரும்பிய பரமதத்தன் குளித்து வந்து அம்மையார் அன்போடு பரிமாறிய உணவினை உண்டான். பின்னர் மாங்கனியையும் சுவைத்து மகிழ்ந்த அவன் அதன் இன்சுவையாற் கவரப்பட்டவனாய் மற்றொரு கனியினையும் தருமாறு கேட்டான். அம்மையார் ஒன்றும் பேசாதவராய் உட்சென்று இறைவனை வழிபட்டார். இறைவனின் அருளால் மாங்கனி ஒன்று அவர் கைக்கு வந்தது. அதனைக் கொண்டு சென்று கணவனிடம் கொடுக்க அவன் உண்டு அதன் அதிமதுரச் சுவையிலே ஈடுபட்டவனாய் "இது நீ முன்பு தந்த கனியிலும் மிகுந்த சுவை பொருந்தி விளங்குகின்றது. மூவுலகிலும் இதுபோற் பெறுவது அரிது. உனக்கு எவ்வாறு கிட்டியது?" என்று வினவினான்.

ஒருபுறம் இறைவனின் திருவருளை வெளியிடல் கூடாது என்ற தயக்கமும், மறுபுறம் கொண்ட கணவனுக்கு உண்மையை ஒளித்தல் கூடாது என்ற அச்சமும் அடைந்து இருதலைக் கொள்ளியுள் எறும்பென நின்ற அம்மையார் ஈற்றில்: தமது கற்புடை நெறியினைப் பேணுவதே குறியாகக் கொண்டு மாங்கனி கிடைத்த வகையினை எடுத்துரைத்தார். பரமதத்தன் அதனை நம்பினானல்லன் "நீ சொல்வது உண்மையாயின் இன்னும் ஒரு மாங்கனி பெற்றுவா" என்றான்.

மீண்டும் உட்சென்று புனிதவதியார் இறைவனை நினைத்து "எம் பெருமானே! தேவரீர் இவ்வேளையில் மற்றும் ஒரு மாங்கனியினை எனக்கு அளித்தருளாவிடில் என் உரை பொய்யாகிவிடும்'' என்று இரந்தார். அவரின் வேண்டுகோளை இறைவன் ஏற்றதற்கு அறிகுறியாய் அவர் கால்களிலே மாங்கனி ஒன்று வந்திருந்தது. அதனை அவர் கொண்டு சென்று பரமதத்தனின் கையிற் கொடுத்ததும் அது மறைந்தது.

பரமதத்தன் இவ்வற்புதச் செயல் கண்டு மிகுந்த அச்சமும் வியப்பும், விம்மிதமும் அடைந்தான். எனினும் அவன், தன் உணர்ச்சிகளை வெளியிடாது மறைத்து அன்றிலிருந்து புனிதவதியா ரோடு அணுகத் தொடர்பின்றி வாழலானான். அவரை நீங்கிச் செல்வதே குறித்து அதற்கான வாய்ப்பை எதிர்நோக்கினான், கடல் கடந்து வணிகம் செய்யச் செல்வதே அவரை நீங்குவதற்கு உகந்த வழி எனக்கண்டு மரக்கலத்தினை ஆயத்தஞ் செய்யும் முயற்சியில் ஈடுபட்டான்.

சில காலத்தின் பின் மரக்கலமும், வணிகப் பொருள்களும் சித்தமானதும் ஒரு நன்னாளிலே காரைக்காலிலிருந்து அவன்புறப் பட்டு வெளிநாடு சென்று வணிகத்தில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டினான். பின்னர் பாண்டி நாட்டிற்கு வந்து அங்கு நிலையாகக் குடியேறி வணிகன் மகளொருத்தியை மணம் புரிந்து மகிழ்வோடு மீண்டும் இல்லறத்தில் ஈடுபட்டான். தான் முன்பு மணஞ்செய்து வாழ்ந்ததை அவன் யார்க்கும் கூறவில்லை. இவ்வாறு இவன் வாழ்ந் திருக்க இவனுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு அவன் அம்மையாரின் திருநாமமான புனிதவதி என்பதையே பெய ராய் இட்டு அன்புடன் வளர்த்து வரலானான்.

இவன் நிலை இவ்வாறுப் புனிதவதியார் என்றும் போல இறை வனையே சிந்தையில் இருத்தி வழிபட்டு தம் கடமைகளில் வழுவாது ஒழுகி வந்தார். அவரின் பெற்றோரும் உற்றோரும் அவர் நிலை கண்டு வருந்திப் பரமதத்தனைப் தேடிக்காணும் முயற்சியினை மேற் கொண்டு அவன் பாண்டி நாட்டில் மறுமணஞ் செய்து வாழும் செய்தியினை அறிந்தனர். அவனிடத்து அம்மையாரைச் சேர்த்து வைக்கும் எண்ணம் உடையவராய் ஒரு நல்ல நாளிலே அவரைச் சிவிகையில் ஏற்றிப் பாண்டிநாடு சென்று தாம் வந்துள்ள செய்தி யைப் பரமதத்தனுக்கு அறிவித்தனர்.

பரமதத்தன் கலக்கமும், அச்சமும் அடைந்தான். அவன் தன் மனைவியையும், மகளையும் அழைத்துக் கொண்டு புனிதவதியார் இருந்த இடம் வந்து அவரின் காலடியில் வீழ்ந்து வணங்கினன். "அம்மையே! நீர் நற்பெருந் தெய்வமென நான் அறிந்து உம்மை நீங்கி வந்தேன். பின்பு யான் அரிதிற் பெற்ற இம்மகவிற்குத் தமது பெயரையே இட்டுள்ளேன், என்று மொழிந்தான்.

அவன் புனிதவதியாரை வணங்கியதையும், சொன்னதையும் கேட்டுத் திகைப்புற்ற உறவினர் "இது என்ன செயல்? உன் மனைவியை வணங்க உனக்கு நாணம் ஏற்படவில்லையா?,, என்றனர். அவன் முன்பு நிகழ்ந்தவற்றைக் கூறிப் பயபக்தியுடன் நின்றான். புனிதவதியார் சிவபெருமானை சிந்தையில் நினைத்தவராய் 'இவன் செயல் இதுவானால் அவனுக்காக நான் தாங்கிய இவ்வழகிய வடிவம் மறைவதாக, தேவரீரது திருவடிகளைப் போற்றும் பேய்வடிவம் எனக்கு அமைவதாக'' என்று வேண்டினார். அவ்வாறே அவரின் தசை பொதி உடல் மறைந்து பேயுருவம் வாய்ந்தது, அதுகண்டு அங்கு நின்ற யாவரும் அஞ்சி விலகிச் சென்றனர். அன்றோடு அம்மையாரின் உலகியல் வாழ்வும் ஒழிந்தது தமது பேயுருவத்தோடு நின்று அவர் இறைவன்மீது 'அற்புதத்திருவந்தாதி, என்னும் பிரபந்தத்தைப் பாடி உருகினார். பின்னர் நிறைந்த ஞான முதிர்ச்சியோடு 'திருவிரட்டை மணிமாலையைப் பாடிச் செம்மேனி அம்மனுக்குச் சாத்தியருளினார்.

அம்மையாருக்கு வெள்ளியங்கிரியாகிய கைலாயமலைக்குச் சென்று பெருமானைத் தரிசிக்கும் பேரவா உண்டாயிற்று. அவர் மிக விரைந்து கயிலையை நோக்கிச் செல்லலானார். அவரின் பித்தாய பேய்க் கோலத்தினைக் கண்டவர் யாவரும் அஞ்சி விலகி ஓடினர். "அண்டர் நாயகரான இறைவன் என்னை அறிவார். அவ்வாறாயின் உண்மையை உணராத உலக மக்களுக்கு எனது உரு எவ்வாறாயினும் என்ன?,, என்ற கருத்துடன் வடதிசைத் தேசமெல்லாம் கடந்து கயிலைமால் வரையை அவர் சென்றடைந்தார். அம் மலையினைக் காலால் நடந்து செல்ல அஞ்சித் தலையாலே நடக்கலானார்.

அவர் வந்த காட்சியைக் கயிலையிலே இறைவனுடன் அமர்ந்திருந்த உமாதேவியார் காணலும் அவரின் திருவுள்ளத்திலே அதிசயம் ஏற்பட்டது. "எம்பெருமானே! ஓர் எலும்புடல் இங்கு வருகின்றது. அதன் அன்பு என்னே!,. என்று அவர் திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்ட கயிலாயபதி "உமையே! வருகின்ற இவள் எம்மைப் பேணும் அம்மையென அறிவாயாக'' என்றருளினார். அதுகாலை அம்மையாரும் அவர்களின் சந்நிதி முன்பு வந்து வணங்கி நின்றார். அவரைத் திருக்கடைக்கண் சாத்தியருளிய பெருமான்

"அம்மையே" என்று அழைத்தருளினார். அம்மையாரும் "அப்பா" என்று உரைத்துக் கனிந்தனர்; பணிந்தெழுந்தார். இறைவன் அவரை நோக்கி "உனக்கு வேண்டுவது யாது?" என்று திருவாய் மலர்ந்தருளினார். அம்மையார் "தேவரீரிடம் என்றும் மாறாத அன்பு கொள்ள எனக்கு அருளல் வேண்டும். நான் பிறவாதிருக்கும் வரமுந் தரல் வேண்டும். அவ்வாறு பிறந்தாலும் தேவரீரை மறவாதிருக்க வரம் தரல் வேண்டும். அறக்கடவுளே! நீர் திருநடம் ஆடியருளும் போதெல்லாம் தமது திருவடிக்கீழ் நான் அமர்ந்திருத்தல் வேண்டும்" என்று வேண்டினார். அதனைக் கேட்டருளிய பரமன் அம்மையார் மீது திருக்கடைக்கண் சாத்தியருளி, "நீ தென்றிசையிலேயுள்ள திருப்பழனத்தின்கண் விளங்கும் திருவலங்காட்டுத் திருப்பதிக்குச் செல். அங்கு யாம் ஆடும் திருநடனத்தினை நீ காண்பாய் எப்போதும் ஆனந்தத்தோடு அங்கு நீ என்னைப் பாடித் துதித்திருப்பாய்" என்று அருளினார்.

இறைவனின் திருப்பணிப்பினை ஏற்ற அம்மையார் திருவாலங்காட்டிற்குத் தம் தலையால் நடந்து சென்றார். அங்குப் பெருமானது திருநடனம் கண்டு மகிழ்ந்து திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகத்தினைப் பாடியருளினார். அவரின் பரிபக்குவ நிலைகண்ட ஆடல் அழகன் அவரைத் தமது திருப்பாதத்தின்கீழ் இருத்தி அருளினார் அந்தச் சேவடியின்கீழ் ஈற்றிலாத ஆனந்தமே உடையவராய் அம்மையார் என்றும் இனிது வீற்றிருக்கின்றார்.

# ஆசிரியர் வரலாறு

காரைக்காலம்மையாரின் வரலாறு திருத்தொண்டர் பெரியபுராணம் என்னும் நூலின் ஐந்தாவது சருக்கமான திருநின்ற சருக்கத்திலே நான்காவது புராணமாய் [காரைக்காலம்மையார் புராணம்] அமைந்து விளங்குகின்றது. திருத்தொண்டர் பெரியபுராணத்தின் ஆசிரியர், அருண்மொழித் தேவர் என்னும் இயற்பெயர் பூண்ட சேக்கிழார் சுவாமிகளாவர். சேக்கிழார் என்பது இவர்தம் குலப் பெயர். புலியூர்க் கோட்டத்துக் குன்றைவள நாட்டின் குன்றத்தூரே இவர் தோன்றிய ஊராகும்.

கல்வி, அறிவு, ஆற்றல், சைவ ஒழுக்கம் யாவும் நிரம்பப் பெற்ற சேக்கிழார் அநபாய சோழ மகாராசாவின் அமைச்சராய்ப் பணிபுரிந்தவர். அநபாய சோழ மகாராசா 2 ஆம் குலோத்துங்க சோழரே என்பது வரலாற்றுராய்ச்சியாளர் கொண்ட முடிபு. இவரின் காலம் கி.பி. 1133—1146 ஆகும். ஆக, சேக்கிழாரின் காலமும் பன்னிரண்டாம் நூற்றுண்டின் நடுப்பகுதி எனக் கொள்ளலாம்.

அக்காலத்திலே சமண காவியமான சீவகசிந்தாமணி தமிழ் கூறும் நல்லுலகிலே பெருஞ் சிறப்புப் பெற்றிருந்தது. அநபாய சோழ மகாராசா தொடக்கம் அனைவரும் அந்தக் காப்பியத்தின் இலக்கியச் சுவையினை நயந்து மகிழ்ந்து வந்தனர். 'அதனைக் கற்பதால் இம்மைக்கும் மறுமைக்கும் எவ்வித பயனும் ஏற்படாது' என்ற உண்மையினை உணர்ந்த சேக்கிழார் அரசருக்கு அறிவுரை பகர்ந்தார்: 'எக்காலத்தும் எவர்க்கும் பயன்தர வல்லது சிவகதைதான்' என்றும் அவர் எடுத்துரைத்தார். அதுகேட்ட அரசன் "அவ்வாருன கதையினை நீரே செய்தளியும்" என்று வேண்டிக்கொள்ள அவ் வேண்டுகோளைச் சேக்கிழார் ஏற்றுக்கொண்டார். தமக்குரிய அமைச்சுப் பணியினின்றும் நீங்கிச் சிதம்பரம் சென்று தில்லைநடராசனை வழிபட்டார். அப்பெருமானே 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுக்கப் பெரியபுராணத்தினை விரிவாகப் பாடியருளினுர்.

பெரிய புராணத்துக்கு அடிப்படையாய் அமைந்தவை சுந்தரமூர்த்தி நாயனுர் அருளிய திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியுமாம். சைவ சித்தாந்தம் உரைக்கும் குருலிங்க சங்கம வழிபாடுகளின் இறுதியான சிவனடியார் (சங்கமர்) வழிபாட்டினை வற்புறுத்தும் வகையிலே இந்தியாவின் பல இடங்களிலும் வாழ்ந்த சிவனடியார் அறுபத்துமூவரதும், தொகையடியார் ஒன்பதின்மரதும் வரலாறுகளைச்

சமய மரபும், இலக்கியச் சுவையும் பொருந்த விரித்துரைத்த பெருநூலே திருத்தொண்டர் பெரியபுராணமாகும்.

இதனை யாத்தற்குச் சேக்கிழார் தங்காலச் செவிவழிச் செய்திகள், நாயன்மாரின் வரலாறுகளைச் சுருங்கக் கூறும் தில்லை உலாப் போன்ற நூல்கள், சமண — பௌத்த நூல்கள், கல்வெட்டுக்கள் சிற்ப — ஓவியச் சான்றுகள் ஆகிய பலவற்றையும் பயன் செய்துள்ளார் சாதி, மதம், இனம் என்ற வேறுபாடின்றிச் சிவனடியார் யாவரையும ஒரே நிலையில் வைத்து அவர்தம் சாதனைகளைப் பத்தியுணர்வோடு பாடியவகையிலே சேக்கிழாரின் பெரியபுராணத்திற்கீடுகாண்பது அரிது சேக்கிழார் கையாண்ட வரலாற்றுச் செய்திகள் பலவும் உண்மையானவையே என்று இன்று வரலாற்றாய்வாளர் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். சேக்கிழாருக்கு, இலக்கியப் புலமை, இலக்கணப் புலமை திருமுறைப் புலமை, இசை — நடனம் — மருத்துவம் — வானநூல் முதலிய பல்கலைப் புலமை, சைவசித்தாந்தப் புலமை என்னும் யாவும் அமைந்திருந்தமையைப் பெரிய புராணத்தை ஆராய்ந்த அறிஞர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

சேக்கிழாரின் சிறப்பையும் மேன்மையையும் உணர்ந்து அவர்மீது உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் சுவாமிகள் புராணம் என்ற நூலினைப் பாடியுள்ளார். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தத்தைப் யாத்துள்ளார். ''பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ'' என்ற பிள்ளைத் தமிழ்ச் சொற்றொடர் இரத்தினச் சுருக்கமாகச் சுவாமிகளின் பெருமையைக் காட்டி நிற்கின்றது.

அறுபத்தாறு பாடல்களில் யாக்கப்பட்டுள்ள காரைக்காலம்மையார் புராணத்தின் வாயிலாகச் சேக்கிழார் பெருமானின் புலமை நலங்களை இனிக்காண்போம்.

# காரைக்காலம்மையார் புராணம்

மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி யோங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கானடேறி மண்டுகழிக்
கானன்மிசை உலவுவளம் பொங்குதிருக் காரைக்கால். 1

**பதவுரை**

**மானம் மிகு தருமத்தின் வழிநின்று**- பெருமை மிகுந்த வணிகர்க்குரிய அறத்தின் வழியிலே ஒழுகி, **வாய்மையினில் ஊனம் இல்சீர்ப் பெருவணிகர் குடி**- உண்மையிற் குறைவுபடாத சிறப்புப் பொருந்திய பெரிய வணிகரின் குடும்பங்கள், **துவன்றி ஓங்கும்பதி**- நெருங்கி வாழ்ந்து புகழில் ஓங்கும் பட்டினம், **கூனல் வளை திரைசுமந்து** ஏறி- வளைந்த சங்குகள் கடல் அலைகளினாலே சுமந்து வரப்பட்டுக் கரைக்கண் ஏறி **மண்டுகழிக் கானல் மிசை உலவும்**- நெருங்கி விளங்கும் உவர்நிலச் சோலையின்கண் உலாவித் திரிவதற்கு இடமான, **வளம் பொங்குந் திருக்காரைக்கால்**- செழிப்பு மிகுதியான தெய்வத்தன்மை வாய்ந்த காரைக்கால் ஆகும்.

பொழிப்புரை:

காரைக்காற் பட்டினத்திலே தமக்குரிய அறத்தின் வழுவாதவரும் உண்மை பேசுவதிற் குறைவில்லாத சிறப்பும் பொருந்தியவருமான வணிகரின் குடும்பங்கள் நெருங்கி வாழ்கின்றன. அங்குச் சங்குகள் கடல் அலையினாலே சுமந்து வரப்பட்டுக் கரை சேர்கின்றன. அவை கடற்கரையிலுள்ள உவர் நிலச் சோலையிலே உலாவுகின்றன. இத்தகைய செழிப்பு மிகுதி அந்தப்பட்டினத்திலே காணப்படுகின்றது.

**விளக்கம்:**

வியாபாரம் செய்வதும் ஒரு சமூகப்பணியேயாகும். அதற்கும் ஒரு தருமம் உண்டு. சங்க நூலான பட்டினப்பாலை, காவிரிப்பூம் பட்டினத்து வணிகர்.

> கொள்வதூஉம் மிகைபடாது'
> கொடுப்பதூஉம் குறைபடாது

வணிகம் செய்வதாகக் கூறுவதும் குறிப்பிடத்தக்கது. ஓதுதல் வேள்வி செய்தல், கொடை, உழுவித்தல், பசுக்காத்தல் என்பன வணி

கர்க்கு வகுக்கப்பட்ட ஒழுக்கங்கள், வியாபாரத்தில் உண்மை பேசுவது இன்றியமையாதது என்பதை வற்புறுத்த 'வாய்மையினில் ஊனம் இல்' என்றார். அதுவே பெருவணிகர் பேணவேண்டிய அறம். வணிகர் குடி நெருங்கி இருப்பது கொண்டும், சங்குகள் சுதந்திரமாக உலாவித் திரிவது கொண்டும் செல்வவளமும் செழிப்பும் விளக்கப்பட்டன. மானம் பெருமை, துவன்றி-நெருங்கி, திரு-இங்குதெய்வத்தன்மையைக்குறித்து நின்றது புனிதவதியாரின் திரு அவதாரம் நிகழ்ந்த காரணத்தால், திரு என்ற அடையினை ஆசிரியர் காரைக்காற் பதிக்குச் சேர்த்துக்கொண்டார் கூனல்வளை-கூனலையுடைய வளை என விரிவதால், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

கடலிலே வாழவேண்டிய சங்குகள் கடலை நீங்கித் தமது வாழ்விற்குப் பொருந்தாத உப்பங்கழிச் சோலையில் கடல் நீரோடு வந்து உலாவுகின்றன இறைவனுக்கே ஆட்பட்டு அவன் திருப்பாதங்களிலே இருந்தற்கு உரியரான புனிதவதியார் சில ஆண்டுகள் இவ்வுலக வாழ்க்கையில் இருந்து தமக்குப் பொருந்தாத இல்லறத்தினையும் பேணப்போகின்றார். இவ்விரண்டும் இணைவு இல்லாதவையே என்பதை ஆசிரியர் குறிப்பாகப் பெறவைத்தார். 1

வங்கம்மலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பாற் றிருமடந்தை யவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார் 2

**பதவுரை:**

**வங்கம்மலி கடற்காரைக் காலின்கண்**-மரக்கலன்கள் மலிந்து விளங்கும் கடற்கரைப் பட்டினமான காரைக்காலிலே, **வாழ்வணிகர் தங்கள் குலத் தலைவனார் தனதத்தனார்** வாழ்ந்துவரும் வணிகர்களின் குலத்தலைவரான தனதத்தனரது **தவத்தால் அங்கு அவர்பால்**- முன்னைத் தவத்தின் காரணமாக அவரிடத்தே, **திருமடந்தை அவதரித்தாள் என வந்து** முத்திச் செல்வத்தினை அருளும் பராசக்தியே அவதரித்தது போல (இவ்வுலகின் கண், வந்து, **பொங்கிய பேர் அழகுமிகப் புனிதவதியார் பிறந்தார்** பொங்கி எழுகின்ற பெரிய அழகானது மேலும் மேலும் மிகுதியாய் வளர்வதற்கு இடமாகப் புனிதவதியார் பிறந்தார்.

**பொழிப்புரை:**

மரக்கலங்கள் மிகுதியாக நிறைந்த துறைமுகப்பட்டினம் காரைக்கால். அங்குவாழ்ந்த வணிகரின் குலத்திற்குத் தலைவர் தனதத்தனார். அவர் செய்த முன்னைத்தவம் மிகப்பெரிது. அதனால், பராசத்

தியை ஒத்த புனிதவதியார் அவருக்குத் திருமகளாராய் வந்து அவதரித்தார்.

**விளக்கம்:**

இந்தப் பாடலும் அடுத்துவரும் பாடலும் தவிர்ந்த மற்றும் இடங்களிலே தனதத்தன் ஒருமையிலேயே குறிக்கப்படுவன். இவ்விரண்டிலும் ஆர் என்னும் மரியாதைப் பன்மை அவனுக்கு அளிக்கப்படுகிறது. புனிதவதியாரைப் பெற்ற பெருந்தவத்தினை உடையவன் என்பதால் இப்பாடல்களில் அவனுக்கு மரியாதைப் பன்மை அளிக்கப்பட்ட நயம் சிந்திக்கத்தக்கது. திருமடந்தை மரியாதைப் பன்மைக்கும் அப்பாற்பட்டவளாதலின் அவளுக்கு மரியாதைப் பன்மையை ஆசிரியர் அளிக்கவில்லை. திருமடந்தை என்பது இலட்சுமியையும் குறிக்கும். இல்வாழ்வையும், செல்வத்தையும் துறந்து இறையருட் செல்வத்தையே நாடிச் செல்ல இருப்பவராதலாற் புனிதவதியாரை இலட்சுமிக்கு உவமித்தல் பொருந்தாது. இதுவே திருத்தொண்டர் பெரிய புராணத்திற்கு விளக்கவுரை எழுதிய சிவக்கவிமணி சி கே சுப்பிரமணிய முதலியார் அவர்களின் கருத்துமாகும்.

,'மிக'' என்பது எதிர்காலத்தை உணர்த்திவந்த ,செய,என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.புனிதவதியாரைப் பொறுத்தவரையில் அவர் தசையினாற் பொதியப்பட்ட உடலின் அழகினை வேண்டா என்று துறந்தவர்; இறைவனிடம் வேண்டி எனபுருவான பேய்வடிவினைப் பெற்ற பெருமாட்டி. அவரின் அழகு மேலும் மேலும் வளரப் போகிறது என்பதன் பொருள் அவர் ஆன்மிக அழகில் மேலும் மேலும் வளர்வார் என்பதே. 2

வணிகர்பெருங் குலம் விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரு மொழிபயின்றார். 3

**பதவுரை:**

**வணிகர்பெருங் குலம் விளங்க வந்துபிறந்து அருளியபின்** - வணிகரினது பெரிய குலமானது விளக்கம் பெறும வண்ணம் இவ்வுலகிலே வந்து பிறந்து அருளிய பின்பு, **அணிகிளர் மெல்லடி தளர்வுற்று அசையும் நடைப் பருவத்தே**- அழகு ஒளிர்கின்ற மென்மையான திருப்பாதங்கள் தளரும் வண்ணம் மெல்ல அடிஎடுத்து வைத்து நடக்கின்ற சிறு பருவத்திலே, **பணி அணிவார் கழற்கு அடிமை பழகி**- பாம்பினைச் சூடுபவரான

சிவபெருமானது கழல் அணிந்த திருப்பாதங்களுக்கு அடிமை செய்வதாகிய பழக்கத்தில் ஈடுபட்டு, வரம் பாங்குபெற - வருதலாகிய சிறப்பினைப் பெறுவதற்கு, தணிவு இல்பெரு மனக்காதல் ததும்ப வரும் மொழி பயின்றார் - குறைதல் இல்லாத பெரிய உள்ளம் நிறைஅன்பு நிரம்பப் பெற்றவராய் மழலை மொழி பயிலத் தொடங்கினார்.

பொழிப்பு:

புனிதவதியார் தாம் அவதரித்ததால் வணிகர்குலம் விளக்கம் பெறச் செய்தவராணார் நாட்கள் செல்லலாயின அவர் அழகு வளர்கின்ற தம் மென்மையான திருப்பாதங்களை எடுத்து வைத்து மெல்ல நடக்கும் தளர்நடைப் பருவத்தினை அடைந்தார். அதிகாலை பாம்பினைச் சூடும் சிவபெருமானது திருப்பாதங்களுக்கு அடிமை செய்யும் பழக்கமும், அதனால் ஏற்பட்ட பேரன்பும் உந்த மழலை மொழி பேசத் தொடங்கினார்.

விளக்கம்:

அம்மையார் தமது அற்புதத் திருவந்தாதி முதற்பாடலிலேயே

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"

என்று அருளியுள்ளார் அந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் இப்பாடலைப் புனைந்தமை நயக்கத்தக்கது. சிவனடியார்களின் மொழிகளையும், செயல்களையும் குறிக்குமிடத்து அருளுதல் என்னும் சொல்லைப் பயன்படுத்தும் மரபு சேக்கிழாருக்கு உண்டு அதன் காரணமாகவே பிறந்து அருளியபின் என்றார். கிளர் (மெல்) அடி - ஒளிவிடுகின்ற திருப்பாதம். கிளர்தல் - ஒளிவிடல்.

'பணி அணிவார் கழல்' என்ற சொற்றொடரும் இப்பாடலிற் பொருட்சிறப்புடையதே. அம்மையார் தம் திருப்பாடல்களில் பல இடங்களிற் சிவபெருமானின் பாம்பணிந்த திருக்கோலத்தினை மிக அழகாகப் பாடியுள்ளதனை இச்சொற்றொடர் நினைவூட்டுகின்றது.

அரவம்ஒன்று ஆகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள் - முரணழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஓர்அம்பால் எய்தானே!
பொன்னாரர் மற்றொன்று பூண்

என்ற திருப்பாடலிலே எதிர்மறையாகத் தமதுஉள்ளத்தின் ஆர்வத்தை அம்மையார் புலப்படுத்துகின்றார் ஒன்னாதார் - பகைவர். (தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலியாகிய முப்புரங்களின் தலைவர்கள்) 3

பல்பெருநற் கிளையுவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாஞ்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பால்
அல்கியஅன் புடனழகின் கொழுந்தெழுவ தெனவளர்வார் 4

**பதவுரை:**

**செல்வம் மிகுந் தந்தையார்** - செல்வத்தை மிகுதியாக உடைய தந்தையாரான (அம்மையார் அவதரித்ததாலே செல்வத்தில் மிகுகின்ற தந்தையார் எனினும் பொருந்தும்) தனதத்தனார், **பயில் பருவச்சிறப்பு எல்லாம்**- [சிறுமி ஒருத்தி] வளர்ந்து வரும் பருவங்களிலே செய்யப்படுவனவாகிய சிறப்புகள் யாவற்றையும், **பல்பெருநற் கிளை உவப்ப** - பல பெரிய நல்ல உறவினர் யாவரும் மகிழ்வினை அடையும் வண்ணம், **திருப்பெருகுஞ் செயல் புரிய**- சிறப்புக்கள் யாவும் மேலும் மேலும் பெருகும் படியான சடங்குகளைச் செய்ய, **மல்கு பெரும் பாராட்டின் வளர்கின்றார்** பொருந்திய பெரிய பாராட்டுக்களைப் பெற்று வளர்பவராகிய புனிதவதியார்; **விடையவர்பால்** இடபத்தையுடையவரான சிவபெருமானிடத்தே, **அல்கிய அன்புடன்** மிகுந்த அன்பு உடையவராய் **அழகின் கொழுந்து எழுவது என வளர்வார்** அழகு என்ற கொழுந்தொன்று எழுந்து வளர்வது போல வளரலானார்.

**பொழிப்புரை:**

செல்வரான தனதத்தனார் தம் திருமகளாருக்கு அவரின் ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தார். அவற்றால் உறவினர் யாவரும் மகிழும் நிலை ஏற்பட்டது. புனிதவதியாரின் சிறப்புக்களும் மேலோங்கின. அவரின் உள்ளத்தில் இடபவாகனராகிய இறைவன் மீது அன்பும் வளர்ந்து வருவதாயிற்று. அவரும் அழகுக் கொழுந்து வளர்வது போல வளர்ந்து வந்தார்.

**விளக்கம்:**

புனிதவதியாரின் அழகு, கொழுந்து வளர்வது போல வளர்ந்தது என்றமையால் அவரது உடல் அழகின் வளர்ச்சி பெறப்பட்டது இடபவாகனர் மீது அன்பு வளர்ந்தது என்றமையால் அவர் தம் ஆன்மிக வளர்ச்சி குறிக்கப்பட்டது வளர்கின்றார் என்ற சொல் வளர்கின்றவராய் எனப் பொருள்பட்டுக் குறுகினர் என்னும் வினைமுற்றை அவாவி நின்றமையால், முற்றெச்சம் ஆயிற்று அல்கிய—மிகுதியான என உவம உருபு

வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் றிருவார்த்தை யணையவரு வனபயின்று
தொண்டர்வரிற் றொழுதுதா தியர்போற்றத் துணைமுலைகள்
கொண்டநுசுப்பொதுங்குபதக்கொள்கையினிற்குறுகினார் 5

**பதவுரை:**

**வண்டல் பயில்வன எல்லாம்** - சிறுமிகளின் விளையாட்டான வண்டலாட்டுக்கள் யாவிலும், **வளர்மதியம் புனைந்த சடை அண்டர்பிரான் திருவார்த்தை**- வளர்பிறையினைச்சூடிய சடாமுடியாரும், தேவர் தம் தலைவருமான சிவபிரானுடைய திருவார்த்தைகளே, **அணையவருவன பயின்று**- பெருந்திவரும் வண்ணம் பழகியும் **தொண்டர் வரின்** — சிவனடியார்கள் வருங்காலத்தில், **தொழுது தாதியர் போற்ற**- அவர்களைத்தொழுது தம் தாதியர்கள் பாதுகாத்துக் கொண்டாடும் வகையில் **துணை முலைகள் கொண்ட நுசுப்பு ஒதுங்கும்** — இரு முலைகளையும் (சுமந்து) கொண்டதால் இடை துவளுவதாகிய, **பதக் கொள்கையினிற் குறுகினார்** பருவவயதினையடைந்தார்.

**பொழிப்புரை:**

புனிசவதியார் தம் வயதொத்த தோழியருடன் வண்டலாட்டு முதலிய விளையாட்டுக்களில் ஈடுபடும் பொழுதும், பிறைசூடிய தேவ தேவனின் திருவார்த்தைகளையே பேசுவார். சிவனடிவார் வந்தால் அவர்களைத் தொழுது வணங்குவார். இவரின் இப்பண்புகளைத் தோழியர் பாராட்டிக் கொண்டாடினர், இவ்வாறு இவர் வளர்ந்து கன்னிப் பருவத்தினை அடைந்தார்.

**விளக்கம்:**

புனிதவதியாரின் சிறு பருவ விளையாட்டுக்களும் சிவமயமாகவே விளங்கின, சிவனடியார்களை வழிபடும் நற்பழக்கமானது அந்தச் சிறு வயதிலேயே அவருக்கு ஏற்பட்டுவிட்டது. ,தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது பழமொழி. இல்வாழ்வில் அவர் அமர்ந்த காலத்திலும் சிவனடியாரை வணங்கி வரவேற்று உபசரிப்பதற்கு அவரின் சிறு பருவத்திலேயே வித்திடப்பட்டுவிட்டது என்பதை ஆசிரியர் தொடக்கத்திலேயே கூறுகின்றார். துணை-இரண்டு நுசுப்பு-இடை. பதம்- பருவம்.

நல்லவென உறுப்புநூ லவருரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினால்
இல்இகவாப் பருவத்தில் இவர்கண்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட்பேசுதற்கு தொடங்குவார். 6

**பதவுரை:**

உறுப்பு நூலவர்- உடற்கூறுகள் பற்றிய இலக்கணங்களை அறிந்தோர், நல்ல என உரைக்கும் நலம் நிரம்பி- இவை இவைநல்லன என்று எடுத்துக்கூறுகின்ற நலங்கள் யாவும் நிரம்பப்பெற்று, மல்கு பெரும் வனப்புமீக்கூர-பொருந்திய அழகுகள் யாவும் மிகுதியாய் அமைந்து விளங்க, வரு மாட்சியினால்-வருகின்ற சிறப்பின் காரணமாக, இல் இகவாப் பருவத்தில்-வீட்டினின்றும் வெளிச்செல்லாத பருவமாகிய கன்னிப் பருவத்தில் (அவர் அமைந்த பொழுது), இவர்கள் மரபினுக்கு ஏற்கும்-இவர்களின் வணிக மரபிற்கு பொருந்துவதான, தொல் குலத்து-பழமைவாய்ந்த குலத்திலே தோன்றிய, வணிகர்மகட பேசுதற்குத் தொடங்குவார்-வணிகர்கள், பெண் பேசத் தொடங்குவாராகி,

**பொழிப்புரை:**

உடலின் இலக்கணங்களை அறிந்தோர் எவை எவை உயர்ந்த இனப் பெண்களுக்குரிய நல்லிலக்கணங்களோ அவை யாவும் இவருக்கு அமைந்துள்ளன எனக் கூறுமாறு புனிதவதியார் அழகெல்லாம் நிரம்பிய கன்னியானார். அதனால் அவர் வீட்டினின்றும் வெளிச் செல்லாப் பருவத்திற்கு உரியவரானார். அதுகாலை, பழைமை வாய்ந்த வணிகர் குலத்தினர் மணம் பேசத் தொடங்குவாராகி,

**விளக்கம்:**

இல் இகவாப் பருவம்-வீட்டை விட்டு வெளிச்செல்லாத பருவம், பெண்கள் கன்னிப் பருவத்தை அடைந்ததும் வீட்டிலேயே விவாகம் செய்யும்வரை இருத்தல் வேண்டும். அவர்கள் வெளிச் செல்லக் கூடாது' -என்ற கட்டுப்பாடு அண்மைக்காலம்வரை தமிழ்க் குடும்பங்களிலே நிலவியது. இப்பாடலின் இறுதிச் சீரான தொடங்குவார் என்பது முற்றெச்சம்; தொடங்குவாராகி என நின்று அடுத்துவரும் பாட்டின் வினைமுற்றை அவாவி நின்றது. உறுப்பு நூலவர்-சாமுத்திரிகா லட்சணம் உணர்ந்தவர்.

நீடியசீர்க் கடனாகை நிதிபதியென் றுலகின்கட்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபிற் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரில் வரவிட்டார்

**பதவுரை:**

நீடியசீர்க் கடல்நாகை - நீண்டசிறப்பிற்குரிய கடற்கரைப் பட்டினமாகிய நாகபட்டினத்திலே. நிதிபதி என்று உலகின்கண் பாடுபெறும் புகழ் வணிகன்- நிதிபதி என்ற பெயரால் உலகிலே பெருமை பெறும்

புகழ் வாய்ந்த வணிகன் ஒருவனின் குலமைந்தனுக்கு - குலப் புதல்வனுக்கு தேடவரும் இருமரபிற் சேயிழையை- தேடிச்சென்று பெறத்தக்க சிறப்பு வாய்ந்த மரபிலே தோன்றிய நல்லாபரணம் அணிந்த புனிதவதியாரை, மகட்பேச- பெண்பேச, மாடம் மலி காரைக்கால் வளநகரில் மாடங்கள் நிறைந்த காரைக்கால் என்னும் வளம்பொருந்திய நகரிடத்தே, வரவிட்டார் பெரியோர்களை அனுப்பிவைத்தனர்.

பொழிப்புரை:

நீடிய சிறப்புடைய நாகபட்டினத்திலே நிதிபதி என்று புகழ் வாய்ந்த வணிகன் வாழ்ந்து வந்தான். அவனின் குலமைந்தனுக்குத் தேடிச் சென்று பெறுதற்குரிய நன்மரபினரான புனிதவதியாரைப் பெண்பேசி, குலவணிகர் பெரியோரை அனுப்பி வைத்தனர்.

விளக்கம்:

அக்காலத்திலே உயர்ந்தகுலத்தினர் தமக்குச்சமமான குலத்திலே பெண்பேசிச் செல்லும் வழக்கமும், அவ்வாறு பெண்பேச அனுப்புவோர் பெரியோராய் அமைதலும் மரபாகும். புனிதவதியாரின் குலச் சிறப்பு 'தேடவரும் இருமரபு' என்ற சொற்றொடராலே பெறப்பட்டது. சேயிழை (சேய்மை-இழை) பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. செம்மையான ஆபரணம் அணிந்த புனிதவதியார் என விரிந்தது.

வந்தமூ தறிவோர்கண் மணங்குறித்த மனைபுகுந்து
தந்தையாந் தனதத்தன் றனைநேர்ந்து நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுற்கேற்கு முறைமைமணம் புரிகென்றார் 8

பதவுரை:

வந்தமூ தறிவோர்கள் - (அவ்வாறு அனுப்பப்பட்டு) வந்த முதிர்ந்த அறிவாளரான பெரியோர்கள், மணம் குறித்தமனைபுகுந்து - மணம் பேசுதற்குப் பெண்ணைக் குறித்த அந்த வீட்டின் கண்ணே சென்று தந்தையாம் தனதத்தன் தனை நேர்ந்து- (புனிதவதியாரின்) தகப்பனான தனதத்தனை நேரிற்கண்டு, நீ பயந்த பைந்தொடியை - நீ பெற்ற பசிய ஆபரணங்கள் அணிந்த மகளை, நிதிபதி மைந்தன் பரமதத்தனுக்கு- நிதிபதியின் மகனான பரமதத்தனுக்கு, முந்தை மரபினுக்கு ஏற்கும் முறைமை- முன்னோர் வகுத்துள்ள மரபினுக்குகந்த முறையிலே, மணம் புரிக என்றார் - மணம் புரிந்து வைப்பாயாக என்று கூறினர்.

**பொழிப்புரை:**

மணம் பேச அனுப்பப்பட்ட அறிவுசான்ற பெரியோர்கள் தனதத்தனின் வீட்டிற்புகுந்து அவனை நேரிற் கண்டனர். 'நீ பெற்ற உன் மகளை நிதிபதியின் மகனான பரமதத்தனுக்கு மணம் முடித்து வைப்பாயாக'' என்று கேட்டனர்.

**விளக்கம்:**

மணவினைக்குப்பெரியோரின்முடிவேமுடிவுஎன்பது இப்பாடலாலே பெறப்படுகின்றது அவர்கள் வேறு எதுவும்பேசாது ''உன் மகளுக்கு நிதிபதியின் மகனை மணமுடித்து வைப்பாயாக'' என்று கட்டளை இடுவது போன்று கேட்பதிலிருந்து மூத்தோருக்கு அந்நாளில் இருந்த மதிப்பும் நன்கு புலனாகின்றது,இப்பாடலில் வரும் பைந்தொடி என்ற தொடரும் பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையேயாகும் புரிக என்ற வியங்கோள் வினைமுற்றின் ஈற்று அகரம் கெட்டது. 8

மற்றவனும் முறைமையினான் மணமிசைந்து செலவிடச்சென்
றற்றவர்க ளுரைகேட்ட நிதிபதியும் முயாசிறப்புப்
பெற்றனன்போ லுவந்துதனிப் பெருமகற்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்பூண்டான்

**பதவுரை:**

**மற்று அவனும் முறைமையினால் மணம் இசைந்து செலவிட**- மணம் செய்க, என்ற வேண்டுகோளினைக் கேட்ட தனதத்தனும் அது எவ்வகையினும் மிறைமையானதே என்பதை உணர்ந்தவனாய்த் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்து அம் மூத்தோர்களைச் செல்லவிட்டதும், **சென்று உற்று** [அவர்கள் மீண்டும் தனபதியைச்] சென்றடைந்து, **உரை கேட்ட நிதிபதியும்**- மணமிசைவுச் செய்தியைக் கூறக்கேட்ட நிதிபதியும் **உயர் சிறப்புப் பெற்றவன்போல் உவந்து**— உயர்ந்த மதிப்பினை அடைந்தவன் போல மகிழ்ந்து, **தனிப்பெரு மகற்கு**- தன் ஒப்பற்ற மகனுக்கு **திருமலியும் சுற்றமுடன்** - செல்வம்மிகுதியாய் உடையஉறவினருடன் கூடி **களி கூர்ந்து** - மகிழ்ச்சியிற் சிறந்தவனாய் **வதுவை வினைத் தொழில் பூண்டான்** திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்யலானான்.

**பொழிப்புரை:**

தனதத்தன் மணத்திற்கு இசைந்த செய்தியை மூதறிஞர் வந்து நிதிபதிக்குக் கூறினர். அவன் உயர்ந்த சிறப்பினை அடைந்தவன் போல மகிழ்ந்தான். தன் மகனுக்கு மணஞ்செய்வதற்கான ஆயத்தங்களைத் தன் சுற்றத்தாரோடு கூடி மிக்க மகிழ்வோடு செய்யத் தொடங்கினான்.

**விளக்கம்:**

நிதிபதி உயர் சிறப்புப் பெற்றவன் போல மகிழ்ந்தான் என்பதாலும், சுற்றத்தாருடன் மகிழ்ச்சி கொண்டாடினன் என்பதாலும் அவனும் அவன் உறவினரும் தனதத்தன் குடும்பத்திலே பெண்கொள்வதை அரிய பேறு எனக் கருதினர் என்பது பெறப்படுகின்றது. இனி வரப் போகும் நிகழ்ச்சிகளை நோக்கும்போது புனிதவதியாரின் குடும்பத்தின் சிறப்பளவு பரமதத்தனின் குடும்பச் சிறப்பு அமையவில்லை என்று கொள்ளல் நேரும். இதனை வருமிடத்து விளக்குவோம். தனிப் பெருமகற்கு என்பதற்கு ஒரே பெரிய மகன் எனவும் பொருள் கொள்ளலாம். அஃதாவது 'ஏக புதல்வன்' என்பது. உயர் சிறப்புப் பெறறனன் போல் என்பதற்கு மண இசைவு கேட்டவுடன் மணமே நிகழ்ந்து விட்டதுபோல'' எனச் சிவக்கவிமணி பொருள் கொள்வர். ''பெறுபவன் போல்'' என்று கூறவேண்டிய இடத்திற் ''பெற்றவன்போல்'' எனக்கூறியது விரைவுபற்றி வந்த கால வழுவமைதி. 9

மணமிசைந்த நாளோலை செலவிட்டு மங்கலநாள்
அணைய,வது வைத்தொழில்க ளானவெலா மமைவித்தே
யிணரலங்கன் மைந்தனையும் மணவணியி னெழில்விளக்கிப்
பணைமுரச மெழுந்தார்ப்பக் காரைக்கால் மனைபுகுந்தார் 10

**பதவுரை**

**மணம் இசைந்த நாள் ஓலை செலவிட்டு**– தனதத்தன் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டமையால், திருமண ஓலையினை (உற்றார் உறவினர் அனைவர்க்கும்) அனுப்பி, **மங்கல நாள் அணைய**– திருமணத்திற்கென அமைந்த மங்கலநாள் கூட, **வதுவைத் தொழில்கள் ஆனஎலாம் அமைவித்து**- திருமணச் சடங்குகளுக்கு உரிய பொருள்கள் யாவற்றையும் ஒழுங்கு செய்து வைத்து, **இணர் அலங்கல் மைந்தனையும்**– கொத்துக் கொத்தான மலர்களால் அமைந்த மாலையைச் சூடிய மகனையும், **மண அணியில் எழில் விளக்கி**- திருமண ஆடை அணிகலன்களால் அலங்கரித்து அவனது அழகினை விளக்கமுறச் செய்து, **பணைமுரசம் எழுந்து ஆர்ப்ப**- கூட்டமாக மணமுரசங்கள் எழுச்சியுடன் ஒலித்திட, **காரைக்காற்பதி புகுந்தார்**—காரைக்கால் நகரத்தினைச் சென்றடைந்தனர்.

**பொழிப்புரை:**

தனதத்தன் திருமணத்திற்கு இசைந்தமையால் மணவோலை உற்றார் உறவினர்களுக்கு அனுப்பப்பட்டது. திருமணத்திற்கு குறித்த மங்கலநாளும் வந்தது. மணமகன் வீட்டார் மணவினைக்கு வேண்டிய சாமக்கிரியைகள் [சடங்குக்கான பொருட்கள்] யாவற்றையும் ஒழுங்கு

செய்து எடுத்துக்கொண்டனர். மணமகனையும் ஆடை அணிகலன்களால் அழகு செய்தனர். அதனால் அவனது அழகு விளக்கமுற்றது. கூட்டமாக மணமுரசங்கள் ஆர்த்தன. இவ்வாறு அவர்கள் காரைக்கால் பட்டினத்தை வந்தடைந்தனர்.

**விளக்கம்:**

'மணம் இசைந்த நாள் ஓலை செலவிட்டு' என்பதற்குத் தனதத்தன் திருமணத்திற்கு இசைந்த அந்த நாளிலேயே, ஓலை அனுப்பிச் சுற்றத்தவரை நிதிபதி அழைத்தான் எனவும் பொருள் கொள்ளலாம். அது இத் திருமணத்தில் அவன் கொண்டிருந்த ஆர்வத்தையும், அவசரத்தையும் காட்டுவதாய் அமையும். பருவந்தோறும் எழில்வளரப் பெற்ற பாவை புனிதவதியார். ஆனால் அவருக்கு மணவாளனாய் வாய்ந்தவனோ ஆடை அணிகலன்களால் எழில் விளக்கம் பெறுகின்றான். இவ்வாறு சேக்கிழார் உரைப்பதற்குக் காரணம் குணநலத்தால்மட்டுமன்றி, எழில நலத்தாலும் பரமதத்தன் புனிதவதியாருக்கு ஈடாகான் என்று உணர்த்துவதற்குப்போலும். இணர்—பூங்கொத்து. நாளோலை—திருமண நாளைக் குறிக்கும் ஓலை. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை 10

அளியிடைதார்த் தனதத்த னணிமாடத் துட்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே செயன்முறைமைசெய்தமைத்துத்
தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்கு
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள். 11

**பதவுரை:**

அளி யிடை தார்த் தனதத்தன் அணிமாடத்து உட்புகுந்து - வண்டுகள் மொய்க்கும்மாலையினை அணிந்த தனதத்தனது அலங்காரமான வீட்டினுள்ளே (மணமகனும் உறவினரும்) புகுந்து, தெளிதரு நூல் விதி வழியே செயன் முறைமை செய்து அமைத்து- தெளிவு பொருந்திய வேத நூல் விதிப்படி கிரியைகளை முறைமையாகச் செய்தமைத்து, தளிர் அடி மென்நகை மயிலை- தளிர்போலும் மென்மையான பாதங்களும் மென்மையான முறுவலும் பொருந்திய மயில் போலுஞ் சாயலையுடைய புனிதவதியாரை, தாது அவிழ்தார்க் காளைக்கு-இதழ்விரியும் மலர்மாலை அணிந்த இடபம்போலும் பரமதத்தனுக்கு, களி மகிழ்சுற்றம் போற்றக் கலியாணம் செய்தார்கள்- களிப்பும், மகிழ்வும் கொண்ட உறவினர் போற்றுதல் செய்யப்பெரியோர், இருவருக்கும் திருமணத்தினைச் செய்துவைத்தனர்.

**பொழிப்புரை:**

மலர்மாலை அணிந்த தனதத்தனது அலங்காரம் பொருந்திய ... டினுள் மணமகனும் உறவினரும் புகுந்தனர். வேதநூல் முறைப்

படி செய்ய வேண்டிய சடங்குகள் யாவும் செய்யப்பட்டன. களிப்பும் மகிழ்ச்சியும் கொண்ட உறவினர் யாவரும் போற்றும் வண்ணம் மயில்போலும் சாயலரான புனிதவதியாரைக் காளைபோன்ற பரம தத்தனுக்குப் பெரியோர் மணம்முடித்து வைத்தார்கள்.

**விளக்கம்:**

இப்பாடலிலே புனிதவதியார் மயிலுக்கும், பரமதத்தன் காளைக்கும் ஒப்பிடப்படுகின்றனர். மணமகளின் உயர்வும், மணமகனுக்கு அவரளவு உயர்வு இன்மையும் குறிப்பாகப் புலப்படுத்தப்படுகின்றன. காளைக்கு மயிலின் அருமையும், பெருமையும் புலனுகா. பரமதத்தனும் தொடக்கத்தில் தன் மனைவியாரின் உயர்வை அறியாதவனுகவன்றே நடந்துகொள்கின்றுன்! களிர் அடி-உவமைத்தொகை. மயிலும், காளையும் உவமை

யாகு பெயர்கள் கலியாணம் செய்தார்கள் என்ற பயனிலைக்குப் பெரியோர் என்னும் சொல்லை எழுவாயாக வருவித்துக் கொள்க. களி மகிழ் உம்மைத் தொகை. 'களிப்பும் மகிழ்ச்சியும்' என விரியும்

களி மகிழ் சுற்றம் என்ற சொற்றொடரிற் களி என்பதற்குக் கொண்டாட்டங்களிற் கலந்து ஏற்பட்ட களிப்பு என்றும் 'மகிழ்' என்பதற்கு மணமக்களின் சிறப்பு நோக்கி அன்புள்ளங்களில் உண்டான ஆனந்தம் என்றும் பொருள் கொள்வது சிறப்பு. களி என்பது களியாட்டு என விரித்துப் பொருள் கொள்ளப்பட்டது. களியாட்டு-இன்ப நுகர்ச்சியில் ஈடுபடுவதால் ஏற்படும் மன உடல் எழுச்சி, கம்பராமாயாணத்தில் வரும் 'களியாட்டுப் படலம்' என்பதை நோக்குக. 11

மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாள்
தங்கள்குடிக் கரும்புதல்வி யாதலினுற் றனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கணமர்ந் தினிதிருக்க வணிமாட மருங்கமைத்தான் 12

**பதவுரை:**

**மங்கலமாம் மணவினைகள் முடித்து இயல்பின் வைகும் நாள்**- மங்கலமான திருமணச் சடங்குகள் யாவையும் முடித்துப் பின் மணமக்கள் இருவரும் தமது இல்வாழ்வின் இயல்பிற்கேற்ப இன்பமாய் வாழ்ந்து வரும் நாளிலே; **தங்கள் குடிக்கு அரும் புதல்வி ஆதலினுல்**. தமதுவிருப்பத்திற்கு அருமையான ஒரே புதல்வியாய்ப் புனிதவதியார் விளங்கியமையால், **தனதத்தன்**- தனதத்தனெனவன் **பொங்கொலி நீர்நாகையினிற் போகாமே**- புனிதவதியார் மிகுந்து ஒலிக்கின்றகடல் நீராற்சூழப்பட்ட நாகபட்டினத்துக்குச் செல்லாத வண்ணம் **கணவனுடன் அங்கண்**

அமர்ந்து இனிது இருக்க- கணவனோடு காரைக்காற் பட்டினத்திலேயே இன்பமாய் வாழ்ந்திருக்க, மருங்கு அணிமாடம் அமைத்தான் - தனது மனைவியின் அருகிலேயே அழகிய இல்லம் ஒன்று அமைத்தான்.

**பொழிப்புரை:**

மணவினைக் கிரியைகள் நிறைவுற்றன. மணமகனும், மணமகளும் இல்வாழ்வின்பத்திலே திளைத்திருந்தனர். இவ்வாறு சிலநாட்கள் சென்றன. தனதத்தன், தமது குடும்பத்திற்குப் புனிதவதியார் ஒரே செல்வ மகளாராதலால் அவரை நாகபட்டினத்திற்குச் செல்ல விடாது, கணவனோடு காரைக்காலிலேயே இனிது வாழ்ந்திருக்கச் செய்வதற்கு விரும்பினான். அதற்கெனத் தன் இல்லத்திற்கு அருகிலேயே அழகான வீடொன்றினைக் கட்டினன்.

**விளக்கம்**

புனிதவதியார் தனதத்தனுக்கு மட்டும் அல்லர், அவன் குடும்பத்தில் உள்ளவர் யாவருக்குமே செல்வ மகளார் என்பதைக் குறிக்க ஆசிரியர் 'தங்கள் குடிக்கு' எனப் பன்மையிற் கூறியுள்ளார். நாகபட்டினம் தொலைவில் உள்ளது என்பதைப் 'பொங்கொலிநீர் நாகை' எனக் குறித்த நுட்பம் சிந்திக்கத்தக்கது. தனதத்தன் தன் மகளார் மீது கொண்ட அன்பின் அளவும் அவனது செல்வச் சிறப்பும் புலனாகும் வண்ணம் மருங்கு (அருகில்) அணிமாடம் (அழகிய மனை) எனக் கூறியுள்ளமையும் நயம் மிக்கதே. 12

மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பிறனங்
கொடுத்ததற்பின்
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பின் நிதிபதியின் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினாற் றங்குமனை வளம்பெருக்கி
மிகப் புரியுங் கொள்கையினின் மேம்படுதல் மேவினான். 13

**பதவுரை**

மகட்கொடையின் மகிழ்சிறக்கும் - மகளைக் கொடுத்த கொடையினால் (பரமதத்தனுக்கு) ஏற்பட்ட மகிழ்ச்சி மேலும் சிறக்கும்வண்ணம், வரம்பு இல் தனம் கொடுத்து அதன்பின் -எல்லை இல்லாத செல்வத்தையும் தனதத்தன் கொடுத்ததன் பின்பு. நிகர்ப்பு அரிய பெருஞ் சிறப்பின் நிதிபதியின் குலமகனும்- இணை கூறுதற்கு இயலாத பெரிய சிறப்பினையுடைய நிதிபதியின் குலமகனும், தகைப்பு இல் பெருங் காதலினால் தங்கும் மனை வளம் பெருக்கி- அளவுஇல்லாதபெரிய விருப்பம் உடையவனாய்த் தான் தங்கியிருக்கும் இல்லத்தின் செல்வவளத்தினை மேலும் பெருக்கி, மிகப் புரியும் கொள்கையினில்-மிகுதியாகச் செய்யும் தனது கோட்பாட்டினால், மேம்படுதல் மேவினான்-செல்வத்திலே மேலும் உயர்வடையலானான்.

**பொழிப்புரை:**

தன் மகளைக் கொடுத்ததனாற் பரமதத்தனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை மேலும் சிறக்கச் செய்யத் தனதத்தன் அளவில்லாத செல்வத்தினையும் மருமகனுக்கு வழங்கினான் ஒப்பில்லாத சிறப்புடைய நிதிபதியின் குலமகனும் அவற்றை மேலும் கூட்டும் விருப்பம் உடையவனும் தான் தங்கியிருந்த இல்லத்தின் செல்வத்தை மேலும் பெருக்கும் கொள்கை உடையவனும் செல்வத்தில் மேம்படும் முயற்சியினை மேற்கொண்டான்.

**விளக்கம்:**

'உள்ளது சிதைப்போர் உளர் எனப்படார்' என்ற பொன்மொழியே வணிகரின் இலட்சிய மந்திரமாகும். செல்வத்தைப் பெருக்குவதிலே நிதிபதியின் வணிக குலத்திற்குப் பொருத்தமான மகனாகவே பரமதத்தன் விளக்கினான் என்பதைக் 'குலமகன்' என்ற சொற்றொடரால் ஆசிரியர் பெற வைத்தார். காதல் என்பதற்கு விருப்பம் என்று பொருள் கூறியது அவருக்குச் செல்வத்தில் இருந்த மிகுதியான அவாவினைப் புலப்படுத்துவதற்கேயாகும்.

பரமதத்தன் தன் மனைவியாரின் மனையிலே நிலையாக இருக்கப் போவதில்லை. அவன் விரைவில் அதனை நீங்கிச் செல்வான் என்பதைக் குறிப்பாகக் காட்ட ஆசிரியர் 'தங்கும் மனை' எனக் கூறியுள்ளார் இது மிகவும் நயம் நிறைந்த ஒரு சொற்றொடர். கொள்கை என்பது வணிகரின் வியாபார லட்சியத்தினைக் குறிக்க வந்தது 13

ஆங்கவன்ற னில்வாழ்க்கை யருந்துணையா யமர்கின்ற
பூங்குழலா ரிவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியவன் புறுகாத லொழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழா மையிற்பயில்வார்

**பதவுரை:**

ஆங்கு அவன்தன் இல்வாழ்க்கை அருந்துணையாய்- அந்த இல்லத்திலே அவனது இல்வாழ்க்கைக்கு அரிய துணைவியாய், அமர்கின்ற பூங்குழலார் இவர்தாமும்- அமர்ந்து வாழ்கின்ற பூக்களைச் சூடிய கூந்தலினை உடையவரான அந்தப்புனிதவதியாரும், பொருவிடையார் திருவடிக்கீழ்- பொருதலைச் செய்கின்ற இடபத்தை வாகனமாகக் கொண்ட சிவபிரானுடைய திருப்பாதங்களினிடத்தே, ஓங்கிய அன்பு உறுகாதல் - மிகுதியான அன்பினால் ஏற்படும் நேயமானது, ஒழிவு இன்றி மிகப்பெருக-ஒழிதலே இல்லாது மிகுதியாகப் பெருக, பாங்கில் வரும் மனை அறத்தின்- சிறப்புற்று வருவ

தாகிய இல்லறத்தின், பண்பு வழாமையிற் பயில்வார் - பண்பு பிறழாத வகையில் ஒழுகலானார்.

**பொழிப்புரை:**

தம் தந்தையார் அமைத்துத் தந்த அந்த இல்லத்திலே புனிதவதியார் தம் கணவனான பரமதத்தனின் இல்வாழ்விற்கு அரிய துணையாய் வாழ்ந்து வந்தார். அவரின் உள்ளத்திலே இடப வாகனரான சிவபிரான் மீது மிகுதியான அன்பினால் நேயம் ஏற்பட்டு இடையீடின்றி வளர்ந்து வந்தது. இருப்பினும் அவர் சிறந்த இல்லறப் பண்பு பிறழாது ஒழுகிவந்தார்.

**விளக்கம்:**

இதற்கு முன்னுள்ள பாடலிலே பரமதத்தனின் உலகியற் செல்வத்தைப் பெருக்கும் பெருவிருப்பம் எடுத்துக் கூறப்பட்டது. இப்பாடலில் புனிதவதியாரது இறை நேயத்தின் பெருக்கம் விளக்கப்பட்டது. இருவரதும் இலட்சியங்களிலே பெரும் முரண்பாடு உள்ளமையை ஆசிரியர் மிகச் சுருங்கிய வகையிலே இவ்விருபாடல்களிலும் எடுத்துக் காட்டுகின்றார். இம்முரண்பாட்டிற்கு இடையிலே அமைதி கண்டு, தமது கடமையிலே வழுவாது ஒழுகும் புனிதவதியாரின் உயர் பண்பை எமக்கு வியப்பை ஏற்படுத்தும் வகையிலே இப்பாடலில் அவர் காட்டியுள்ளார். இதன் மூலம் ஆசிரியரின் ஆழ்ந்த புலமைத் திறமும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறப்பும் புலனாகின்றன 14

நம்பர்அடி யாரணைந்தால் நல்லதிரு வமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியுஞ் செழுந்துகிலும் முதலான
தம்பரிவி னாலவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர் பிரான் திருவடிக்கீ ழுணர்வுமிக வொழுகுநாள். 15

**பதவுரை:**

நம்பர் அடியார் அணைந்தால்-சிவபெருமானின் அடியவர் இல்லத்திற்கு எழுந்தருளினால், நல்லதிரு அமுது அளித்தும்-நல்ல சுவை பொருந்திய உணவினைக் கொடுத்தும், செம்பொன்னும, நவமணியும், செழுந்துகிலும்-சிறந்த பொன்னையும், ஒன்பது வகையான இரத்தினங்களையும், உயர்ந்த ஆடைகளையும், தம் பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும்—தம் உள்ளத்தே எழும் அன்பு காரணமாக அவர்களின் தகுதிப்பாட்டினை அறிந்து அவர் அவர்கட்கு வேண்டுவனவற்றைக் கொடுத்தும், உம்பர் பிரான் திருவடிக்கீழ் தேவர்களின் தலைவரான சிவபெருமானின் திருப்பாதங்களிலே, உணர்வு மிக ஒழுகும்நாள் - பத்தியுணர்வு மிகப் பெற்றவராய் ஒழுகிவரும் நாளிலே.

**பொழிப்புரை:**

சிவபெருமானின் அடியவர் தமது இல்லத்திற்கு எழுந்தருளினாற் புனிதவதியார் அவர்களுக்கு நல்ல சுவைநிறை உணவினை அளித்து உபசரிப்பார். பொன், நவரத்தினம், உயர்ந்த ஆடை ஆகியவற்றை அவரவர் தகுதிப்பாட்டினை அறிந்து அன்போடு வழங்குவர். இவற றோடு தேவதேவனை சிவபிரான் மீது பக்தியுணர்வு மிகப் பெற்று அவர் ஒழுகிவரும் நாளிலே,

**விளக்கம்:**

இப்பாடலும் அடுத்துவரும் பாடலும் ஒருவினை கொண்டு முடிவ தால் இவை குளகச் செய்யுள் எனப்படும். புனிதவதியாரது இல்வாழ்க்கையின் அடிப்படை நோக்கம் அடியாரைப் பேணுதலே என்பதும் இறையடி மறவாது வழிபடுதலே என்பதும் இந்தப் பாட லாலே பெறப்பட்டன. அணைந்தால் எனக்கூறியதன் வாயிலாக, "அம்மையின் கணவன் சிவனடித் தொழும்பு பூண்டவன் அல்லன் என் னும் உண்மை பெறப்படும்" எனச் சிவக்கவிமணி உரைப்பார். தகுதி யின் வேண்டுவ கொடுத்தும் என்றதனால் அவர் அவர்க்கு எவை எவை தேவையோ அவற்றையெல்லாம் வரையாது வழங்கியும் எனப் பொருள் கொள்ளப்படும். சிவனடியாரின் ஆரம் உருத்ராக்க கண்டிகையா யும் அணியும் ஆடை கந்தையாயும் இருப்பதே இயல்பு. அவர்களுக் குப் பொன், மணி ஆகியவற்றால் ஆகும் பயன் என்ன? அவர்கள் ஓட் டினையும் பொன்னையும் சமமாக மதிப்பவர் அல்லரோ, எனின் கோயில் கட்டுதற்கும் மூர்த்திகளுக்கு வேண்டும் அணிகலன்களை அமைத்தற்கும் அவர்கள் பொன்னையும், மணியையும் வேண்டி நிற்பார். அதுகாலை அவர் களின் உண்மைத் தேவையை, (தகுதியை) உணர்ந்து புனிதவதியார் வேண்டுவன அளிப்பர் என்பது. 15

பாங்குடைய நெறியின்கட் பயில்பரம தத்தனுக்கு
மாங்கனிக ளோரிரண்டு வந்தணைந்தார் சிலர்கொடுப்ப
ஆங்கவைதான் முன்வாங்கி யவர்வேண்டும் குறையளித்தே
ஈங்கிவற்றை யில்லத்துக் கொடுக்கவென வியம்பினான். 16

**பதவுரை:**

பாங்கு உடைய நெறியின்கட் பயில்பரம தத்தனுக்கு - தனது வணிக தருமத்திற்கு உரித்தான வழியிலே ஒழுகிவரும் பரமதத்தனுக்கு, ஓர் இரண்டு மாங்கனிகள் வந்து அணைந்தார் சிலர் கொடுப்ப- ஒப்பற்ற இரண்டு மாங்கனிகளை அவனிடம் வந்து சேர்ந்தவர்களான சிலர் கையுறையாகக் கொடுக்க, ஆங்கு தான் அவை முன்வாங்கி-அவ்விடத்தே தான் அவற்றை

முதலில் வாங்கிக்கொண்டு, அவர் வேண்டும் குறை அளித்து - அவர்கள் (செய்யுமாறு வேண்டியவற்றைச் செய்தவனால்) மனக்குறையினைப் போக்கி ஈங்கு இவற்றை இல்லத்துக் கொடுக்க என இயம்பினான் —"இந்த மாங்கனிகளை எனது இல்லத்திலே கொடும்" எனக் கூறினான்.

**பொழிப்புரை:**

தனது வணிக தருமத்திலே பரமதத்தன் தவறாது ஒழுகிவந்தான். ஒரு நாள் அவனிடம் வந்து தமக்குள்ள ஒரு குறையைக் கூறி அதனை நீக்க எண்ணிய சிலர், அவனுக்குக் கையுறையாய் ஒப்பில்லாத மாங்கனிகள் இரண்டை அளித்தனர். அவற்றை ஏற்ற அவன் அவர்களின் மனக்குறையைப் போக்கினான். பின்பு அவர்கள் தந்த மாங்கனியைத் தனது இல்லத்திற் சேர்க்குமாறு அவர்களுக்குக் கூறினான்.

**விளக்கம்:**

ஓர்இரண்டு மாங்கனிகள் என்ற சொற்றொடரில் ஓர் என்பதுஒப்பற்ற என்னும் பொருளில் வந்தது. இக்காலத்திற் போலவே அந்தக் காலத்திலும்உதவியை நாடிவருவோர் உதவிசெய்வாருக்குக் கையுறை கொண்டு செல்லும் வழக்கம் இருந்தது என்பதை இப்பாடலால் அறிந்து கொள்ளலாம். பரமதத்தன் உதவி செய்யும் பொழுதும் பயனை எதிர் பார்த்தே செய்பவன் என்பதை அவன் மாங்கனிகளை முன் வாங்கிய பின்னரே வந்தவர்களின் குறையினை முடித்தான் என்றதிலிருந்து ஆசிரியர் பெறவைக்கின்றார். வந்தவர் அவனது செல்வத் தகுதிக்கு இணையானவரல்லர் என்பதை அவன் அவர்கள் மூலமே மாங்கனிகளை வீட்டிற்கு அனுப்பி வைத்தமையால் அறியலாம். பதினான்காவது பாடலிலே புனிதவதியார் பாங்கில்வரும் மனையறத்தின் பண்பு வழுவாது ஒழுகினார்' எனக்குறித்த சேக்கிழார் இப்பாடலிலே, 'பாங்குடைய நெறியின் கட்பயில் பரமதத்தன்' என்று பரமதத்தனின் இயல்பையும் அதே சொற்றொடரால் அறிமுகம் செய்கின்றார். அடியவர்கட்கு அவர் இயல்பு அறிந்து, பொன்னையும் நவமணிகளையும் வரையாது கொடுப்பது புனிதவதியாரின் பாங்கு. குறை நீக்க நாடி வருபவர்களிடத்தும் சிறியதொரு கையுறையினையாவது எதிர்பார்த்து அதனைப் பெற்ற பின்னர்தான் குறையைப்போக்குவது பரமதத்தனின் பாங்கு எத்தகைய முரண்பாடு இது! 16

கணவன்றான் வரவிடுத்த கனியிரண்டும் கைக்கொண்டு
மணமலியு மலர்க்கூந்தன் மாதரார் வைத்ததற்பின்
பணவரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினால் ஒருவர்மனை யுட்புகுந்தார். 17

**பதவுரை:**

**கணவன் வரவிஉத்த கனியிரண்டும்**- கணவனுன பரமதத்தன் அனுப்பிய இருமாங்கனிகளையும், **மணம்மலியும் மலர்க்கூந்தல் மாதரார்**-மணம் நிறைந்த மலர் சூடிய கூந்தலையுடைய புனிதவதியார், **வைத்து அதற்பின்**- சேமமாக வைத்ததன் பின்னர், **பண அரவம் புனைந்து அருளும் பரமனுர் திருத்தொண்டர்**- படத்தோடு கூடிய பாம்பினைச் சூடியருளும் சிவபெருமானுக்குத்தொண்டராம்சிவனடியாரான, **ஒருவர்**-ஒப்பற்றவர் **உணவின்மிகு வேட்கையினுல்**— உணவின்மீது பெருவிருப்புக் கொண்டவராய் (பசியுடையவராய்), **உட்புகுந்தார்** - மனையினுட் புகுந்தார்.

**பொழிப்புரை:**

கணவன் அனுப்பிய மாங்கனி இரண்டினையும் புனிதவதியார் அங்கு ஒருபால் வைத்தார். சிறிது போதில் ஒப்பற்ற சிவனடியார் ஒருவர் உணவில் வேட்கை உடையவராய் அந்த மனைக்கு வந்தார்

**விளக்கம்:**

ஒருவர் என்ற சொல்லுக்கு ஒப்பற்றவர் என்று பொருள் கொள்வதே சிறப்பு! இறைவன் தொண்டரின் உள்ளத்துள் ஒடுக்கமாதலாலும்' சிவனடியார் பெருமையை உரைக்கும் நோக்கமாகவே சேக்கிழார் திருத்தொண்டர் பெரியபுராணத்தினை இயற்றியருளியதாலும் அவ்வாறு பொருள் கொள்ளப்பட்டது. பாம்பு அணிந்த திருக்கோலத்திலே சிவபெருமானைப் பல இடத்திலும் பாடி மகிழ்ந்த அம்மையாரின் இல்லம் வந்த அடியவரை, அத்தகைய இறைவனின் அடியார் என்று சொல்லும் திறம் இன்பந்தருவதாய் உள்ளது. 17

வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்ற னடியாரைப் பசிதீர்ப்பே னெனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்நீர் நல்விருந்தா லின்னடிசி லூட்டுவார். 18

**பதவுரை**

**வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு**- வேதங்களைத் திருவாய் மலந்தருளிய பெருமானுக்கு உண்மைத் தொண்டரான அச் சிவனடியாரின் பசித்தநிலைகண்டு, **நாதன்தன் அடியாரைப் பசி தீர்ப்பேன் என நண்ணி**- தலைவரான அப்பெருமானின் அடியவரது பசியினைப்போக்குவேன் என்று அவரை அணுகி, **பாதங்கள் விளக்க நீர் முன் அளித்து**- அவரின் கால்களைக் கழுவுதற்கு நீரினைக்கொடுத்து, **பரிகலம் வைத்து**- உண்ணுதற்கான பாத்திரத்தையும், வைத்து, ஏதம்

தீர் நல்விருந்தால் -குற்றம் தவிர்த்த நல்ல விருந்தாக, இன்னடிசில் ஊட் டுவார்- இனிய சுவை நிறைந்த உணவினை அருந்துவாராகி,

**பொழிப்புரை:**

வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளிய இறைவனின் உண்மைத் தொண்டர்தம் பசியினைப் புனிதவதியார் நோக்கினார். ''சிவனடியா ரின் பசியைப் போக்குவேன்'' என்று உளங்கொண்டார். அடியவ ரின் கால்கள் கழுவுதற்கு நீர் வழங்கினார்: அவர் முன்பு உணவு உண்ணும் பாத்திரத்தை வைத்தார்: அப்பாத்திரத்திலே நல்ல விருந் தாக இனிய உணவினைப் படைத்து ஊட்டுபவராகி,

**விளக்கம்:**

வேதங்கள் மொழிந்த பிரான் என்ற தொடருக்கு வேதங்களால் 'இவனே பரம்பொருள்'' என்று போற்றப்பட்ட சிவபெருமான் என்றும் பொருள் கொள்ளலாம் சிவனடியார் இல்லம் வந்தால் அவர் களின் பாதங்களைத் தம் கைகளாலேயே கழுவி வணங்கி உபசரித்தலே சைவ மரபு. அப்பூதியடிகள் நாயனார் தம் இல்லத்திற்கு எழுந்தருளிய திருநாவுக்கரசர் பெருமானுக்கு அவர் திருவமுது செய்யமுன் தாமே அவரின் திருப்பாதங்களைக் கழுவி, சிறந்த ஆசனத்தில் ஏற்றி வைத்தார் என்பதை,

அருந்தவர் எழுந்துசெல்ல அடியினை விளக்கி வேறோர்
திருந்தும் ஆசனத்தில் ஏற்றிப் பரிகலம் திருத்துமுன்னர்
(தி.பெ.பு. அப்பூதியடிகள் நாயனார் புராணம் 31)

எனவரும் பாடல் அடிகளால் அறியலாம். ஆனால் புனிதவதியாரோ சிவனடியார் தம் கால்களைக் கழுவ நீரினை அளிக்கின்றார். புனிதவதி யார் இல்வாழ்க்கையினை மேற்கொண்ட பெண்மணியாதலால் அவர் தம்மைக் கொண்டவனது மேனி தவிர வேறு எவரின் உடலையும் அவர் முதிய சிவனடியாராயினும் தீண்டார் என்பதைக் காட்டச் சேக்கிழார் 'பாதங்கள் விளங்க முன் நீர் அளித்து' என்று குறித்தார். அதனோடு எத்தகைய பசி வாட்டினாலும் கால் முகம் கழுவாது உணவு உடல் ஆசாரம் அன்று என்பதையும் சுட்டினார். சிவனடியாரைப் பசி தீர்ப் பேன் என்ற தொடரில் ஐ உருபு ஆறாம் வேற்றுமை உருபிற்குப் பதிலாய் வந்துள்ளமையால் வேற்றுமை மயக்கமாயிற்று. சிவனடியா ரது பசி தீர்ப்பேன் என்று விரித்துப் பொருள் கொள்க.

புனிதவதியார் கயிலாயபதியாகிய சிவபெருமானால் 'நம்மைப் பேணும் அம்மை' என உமாதேவியாருக்கு அறிமுகம் செய்யப்படும் பெரு மைக்கு உரியவராவர். இக்காரணத்தினாலேயே அவரின் வரலாற்றைச்

கூறவந்த சேக்கிழார் அவருக்குக் காரைக்காலம்மையார் என்ற சிறப்புத் திருநாமத்தை வழங்கினர். இத்தகைய பெருமாட்டி அடியவருக்குத் தாய்போல உள்ளன்போடு உணவினை ஊட்டினர் என்ற குறிப்புத் தோன்ற 'ஊட்டுவார்' எனக் குறித்தமை மிக்க நயம் உடையது. 18

கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட
வெறிமலர்மேற் றிருவனையார் விடையவன்ற னடியாரே
பெறலரிய விருந்தாரற் பேறிதன்மே லில்லையெனும்
அறிவினரா யவரமுது செய்வதனுக் காதரிப்பார்; 19

**பதவுரை:**

**கறி அமுது அங்கு உதவாதே திருவமுது கைகூட** - கறியாகிய அமுதம் அதுகாலை (சமைத்து முடியாமையால்) உதவ முடியாது. திரு அமுதாகிய அன்னம் மட்டுமே நிறைவேறி இருக்க, **வெறிமலர் மேல் திரு அனையார்** - மணம் பொருந்திய (உச்சியிலிருக்கும் ஆயிர இதழ்த்) தாமரையென்னும் யோகத்தானத்தில் அமர்ந்தருளும் பராசத்தியை ஒத்தவரான புனிதவதியார், **விடையவன்றன் அடியாரே பெறலரிய விருந்தானல்** - இடபவாகனரான சிவபிரானின் மெய்த் தொண்டரே பெறுதற்கு அரிய நல் விருந்தாய் அமைவாரானல், **பேறு இதன்மேல் இல்லை எனும் அறிவினராய்** - இதனிலும் மேலாவது இல்லை என்னும் ஞானம் கைவரப் பெற்றவராய், **அமுது செய்வதனுக்கு ஆதரிப்பார்**- [சிவனடியார்] உணவு உண்பதனை விரும்பினராகி,

பொழிப்புரை:

சிவனடியார் உணவுண்ண வந்தபொழுது அன்னம் மட்டுமே சமைக்கப்பட்டிருந்தது. கறியமுது நிறைவேறியிருக்கவில்லை. பராசக்தி போன்ற புனிதவதியார் ''சிவனடியாரே விருந்தினராய் எழுந்தருளியுள்ள பொழுது இதனிலும் பெறுதற்கு அரிய பேறு வேறு இல்லை'' என்னும் உணர்வினைப் பெற்றார். அவரை எவ்வாறாயினும் உண்பித்தல் வேண்டும் என்ற விருப்பத்தினை உடையவராகி,

**விளக்கம்:**

அன்னம் [சோறு] கறி ஆகியவற்றை அமுது என்று கூறும் நயம் நோக்கத்தக்கது. [வெறிமலர்மேல் திரு] என்பதற்கு குறித்த பொருள் சிவக்கவிமணியின் விளக்கவுரையிலே காணப்படுவது. இவ்வாறு அவர் கருத்துக் கொள்வதற்கான காரணம் இரண்டாம் பாடலிலேயே தரப்பட்டது.

கணவன் அனுப்பிவைத்த மாங்கனிகளில் ஒன்றினைக் கறியமுதுக்கு மாற்றாக அளிப்பது என்ற முடிவினைப் புனிதவதியார் கொண்டனர். என்

பது இப்பாடலிலே குறிப்பாக உணர்த்தப்படுகின்றது. இல்லத்தலைவன் அனுப்பிய பொருளை அவனது ஒப்புதல் பெறாது அளிப்பது தவறு என்ற எண்ணமும் தயக்கமும் புனிதவதியாருக்கு ஏற்படுகின்றன. .'ஆயின் சிவனடியாருக்குத் திருவமுது அளிப்பதாலே ஏற்படும் புண்ணியதத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை ஆதலால் மாங்கனியை அளிப்பேன்'' என்ற தீர்மானத்திற்கு அம்மையார் வந்துவிடுகிறார். கற்டையே அணிகலமாய்ப் பூண்ட அவர் தமக்குக் கிடைக்கும் பேறு தம் கணவனுக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையாலேயே இவ்வாறு தீர்மானிக்கின்றார் என்று கொள்ளல் வேண்டும். உணர்வு ஞானம் அடியாரே' என்ற சொல்லில் வரும் ஏகாரம் உயர்வு சிறப்புப் பொருளில் வந்ததோர் இடைச்சொல்.

இல்லாளன் வைக்கவெனத் தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிக ளிரண்டினிலொன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லறீர்ப் பவரடியார் தமையமுது செய்வித்தார். 20

**பதவுரை**

இல்ஆளன்- இல்லத்தை ஆள்பவனாகிய தம் கணவன், வைக்க எனத் தம்பக்கல் முன் இருந்த ''இவற்றை வைக்க'' என்று அனுப்பித் தம்மிடத்தே முன்பே இருந்தவையான. நல்லநறு மாங்கனிகள் இரண்டினில் ஒன்றைக் கொண்டு நல்ல சுவை நிறைந்த மாங்கனிகளில் ஒன்றினை எடுத்துக் கொண்டு, வல்விரைந்து வந்து அணைந்து மிக விரைவாக வந்து அடியவர் அருகு சேர்ந்து படைத்து- அதனை உணவு உண்ணும் கலத்திலே வைத்து, மன மகிழ்ச்சியினால் அல்லல் தீர்ப்பவர் அடியார் தமை அமுது செய்வித்தார். உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியோடு துன்பந் தீர்ப்பவரான இறைவனின் அடியவரை உணவு உண்பித்தார்.

**பொழிப்புரை:**

தம் தலைவனான பரமதத்தன் 'வைக்க' என அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் ஒன்றினைப் புனிதவதியார் மிக விரைவாக எடுத்து வந்தார் அதனை அடியவரின் உண்கலத்திலே படைத்தார், மன மகிழ்ச்சியோடும் சிவனடியாரை உணவு உண்பித்தார்.

**விளக்கம்**

இப்பாடலுக்கு முன்னுள்ள இரு பாடல்களிலும் ஊட்டுவார்: ஆதரிப்பார் என்று வந்த இரு முற்றெச்சங்களும் ஊட்டுவாராகி, ஆதரிப்பாராகி என விரிந்து அமுது செய்வித்தார் என்ற,வினைமுற்றுக் கொண்டு முடிந்தன. வல்விரைந்து என்ற சொற்றொடர் மிகுந்த விரைவினை எடுத்துக் காட்டி நின்றது. சிவனடியாரின் பசியினைப் போக்கும் பெரிய ஆர்வமானது புனிதவதியாரின் உள்ளத்தில் இருந்தது என்பதை இச்

சொற்றொடரால் ஆசிரியர் புலப்படுத்துகின்றார். மனமகிழ்ச்சியினால் என்பதில் வரும் 'ஆல்' உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. 20

மூப்புறுமத் தளர்வாலு முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியி னிலையாலு மயர்ந்தணைந்த திருத்தொண்டர்.
வாய்ப்புறுமென் சுவையடிசின் மாங்கனியி னோடருந்திப்
பூப்பயின்மென் குழன்மடவார் செயலுவந்து போயினார் 21

**பதவுரை:**

மூப்பு உறும் அத்தளர்வாலும்- முதுமை வந்து அடைந்தமையால் ஏற்பட்ட அந்தத்தளர்வினாலும், முதிர்ந்து முடுகிய வேட்கை தீப்பசியினிலையாலும்-நிறைந்து விரைவாக ஏற்பட்ட விருப்பத்தோடுகூடிய தீபோன்ற பசியின் கொடுமையாலும், அயர்ந்து அணைந்த திருத்தொண்டர்—களைப் படைந்து இல்லம்வந்த சிவனடியாரானவர், வாய்ப்புஉறும் மென்சுவை அடிசில் மாங்கனியினோடு அருந்தி—உவப்பானதும் மென்மையானதும் சுவை பொருந்தியதுமான அன்னத்தை மாங்கனியோடு உண்டு. பூ பயில் மென் குழல் மடவார் செயல் உவந்து போயினார் —பூக்கள் நிறைந்த மென்மையான கூந்தலையுடைய இளநங்கையான புனிதவதியாரின் விருந்து பேணும் நற்செயலை விருப்பத்தோடு பாராட்டிச் சென்றார்.

பொழிப்புரை.

மூப்பினால் ஏற்பட்ட தளர்வும், முதிர்ந்து விரைந்த பசி வேட்கையும் தீயாக எழக் களைத்து வந்த சிவனடியார் தமக்கு அளிக்கப்பட்ட இனிய மென்மையான அன்னத்தை மாங்கனியோடு உண்டு மகிழ்ந்து நறுமலர்க் கூந்தலரான புனிதவதியாரைப் புகழ்ந்து பாராட்டி தம் வழியே சென்றார்.

**விளக்கம்:**

சிவனடியார் முதியவர், மிகுந்த பசித்தீ வாட்டக் களைத்துத் தளர்ந்து வந்தவர். அவருக்கு உகந்தது மென்மையும், சுவையும் பொருந்திய உணவு. அது அவருக்கு மாங்கனியோடு கிடைத்தது. முதியவராதலால் அன்னத்தையும், மாங்கனியையும் பிசைந்து நீர்ப்பதமாக உண்டமையைச் சேக்கிழார், 'அருந்தியபின்' என்ற சொல்லாற் பெறவைக்கின்றார். தீப்பசி—தீப்போன்ற பசி. உவமைத்தொகை, தீய பசி எனப் பண்புத் தொகையாகக் கொள்வதும் பொருந்தும். வயிற்றுப் பசியை உதராக்கினி என்பது வடமொழி மரபு, உதரம்-வயிறு. அக்கினி தீ, 21

மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிகன்
உற்றபெரும் பகலின்கண் ணோங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாருங் கடப்பாட்டி லூட்டுவார் 22

**பதவுரை:**

**மற்று அவர்தாம் போயினபின்**-மற்று அச்சிவனடியார் சென்ற பின்பு, **மனைப்பதி ஆகிய வணிகன்**—இல்லத்தின் தலைவனும் வணிகன் பரமதத்தனுனவன், **உற்ற பெரும் பகலின் கண்**—அடைந்த மத்தியானப் பொழுதிலே, **ஓங்கிய பேர் இல் எய்தி**—உயர்ந்து ஓங்கிய பெரிய மனையிடத்தே வந்தடைந்து, **பொற்பு உற முன் நீராடிப் புகுந்து**— சிறப்புப் பொருந்தும் வகையிலே குளித்து மனையிற் புகுந்து, **அடிசில் புரிந்து அயில**—உணவினை விரும்பி உண்ணத் தொடங்க, **கற்பு உடைய மடவாரும்**—கற்பு உடையவரான புனிதவதியார், **கடப்பாட்டில் ஊட்டுவார்**—மனையாளுக்குரிய கடமையில் நின்று உணவினை உண்பிப்பவராகி,

**பொழிப்புரை:**

சிவனடியார் சென்ற பின்னர் மத்தியானப் பொழுதில் இல்லத் தலைவனுன பரமதத்தன் தனது பெரிய மனையினை வந்தடைந்தான். முதலில் நீராடிப் பின் மனையிற் புகுந்து உணவினை விரும்பி உண்ணத் தொடங்கினுன். புனிதவதியார் இல்லாளின் கடமை உணர்வோடு அருகிருந்து உணவு படைத்து உண்பித்தார்.

**விளக்கம்:**

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்றுப் பொருளில் வந்தது. புனிதவதியார் போன்று பரமதத்தன் சைவ ஆசாரங்களைக் கடைப் பிடிப்பவனல்லன் ஆதலின் அவன் நீராடி முடிந்ததும் உடனே உணவு உண்ணத் தொடங்கிவிடுகின்றுன். இச் செயலினைச் சேக்கிழார், 'நீராடிப் புகுந்து அடிசில் புரிந்து அயில' என்று மிக நுட்பமாகக் கூறுவது சிந்தனையைத் தூண்டுவதாயுள்ளது. ஓங்கிய பேரில் என்பதற்குப் புனிதவதியார் சிவனடியாரை அமுதூட்டுவதாற் புகழும் செல்வமும் ஓங்கிய பெருமனை என்றும் பொருள் கொள்ளலாம். 22

இன்னடிசில் கறிகளுட னெய்துமுறை யிட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்றன் மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியி லிருந்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமுங் கொடுவந்து கலந்தளித்தார். 23

**பதவுரை:**

**இன் அடிசில் கறிகளுடன் எய்தும் முறை இட்டதற் பின்**—இனிமையான அன்னத்தினைக் கறிகளோடு படைக்கப்படும் முறையால் இட்ட

அதன்பின்பு, மன்னிய சீர்க் கணவன்தன்மனை இடைமுன் வைப்பித்த நிலையான சிறப்புப் பொருந்திய கணவன் தனது இல்லத்திலே முன்பு வைக்குமாறு அனுப்பிய, நன்மதுர மாங்கனியில் இருந்ததனை— நல்ல சுவை பொருந்திய மாங்கனிகளில் எஞ்சியிருந்த ஒன்றினை,நறுங்கூந்தல் அன்னம் அனையார் தாமும்—நறுமணம் பொருந்தியகூந்தல் உடைய அன்னம் போலும் புனிதவதியார் தாமும், கொடுவந்து கலந்து அளித்தார்—கொண்டு வந்து உண்ணும் கலத்திலே வைத்துக் கொடுத்தார்.

**பொழிப்புரை:**

இன்சுவை உணவையும், கறியமுதையும் புனிதவதியார் கணவனின் உண்கலத்திலே முறைமையாகப் பரிமாறினர். பின்பு கணவன் தன் இல்லத்திலே வைக்குமாறு அனுப்பிய இரு மாங்கனிகளில் எஞ்சியதைக் கொண்டுவந்து அவனது கலத்திலே வைத்துக் கொடுத்தார்.

**விளக்கம்:**

உணவு வகைகளில் இன்ன இன்னவற்றை இன்ன முறையிலே பரிமாறல் வேண்டும் என்ற முறைமை ஒன்று உண்டு. அம்முறைமை தவறாது அம்மையார் பரிமாறியதிலிருந்து அவரின் இல்வாழ்வு அநுபவம் தெரியவருகின்றது. அன்னம் அனையார் என்றதனால் அவர் இன்முகத்தோடும் மென்மையோடும் அன்பமைந்து உணவைக் கணவனுக்கு ஊட்டினர். என்ற உண்மை பெறப்பட்டது. இதற்கு முன்னுள்ள பாடலிறுதியில் வந்த ஊட்டுவார் என்ற முற்றெச்சம் அளித்தார் என்னும் இந்தப் பாடலின் இறுதி வினையோடு முடிந்தது. 23

மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்ந்தகனி
தனைநுகர்த்த வினியசுவை யாராமைத் தார்வணிகன்
இனையதொரு பழமின்னு முளததனை யிடுகவென
வனையதுதாங் கொண்டுவர வணைவார்போ லங்ககன்றார் 24

**பதவுரை:**

மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்ந்தகனிதனை—தன்மனைவியாரான புனிதவதியார் பரிமாறிய சுவை மிகுதியும் உடைய மாங்கனியை, நுகர்ந்த இனிய சுவை ஆராமைத்தார் வணிகன்— சுவைத்து அதன் இனிய சுவையினால் ஆசை நிரம்பாமையினாலே, மாலை அணிந்த பரமதத்தனானவன், இனைய தொரு பழம் இன்னும் உளது—இது போன்ற பழம் மேலும் ஒன்று உள்ளது, அதனை இடுக என—அதனைக் கொண்டுவந்து கலத்தில் இடுவாயாக என்று கூற, அனையது தாங் கொண்டுவர அணைவார் போல்—அந்தப் பழத்தினைக் கொண்டுவரச் செல்வார்போல, அங்கு அகன்றார்— அந்த இடத்தினின்றும் நீங்கிச் சென்றார்.

**பொழிப்புரை:**

மனைவியார் படைத்த சுவை மிகுந்த மாங்கனியினை உண்ட பரமதத்தனுக்கு ஆசை தணியவில்லை. "இன்னும் ஒரு பழம் உள்ளது கொண்டுவந்து கலத்தில் இடுவாயாக" என்று அவன் தன் மனைவியாரைக் கேட்டனன் அவரும் அதனைக் கொண்டுவரச் செல்வார் போன்று அந்த இடத்தினின்றும் நீங்கினர்,

**விளக்கம்:**

இப்பாடலினூடாகப் பரமதத்தனின் தன்னல உணர்வு வெளியாகின்றது. நாச்சுவைக்கு அடிமையான அவன் தன் மனைவியாரைப் பொருட்படுத்தாமல் மற்றைக்கனியையும் கொண்டுவருமாறு பணிப்பது அவன் தனது ஆசைக்கு எளிதில் வசமாகுந் தன்மையையே காட்டுகின்றது அவன் இனிய சொல் பேசி அறியான் என்பது "இனையதொரு பழம் இன்னும் உளது அதனை இடுக" என்ற அவனது பேச்சின் மூலம் தெரியவருகின்றது. கனி என்ற சொல்லிற்குப் பதில் பழம் என்ற சொல் கையாளப்பட்டிருப்பதை நோக்குக.

இவ்விடத்திற் புனிதவதியார் தம் கணவனுக்கு உண்மையினை உரையாமல் கனியை எடுத்துவரச் செல்வார்போல உள்ளே சென்றது ஏன், என்ற வினா எழுதல் இயல்பே. எதனையும் கைமாறு கருதியே செய்து பழகிய தம் கணவன் தான் வைக்குமாறு அளித்த கனியினைச் சிவனடியாருக்குக் கொடுத்தமையை விரும்பான் என்பதை அவர் அறிவார். அதனால் அவன் சுடுசொல் எவையேனும் கூறல் கூடும். அவ்வாறு கூறுவது தம்மைச் சுடுவதாயிருப்பின் அதனை ஏற்று, மறக்க அவர் தயங்கார். ஆயின் சிவனடியாரைக் குறை கூறினால் அது அவனுக்குப் பாவமாகும் என்ற உணர்வே அவர் உண்மையினைக் கூறத் தயங்கி உட்சென்றமைக்கு காரணம் எனலாம். 24

அம்மருங்கு நின்றயர்வா ரருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே யவரருளாற் றாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று. 25

**பதவுரை:**

**அம்மருங்கு நின்று அயர்வார்**- அந்தப்பக்கத்திலே நின்று அவர்மனந் தளர்வார். **அருங்கனிக்கு என் செய்வார்?**- அரிய மாங்கனியைப் பெற அவர் என்ன செய்வார்? **மெய்ம்மறந்து நினைந்து உற்ற இடத்து உதவும் விடைவர் தான்**- மெய்மறந்த நிலையினராகி நினைந்து, துன்பம் ஏற்படுமிடத்து உதவிசெய்தருளும் இடபவாகனராகிய சிவபெருமானின் திரு

வடிகளைத், தம் மனம் கொண்டு உணர்தலும் — தமது உள்ளத்திலே இருத்தி உணர்ந்து உருகியதும், அவர் அருளால் - இறைவனது திருவருளால், அதிமதுரக் கனி ஒன்று - மிகுந்த சுவையுடைய மாங்கனி ஒன்று தாழ்குழலார் கைம்மருங்கு வந்து இருந்தது — தாழ்ந்த கூந்தலை உடையவரான புனிதவதியாரின் கரத்திலே வந்திருந்தது.

**பொழிப்புரை:**

புனிதவதியார் அவ்விடத்திலே நின்று மனந்தளர்ந்தார். அரிய மாங்கனியினைப் பெற அவரால் எவ்வாறு கூடும்? ஆபத்து வேளையில் உதவும் அப்பனை அவர் நினைந்து உருகினர். அதுகாலை மிக்க சுவையுடைய மாங்கனி ஒன்று இடபவாகனர் திருவருளால் அவர் தம் கையில் வந்திருந்தது.

**விளக்கம்:**

மெய்ம்மறத்தல் — தம்மை மறந்த பரவச நிலையினை அடைதல் தமது வாழ்வு முழுவதும் இறைவன் திருத்தாள்களையே பற்றி அவற்றில் தோய்ந்திருந்தவராதலால் மெய்ம்மறந்த நிலையிலும் இறைவனின் எண்ணமே அவர் உள்ளத்தில் மிக்கிருந்திருத்தல் வேண்டும். "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்பதற்கிசைய அவரின் அந்த அயர்ச்சி நிலையிலும் அவர் செய்த ஒருகணத் தியானம் இறைவனின் திருச்செவிகளில் வீழ்ந்தது ஆபத்பாந்தவனான அவன் அருள் அந்தக் கணத்திலே அதிமதுர மாங்கனியாய் அம்மையாரின் கரத்தில் வந்து அமர்ந்தது. நன் மதுர மாங்கனி, மதுரமிக வாய்ந்த கனி என்று பலவாறு பரமதத்தன் கொடுத்தனுப்பிய கனிகளைக் குறித்த ஆசிரியர் இறைவனின் திருவருளாற் கிடைத்த கனிக்கு 'அதிமதுர மாங்கனி' என்று புதிய அடை அளித்திருப்பதை நோக்குக. 25.

மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலு மயின்றதனில்
உற்றசுவை யமுதினுமேற் படவுளதா யிடவிதுதரன்
முற்றருமாங் கனியன்று மூவுலகிற் பெறற்கரிதால்
பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான்

**பதவுரை:**

மற்று அதனைக் கொடுவந்து மகிழ்ந்து இடலும்- மற்று அந்த மாங்கனியினைக் கொண்டுவந்து மகிழ்ச்சியோடு கணவனின் உண்கலத்தில் இடுதலும், அயின்று அதனில் உற்றசுவை- அதனை உண்டு அதனால் அடைந்த சுவையானது, அமுதினும் மேற்பட உளதாய்— தேவாமிர்தத்திலும் மேலானதாய் விளங்கிட, இதுதான் முன் தரும் மாங்கனி அன்று - இது நான் முன்பு தந்த மாங்கனி அல்ல மூவுலகிற் பெற

அரிது— சுவர்க்கம், பூமி, பாதாளம் ஆகிய மூன்று உலகங்களிலும் பெறுவது அரிது, பெற்றது வேறு எங்கு? — இதனைப் பெற்றது வேறு எங்கு? என்று மெய்வளையார் தலைக் கேட்டான்.— என்று தெரிந்தெடுத்த வளையல்களையணிந்த புனிதவதியாரைப் பரமதத்தன் கேட்டான்.

**பொழிப்புரை:**

புனிதவதியார் தாம் பெற்ற மாங்கனியைக் கொண்டுவந்து கணவனின் உண்கலத்தில் இட்டார். அதனை உண்ட பரமதத்தன் அதன் சுவை தேவாமிர்தத்தையும் விஞ்சியுள்ளமையை உணர்ந்தான் "இது முன்பு நான் தந்த மாங்கனி அன்று, இதுபோன்ற கனியினை மூவுலகங்களிலும் பெறல் அரிது. வேறு எங்கே இதனைப் பெற்றாய்"? என்று மனைவியாரை வினவினான்.

**விளக்கம்:**

பரமதத்தன் உண்ட தெய்வ மாங்கனி அவன் உள்ளத்திலும் ஒரு சிறிது ஒளியைப் பாய்ச்சியது போலும். பழம் என்று கேட்டவன் இப்பொழுது கிடைத்த மாங்கனியை உண்டதும் அதனைக் 'கனி, என்றும், 'அமுதத்திலும் விஞ்சிய சுவையுடையது' என்றும், மூவுலகத்திலும் இதுபோற் கிடைத்தல் அரிது என்றும் பலபடப் பாராட்டுகின்றான். அவன் கூறியது உண்மையே! சிவபிரானால் அருளப்பட்ட கனி மூவுலகத்திலும் பெறுவதற்கு அரிதானது என்பதில் ஐயமும் உண்டோ? 29

அவ்வுரைகேட் டலுமடவா ரருளுடையா ரளித்தருளுஞ்
செவ்வியபே ரருள்விளம்பும் திறமன்றென் றுரைசெய்யார்
கைவருகற் புடைநெறியாற் கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்
27

**பதவுரை:**

அவ்வுரை கேட்டலும்—பரமதத்தன் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்டலும், மடவார் அருளுடையார் அளித்து அருளும் புனிதவதியாரானவர், அருளை உடையவரான இறைவன் கொடுத்தருளும், செவ்விய பேர் அருள் விளம்பும் திறம் அன்று என்று உரை செய்யார் - செம்மையான பெரிய அருளின் திறம் பிறர்க்கு எடுத்துக் கூறக்கூடியதன்று என்று அதனைக் கூறாராயினர். கைவரு கற்புடை நெறியால் கணவன உரை காவாமை மெய்வழி அன்று - பயின்று தேர்ந்த கற்புடை நெறி காரணமாகக் கணவனுக்கு உண்மையை உரையாமை உண்மையான நல்ல வழியும் அன்று என விளம்பல் விடமாட்டார் விதிர்ப்பு உறுவார் - என்று [உண்மையைக்] கூறுதும் விடமாட்டாதவராய் நடுக்கம் உற்றார்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் இவ்வாறு கூறலும் அதனைக்கேட்ட புனிதவதியார் பேரருளாளரான இறைவன் தமக்குச் செய்தருளிய அருட்டிறத்தை எடுத்துக் கூறல் முறையன்று எனக் கூறமாட்டாதவராயும், அதே பொழுது கணவனுக்கு உண்மையைக் கூறாமை கற்புடைய நெறியன்று என்று கூறாது விடமாட்டாதவராயும் நடுக்கமுற்றார்.

**விளக்கம்:**

'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்பது முதுமொழி இறைவனின் திருவருட்செயலால் நிகழ்ந்தவற்றிற்குச் சாட்சியாய் இருப்போர் அதனைப் பிறர்க்கு வெளிப்படக் கூறுதல் திருவருளுக்கு மாறான செயலாகும். 'கணவனே கண்கண்டதெய்வம்' என வாழும் கற்புடைய மாதரோ எந்த உண்மையினையும் தம் கணவருக்கு எடுத்துக் கூறுதிரார் ஆக இவ்விருவகை முரன்பாடுகளுக்குமிடையே, 'இருதலைக் கொள்ளியுள் எறும்புபோல' இடர்ப்படும் நிலை புனிதவதியாருக்கு ஏற்படுகின்றது. இப்பாடலிலே சேக்கிழார், அருளின் சிறப்பினைப் புலப்படுத்த, அருள் என்ற சொல்லினை மூன்று இடங்களிற் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 27

செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ் சீலத்தால்
மைதழையுங் கண்டர்சே வடிகள் மனத் துறவணங்கி
எய்தவருங் கனியளித்தா ரியாரென்னுங் கணவனுக்கு
மொய்கருபூங் குழல்மடவார் புகுந்தபடி தனைமொழிந்தார்

**பதவுரை:**

செய்தபடி சொல்லுவதே கடன் என்னுஞ் சீலத்தால் — இறைவன் தமக்கு மாங்கனியினை அருள் செய்தவாறே சொல்வதுதான் தமக்குக் கடமை என்ற ஒழுக்கத்தினால், மைதழையுங் கண்டர் சேவடிகள் மனத்து உற வணங்கி - மைபோலுங்கரிய விடம் வளர்தற்கு இடமான நீலகண்டரின் சிவந்த திருப்பாதங்களை மனத்திலே பதியுமாறு வணங்கி. எய்த அருங் கனியளித்தார் யார் என்னும் கணவனுக்கு- அடைவதற்கு அரியதான மாங்கனியை அளித்தவர் யார் என்று கேட்கும் கணவனுக்கு மொய்தரு பூங்குழல் மடவார்- பூக்கள் நெருங்கப்பெற்ற கூந்தலை உடைய புனிதவதியார், புகுந்தபடி தனை மொழிந்தார் - தமது கையிலே மாங்கனி புகுந்த வகையினை எடுத்துரைத்தார்.

**பொழிப்புரை:**

இறைவன் தமக்கு அருள் செய்த வகையினை உரைத்தலே தமது கடமையென்று புனிதவதியார் உறுதிபூண்டார், நீலகண்டரைத் தமது

மனதிற் பதித்து வழிபட்டார்: "மாங்கனியினை யார் அளித்தனர்?" என்று வினவிய கணவனுக்கு அது தம் கையினிற் புகுந்த வகையினை எடுத்துரைத்தார்.

**விளக்கம்:**

இப்பாடலிலே 'மைதவழும் கண்டர்' என்ற சொற்றொடர் மிகவும் நயம் மிக்கது. தேவரும் அசுரரும் பாற்கடலிலே அமிர்தத்தினைக் கடைந்தெடுக்க முயன்றபோது பாற்கடலிலிருந்து கொடிய ஆலகால விடம் கிளம்பி இரு பகுதியாரையும் அழிக்க முற்பட்டது. அதுகண்டு அவர்கள் தம் உயிர்களைக் காப்பதற்குச் சிவபெருமானிடம் சரண் புகுந்தனர். தம்மைச் சரணடைந்தவரைக் காத்தற் பொருட்டுச் சிவபெருமான் ஆலகால விடத்தை உண்டனர் என்றும், அது அவர் தம் திருமேனியிற் சென்று சுவருவண்ணம் உமாதேவியார் அவரின் திருக்கழுத்தைப் பற்ற அது அங்கேயே தங்கி நின்றது. என்றும் புராண வரலாறு உண்டு. செம்மேனி எம்மானுன சிவபெருமானின் கண்டத்திலே நீலநிற நஞ்சு நின்று கண்டத்தைக் கறுக்கச் செய்தது. அதனுற் சிவபிரான் நீலகண்டகுமானுர் அடியவரின் பாவங்களைத் தாம் சுமந்து அவருக்கு அருள் செய்யும் இறைவனின் திருவருட்டிறத்திற்கு இஃது நிலைத்த அறிகுறியாகும். தமக்குச் செய்த அருளை எடுத்து உரைத்தல் பாவமாயினும் அதனை அவர் மன்னித்தருளுவர் என்ற குறிப்பினுல் நீல கண்டரை மனத்துற வணங்கினுர் புனிதவதியார் என்று சேக்கிழார் மிக நுட்பமாக எடுத்துரைத்துள்ளார். மைபோலும் கறுத்த நஞ்சு' மை என்ற சொல் மாத்திரையாற் கூறப்பட்டமையால் மை உவம வாகுபெயர். 'புகுந்தபடி' என்பதற்குச் 'சிவனடியார்' இல்லத்திற் புகுந்தது தொடக்கம் நிகழ்ந்தவை யாவும், எனப் பொருள் கொள்ளலும் பொருந்துவதே. 'எய்த அருங்கனி' என்பதற்குத் தனதத்தனுல் அடைதற்கு அரிதான மாங்கனி புனிதவதியாரை மனைவியாராகப் பெற்றதனுல் எய்த எளிதாயிற்று எனப் பொருள் விரிக்கலாம்.

ஈசனரு ளெனக்கேட்ட வில்லிறைவ னதுதெளியான்
வாசமலர்த் திருவனையார் தமைநோக்கி மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான் திருவருளே லின்னமுமோர்
ஆசில்கனி யவனருளாலழைத்தளிப்பா யெனமொழிந்தான்

**பதவுரை:**

ஈசன் அருள் எனக் கேட்ட இல்லிறைவன் —(அதிமதுர மாங்கனி) கிடைத்தமை இறைவனின் திருவருளே என்று சொல்லக்கேட்ட இல்லத் தலைவனுன பரமதத்தன், அது தெளியான்- அக்கூற்றித் தெளியாதவ

ளாய், வாசமலர்த் திருஆனயார் தமை நோக்கி - மணம் பொருந்திய (உச்சித்தானமாகிய) ஆயிரஇதழ்த் தாமரையின்கண் வீற்றிருந்தருளுய பராசத்தியை ஒத்த புனிதவதியாரை நோக்கி, மற்று இதுதான் - மற்று இந்த மாங்கனிதான், தேசு உடைய சடைப்பெருமான் திருவருளே - ஒளி பொருந்திய சடாபாரத்தினை உடைய சிவபெருமானின் திருவருளாற் கிடைத்ததென்பது உண்மையானால், இன்னமும் ஓர் ஆசு இல் கனி— மேலும் ஒரு குற்றமற்ற மாங்கனியை, அழைத்து அளிப்பாய் என மொழிந்தான்- அழைப்பித்துத் தருவாய் என்று கூறினான்.

**பொழிப்புரை:**

"இம்மாங்கனி ஈசனது திருவருளாலே கிடைத்தது என்று புனிதவதியார் கூறியதை இல்லத்தலைவனான பரமதத்தனாலே தெளிந்து கொள்ளக் கூடவில்லை. அவன் பராசக்திபோன்ற தன் மனைவியாரை நோக்கி, ஈசனது திருவருள்தான் இந்தமாங்கனி என்றால் இன்னும் ஒரு கனியினை அழைத்து எனக்குத்தா'' என்று கேட்டான்.

**விளக்கம்:**

ஈசன் அளித்தருளிய மாங்கனியின் அதிமதுரச் சுவையிலே ஈடுபட்ட பரமதத்தன் சில கணங்கள் ஒளி பெற்றுத் திகழ்ந்தான். ஆனால் மறுகணமே அவனது பழைய இயற்கை திரும்பிவிடுகிறது. சிவஞானத் தெளிவு இல்லாமையால் இறைவனின் திருவருளில் அவனுக்கு அவநம்பிக்கை ஏற்படுகின்றது. சேக்கிழார் உள்ளக் குறிப்பாக அவனை இல்லிறைவன் என்று குறிப்பது பொருந்துவதே என்னும் எண்ணம் உண்டாகின்றது. இல்லிறைவன் என்பதற்கு ஞானத்தெளிவு இல்லாத தலைவன் என்றுங் கூறலாம். 29

பாங்கன்று மனைவியார் பணியணிவார் தமைப்பரவி
ஈங்கிதளித் தருளீரே லென்னுரைபொய் யாமென்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலு மற்றதனை
ஆங்கவர்கைக் கொடுத்தலுமே யதிசயித்து வாங்கினான். 30

**பதவுரை:**

பாங்கு அகன்று — பக்கத்தே நீங்கிச்சென்று, பணி அணிவார் தமைப் பரவி—, பாம்பினை அணிபவரான சிவபிரானைப் போற்றி வணங்கி, ஈங்கு இது அளித்து அருளீரேல் என் உரை பொய்யாம் என்ன இதுகாலை இந்தமாங்கனியினை அடியேனுக்குக் கொடுத்து அருள் செய்யாது இருப்பீராகில் நான் சொன்னவை பொய்யாகிவிடும் என்று கூற, மாங்கனி ஒன்று அருளால் வந்து எய்துதலும் - மாங்கனி ஒன்று

சிவனருளால் வந்து கையில் அடைதலும், அற்று அதனை - மற்று அந்த மாங்கனியினை. ஆங்கு அவன் கைக்கொடுத்தலுமே- அவ்விடம் சென்று அவனது கையிற் கொடுத்தவுடன், அதிசயித்து வாங்கினான்- பரமதத்தன் வியப்போடு அதனை வாங்கினான்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் இவ்வாறு கூறப் புனிதவதியார் அவ்விடத்தினின்றும் நீங்கி உட்சென்றார். பாம்பினை அணிந்த சிவபிரானை வணங்கி வழி பட்டார். ''தேவரீர் மாங்கனி அளித்து அருளாவிட்டால் எனது உரை பொய்யாகும்'' என்று இறைவனைக் குறையிரந்தார். அந்தக் கணத் திலே இறைவனருளால் மாங்கனி ஒன்று அவர் கைக்கு வந்தது. அதனை அவர் கொண்டு சென்று பரமதத்தனின் கையிற் கொடுத்தார் அவனும் அதிசயத்தோடு வாங்கினான்.

**விளக்கம்:**

புனிதவதியார் ''என் உரை பொய்யாகும்'' என்று வருந்தியமை தமக்கு வரும்பழியைக் கருதியன்று. திருவருள் பொய்த்துவிடும் என்ற அச்சத்தினாலேயே அவர் அவ்வாறு உரைத்தார். ''பணி அணிவார்'' என இறைவனைக் குறித்தமை, புனிதவதியார் பின்னர் தாம் பாடப் போகும் பாமாலைகளிலே பெரும்பாலான இடங்களில் இறைவனின் பாம்பைப் பாடுவதை மனங் கொண்டேயாகும். முன்பு புனிதவதியார் பெற்றது அதிமதுர மாங்கனி. ஆனால் இரண்டாவது முறை அவர் பெற்ற மாங்கனிக்கு எவ்வித அடையும் குறிக்கப்படவில்லை, ஏனெனில் அடுத்தபாடலில் இம் மாங்கனி மறையும் செய்தி குறிக்கப்படுவதும், அதனைச் சுவைக்கும் பேறு பரமதத்தனுக்குக் கிடைக்காமற் போவது மேயாம். இந்தப் பாடலினையடுத்துவரும் பாடலின் யாப்பும் மாறுகின் றது. புனிதவதியாரின் இல்வாழ்க்கை இனிப் புதிய திருப்பம் பெற்று மாறுவதற்கு ஏற்பச் சேக்கிழாரும் யாப்பினை மாற்றி விடுகின்றார். 30

வணிகனுந் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணான்
தணிவரும் பயமேற் கொள்ள வுள்ளமுந் தடுமா றெய்தி
அணிகுழ லவரை வேறோ ரணங்கெனக் கருதி நீங்குந்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லான் தொடர்வின்றி
யொழுகுநாளில் 31

**பதவுரை:**

வணிகனும் தன்கை புக்க மாங்கனி பின்னைக் காணான்—வணிகனான பரமதத்தனும் தனது கையிற் புகுந்த மாங்கனியைப் பின்னர் காணாதவ னான் தணிவு அரும் பயம் மேற்கொள்ள— குறையாத அரிய பயமானது

மேலிட்டு எழ, உள்ளமும் தடுமாறு எய்தி உள்ளத்திலும் தடுமாற்றம் உண்டாகி, அணிசூழல் அவரை வேறு ஓர் அணங்கு எனக் கருதி அலங்கரிக்கப்பட்ட கூந்தலினையுடைய அவரை வேறான ஒரு தெய்வப் பெண் என்று நினைந்து, நீங்கும் துணிவுகொண்டு— அவரை நீங்கிச்செல்லும் உறுதியைக்கொண்டு, எவர்க்கும் சொல்லான் தொடர்பு இன்றி ஒழுகும் நாளில்— எவர்க்கும் நடந்தவற்றைச் சொல்லாதவனாய் ஒழுகிவருகின்ற நாளிலே,

**பொழிப்புரை:**

பரமதத்தன் தனது கையிற் புகுந்த மாங்கனியைப் பின்பு காணாதவனாகிக் குறையாத பயமும், தடுமாற்றமும் அடையலானான். புனிதவதியாரைத் தெய்வப் பெண் என்றே அவன் நினைக்கத் தொடங்கினான். அதனால் இல்லத்தில் நடந்தவற்றை யார்க்கும் சொல்லாது தன் உள்ளத்திலே மறைத்தவனாய் மனைவியாரை நீங்கிச் செல்வது என்று உறுதி பூண்டான். இவ்வாறு அவன் ஒழுகி வரும் நாளிலே.

**விளக்கம்:**

பரமதத்தன் திருவருட்டெளிவு பெற்றவனல்லன். உலகியலிலேயே மூழ்கிக் கிடந்து, செல்வம் பெருக்குதலே குறிக்கோளாய் வாழ்ந்தவன். அவனுக்குப் புனிதவதியார் பயபக்திக்குரிய தெய்வப் பெண்ணாகவே தோன்றியதில்வியப்புஇல்லை மற்றவர்க்குவீட்டில்நிகழ்ந்தவற்றைச்சொன்னால் அவர்கள் நம்ப மாட்டார்கள் என்பதும், நம்பினாலும் தன்னைத் தன் மனைவியாரினின்றும் நீங்கவிடார் என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தன. இதனாலேயே அவன் யார்க்கும் எதனையும் வெளியிடாததோடு எப்பொழுது மனைவியாரைப் பிரிவது என்று அற்றம நோக்கியிருந்தான். "இத்தகைய மிகச் சாமானியனை ஒருவனுக்கா, புனிதவதியாரை மணமுடித்து வைத்தனர்?" என்ற வியப்பே எமக்கு முதலில் உண்டாகும், பரமதத்தனின் திருமணம் நடந்த வகையினைச் சிந்தித்துப் பார்க்கும்பொழுது இந்த வியப்பிற்கு இடமேயில்லை வேற்றூரிலிருந்து மணம் பேசி வந்தவர்களுக்கு எவ்வித மறுப்புமின்றிப் பெண் கொடுக்க ஒப்பிய தனதத்தனின் செயலும், இந்தத் திருமணம் கிடைத்தற்கு அரிய பேறு என்று மகிழ்ந்து உடனேயே தன்மகனுக்குத் திருமணத்தை நடத்திவைக்கும் நிதிபதியின் அவசரமும் இத்தம்பதியரின் இணைவு நீடிக்கமாட்டாது என்ற முடிவையே படிப்பவர்க்கு ஏற்படுத்துவன, கணவன் மனைவியரின் முரண்பட்ட குணங்களும் இம்முடிவையே பெறவைக்கின்றன.

இப்பாடலையடுத்துவரும் பதினைந்து பாடல்களிலே ஒரு பாடலில் மட்டும் புனிதவதியார் பற்றிய செய்திச் சுருக்கப் கூறப்படும். பரமதத்தனின் செயல்களும், அவன் வேற்றூரில் மறுமணம் செய்துகொண்டு வாழ்வதைக் கேள்வியுற்ற புனிதவதியாரின் சுற்றத்தவர் அவரை அழைத்துக்

கொண்டு பரமதத்தனின் ஊருக்குச் செல்லலுமாகிய செய்திகளே விரிவாக இடம்பெறும். இதிலிருந்து இல்வாழ்க்கையைத் தடுத்தற்கு அரிய கடமை ஒன்றாகவே புனிதவதியார் கருதினர் என்பதும், கணவன் தம்மை நீங்கிச் சென்றதனால் அவரின் மன அமைதி குலைந்து விடவில்லை என்பதும் தெரிகின்றன.

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைந்தேன் - ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்சடையான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது.

(அற்புதத்திருவந்தாதி 11)

என்ற அம்மையாரின் பாடலிலே அவரின் மன அமைதிக்கான புதிரின் விடையைக் காணலாம். இதனைச் சேக்கிழார் உளங்கொண்டதாற்றான் பரமதத்தனைப் புனிதவதியார் காணும்வரை அவரின் நிலைபற்றி விரித்துக் கூறாதுவிட்டார். மாங்கனியைப் பெற்றுப் பரமதத்தன் கையிலே கொடுத்ததோடு புனிதவதியாரின் இவ்வுலக வாழ்க்கையின் கதை கனவாய் மறைந்துவிட்டது என்றே கொள்ளலாம். சுருங்கச்சொல்வதாயின் சேக்கிழார் புனிதவதியாரின் இகவாழ்வு பற்றிச் சொன்னதிலும் சொல்லாதுவிட்ட பகுதியின் மூலமே அம்மையாரின் முழுமையை நாம் உணருமாறு செய்துள்ளார், இதுவே சேக்கிழாரின் தெய்வப்புலமைத் திறத்திற்கு உகந்த எடுத்துக் காட்டாகும்.

31

விடுவதே யெண்ணமாக மேவிய முயற்சி செய்வான்
படுதிரைப் பரவை மீது படர்கலம் கொண்டு போகி
நெடுநிதி கொணர்வே னென்ன நிரந்தபல் கிளைஞ ராகும்
வடுவில்சீர் வணிகமாக்கள் மரக்கலஞ் சமைப்பித் தார்கள்.

**பதவுரை**

**விடுவதே எண்ணமாக மேவிய முயற்சி செய்வான்**- புனிதவதியாரை நீங்குவதே கருத்தாய் அதற்குவேண்டிய முயற்சிகளைச் செய்பவனாய் (பரமதத்தன்). **படுதிரைப் பரவைமீது படர்கலம் கொண்டுபோகி**- முத்து முதலான கடல்படு திரவியங்கள் படுகின்ற கடலின்மீது செல்லும் மரக்கலங்களைக்கொண்டு சென்று, **நெடுநிதி கொணர்வேன் என்ன**- பெருஞ் செல்வத்தினைக் கொண்டுவருவேன் எனக்கூற, **நிரந்தபல் கிளைஞராகும்**—வரிசையாய் உள்ள அவனின் உறவினரும் நண்பர்களுமான கூட்டத்தினராம். **வடு இல் சீர் வணிகமாக்கள்**- குற்றம் இல்லாத சிறப்பினரான வணிகர்கள், **மரக்கலம் சமைப்பித்தார்கள்**- மரக்கலம் ஒன்றினைப் புதிதாகச் செய்வித்தனர்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் தன் மனைவியாரை விட்டு நீங்குவதையே கருத்திற் கொண்டவனாய், கடல் கடந்து சென்று செல்வம் சேர்க்கப் போவ தாகத் தன் உறவினர் நண்பர் பலருக்கும் உரைத்தான். அதனை அவர்கள் நம்பினார்கள். கடலிற் செல்வதற்கென அவர்கள் புதிய மரக் கலத்தைச் செய்வித்தனர்.

**விளக்கம்:**

புனிதவதியாரை நீங்கிச் செல்ல ஒரு காரணம் வேண்டும் அந்தக் காரணத்தைப் பரமதத்தனின் கிளைஞர்கள் நம்பவும் வேண்டும். அவர்கள் அவனது வணிக முயற்சியையும், செல்வம் சேர்ப்பதில் உள்ள வேட்கையையும் நன்கு அறிந்தவர்கள்,

நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பின் நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினின் மேம்படுதல் மேயினான்.

என்று இவனது இயல்பைச் சேக்கிழார் தொடக்கத்திலேயே கூறிய தன் நோக்கம், அவன் பிரிந்து செல்லுங் காலத்தில் அவன் கூறும் காரணம் நியாயமானதும், உண்மையானதும் என்று கிளைஞர் நம்புவ தாகிய சூழ்நிலையினை உகந்த முறையில் ஏற்படுத்தலேயாகும். இப் பாடலிலே அக்காலத்தில் வாழ்ந்த வணிகமாக்களின் இயல்பும் தெளி வாகக் காட்டப்பட்டுள்ளது.

கலஞ்சமைத் தற்கு வேண்டுங் கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பும் பண்டம் பொருந்துவ நிரம்பவேற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித் தலைமையா நாய்கன் றானும்
நலந்தரு நாளிலேறி நளிர் திரைக் கடல்மேற் போனான். 33

**பதவுரை:**

**கலம் சமைத்தற்கு வேண்டும் கம்மியருடனே** — மரக்கலம் கட்டுவ தற்கு வேண்டிய தொழிலாளரோடு, **செல்லும் புலங்களில் விரும்பும் பண்டம் பொருந்துவ நிரம்ப ஏற்றி** — வணிகத்திற்காய் செல்லும் தேசங்களில் உள்ளோர் விரும்பி வாங்குகின்ற பொருள்களிலே பொருத் தமானவற்றை மிகுதியும் ஏற்றிக்கொண்டு, **சலம் தரு கடவுள் போற்றி**- நீரிலே பாதுகாப்புத் தரும் வருணனை வணங்கி, **தலைமையாய் நாய்கன் றானும்**- தலைமை நாயகனான மீகாமனும் (உடன்வர), **நலம் தரு நாளில் ஏறி**- நன்மை தருவதான நல்லோரை அமைத்த நாளிலே ஏறி, **நளிர் திரைக் கடல்மேற் போனான்** - குளிர்ச்சி பொருந்திய கடலிலே போனான்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் மரக்கலம் இடையிலே பழுதுபட்டால் அவற்றைத் திருத்தவல்ல தொழிலாளரோடு வணிகத்திற்குச் செல்லும் தேசங்களின் உள்ளவர் விரும்பி வாங்கும் பொருள்களிலே பொருத்தமானவற்றை யும், ஏற்றிக் கொண்டு, கடற்றெய்வமான வருணனுக்கு வழிபாடு இயற்றி, கப்பலுக்குத் தலைவனான மீகாமனோடு, தானும் நன்னாள் ஒன்றிற் கப்பலில் ஏறிக் கடல்மேற் போனான்.

**விளக்கம்:**

சேக்கிழார் முதலமைச்சராய்ப் பணிபுரிந்தவர்! சிறந்த அறிஞர் இவற்றோடு உலகியல் அநுபவமும், பற்பல தொழில்களையும் மேற் கொள்வோரை அவதானித்து அவரவர் செயற்றிறங்களை நுட்பமாக எடுத்துரைக்கும் திறனும் வாய்க்கப் பெற்றவர் என்பதற்கு இப்பாட லும் சான்றாகும். வணிகமாக்கள் பிறதேயங்களுக்குக் கடல்கடந்து வணிகம் செய்யச் செல்லும்போது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இங்குச் சுருக்கமாகவும் தெளிவாகவும் காட்டப்படுகின்றன. வணிகர் தாம் செல்லும் தேயத்திலுள்ளோர் விரும்பும் பொருள்கள் இவை என்று அறிவதோடு அப்பொருள்களில் எவை மரக்கலத்திற் கொண்டு செல்லப் பொருந்துபவை என்றும் அறிந்திருத்தல் வேண்டும் என்ற உண்மை இப்பாடலாற் புலப்படுத்தப்படுகின்றது. சென்றான் என்ற சொல்லிலும் போனான் என்ற சொல் பொருட் பொருத்தம் கூடிய தாயுள்ளது. 'போனவன் இனிக் காரைக்காலுக்குத் திரும்பான்' என்ற குறிப்புப் பொருளை அந்தச் சொல் தந்து நிற்கிறது. 33

கடன்மிசைக் வங்க மோட்டிக் கருதியதேயத் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கள்முற்றி
இடைசில நாட்க ணீங்க மீண்டுமக் கலத்தி லேறிப்
படர்புனற் கன்னி நாட்டோர் பட்டின மருங்கு சார்ந்தான்

**பதவுரை:**

**கடல்மிசை வங்கம் ஓட்டி**-கடலின் கண்ணே மரக்கலத்தினைச் செலுத் திச் சென்று, **கருதிய தேயம் தன்னில்** — தான் சென்று அடைய எண் ணிய நாட்டிலே, **அடைவு உறச் சென்று சேர்ந்து** - அடையும் வண்ணம் சென்று சேர்ந்து, **அங்கு அளவு இல் பல் வளங்கள் முற்றி**- அந்நாட்டிலே அளவு இல்லாத செல்வத்தினை அடைந்து, **இடை சில நாட்கள் நீங்க** — இம் முயற்சியினிடையே சில நாட்கள் செல்ல, **மீண்டும் அக்கலத்தில் ஏறி**— மீளவும் அந்த மரக்கலத்தில் ஏறி, **படர் புனல் கன்னி நாட்டு ஓர் பட்டினம் மருங்கு சார்ந்தான்**—பரந்து செல்லும் நீரால் சூழப்பட்ட பாண்டி நாட் டிலே ஒரு துறைமுகப் பட்டினத்தை அடைந்தான்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் கடலிலே தனது மரக்கலத்தைச் செலுத்தியவனாய்த் தான் விரும்பிய தேசத்தைச் சென்று அடைந்தான்: அங்கு அளவு இல்லாத பெரும் செல்வத்தைத் தொகுத்தான். இம் முயற்சியிலே சில நாட்கள் சென்றன. பின்னர் தமது மரக்கலத்திலே ஏறிப் பாண்டி நாட்டிலுள்ள ஒரு துறைமுகப் பட்டினத்தைச் சென்றடைந்தான்.

**விளக்கம்:**

புனிதவதியாருடன் தொடர்பு இன்றி வாழ்வதற்கு வெளித் தேசங்களிற் சென்று வணிகம் செய்தலைக் காரணங்காட்டி, அதற்கான ஆயத்தங்களிற் செலவழித்த பரமதத்தன் தான் விரும்பிய தேசத்தைச் சென்றடைகின்றான் அங்கும் இடையறாத வணிக முயற்சிகளில் ஈடுபட்டு அவரை மறக்க அவன் முயல்கின்றான்; அம்முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்றபின் நிலையாக வாழ்வதற்குப் பாண்டி நாட்டில் உள்ள துறைமுகப் பட்டினம் ஒன்றிற்கு அவன் வருகின்றான். அவன் முழுமையாகப் புனிதவதியை மறக்கவில்லை என்பதை மேல்வரும் நிகழ்ச்சியாற் சேக்கிழார் குறிப்பாகக்காட்டுவார். அதனை வருமிடத்தில்விளங்குவோம். புனிதவதியார் வாழ்ந்த சோழநாட்டிற்கே பிரியாவிடை அளித்து விடுவதை அவன் பாண்டிநாடு செல்வதன் மூலம் ஆசிரியர் புலப்படுத்துகின்றார். 34

அப்பதி தன்னி லேறி அலகில்பல் பொருள்க ளாக்கும்
ஒப்பின்மா நிதிய மெல்லா மொருவழி பெருக வுய்த்து
மெய்ப்புகழ் விளங்கு மவ்வூர் விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான் 35

அப்பதி தன்னில் ஏறி—பரமதத்தனனவன் அந்தப் பட்டினத்தைச் சென்றடைந்து, அலகு இல் பல் பொருள்களாக்கும் — அளவு இல்லாத வணிகப்பொருள்களாலே தான் ஆக்கிக்கொண்ட, ஒப்புஇல் மாநிதிய மெல்லாம்-நிகர் இல்லாத பெரியசெல்வம் யாவற்றோடும், ஒருவழிபெருக உய்த்து- இலாபம் என்ற ஒரே வழியிற் பெருகுமாறு செலுத்தி, மெய்ப் புகழ் விளங்கும் அவ்வூர் விரும்ப—உண்மையான புகழில் விளங்கும் அவ்வூரினர் யாவரும் விரும்புமாறு, ஓர் வணிகன் பெற்ற செப்பு அருங் கன்னியை - வணிகன் ஒருவன் பெற்ற சொல்லுதற்கு அரிய கன்னிப்பெண் ஒருத்தியை, திருமலி வதுவை செய்தான்—செல்வம் பெருக மணம் புரிந்து கொண்டான்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் அப்பட்டினத்தைச் சென்று அடைந்தான். அங்குத் தான் கொணர்ந்த செல்வத்தினை மேலும் பெருக்கினான். உண்மை

யான புகழ் விளங்கும் அவ்வூரவர் யாவரும் விரும்பும் வண்ணம் வணிகன் ஒருவனின் கன்னியான மகளைத், திருமணமும் புரிந்தனன்.

**விளக்கம்:**

பரமதத்தன் எங்குச் சென்றாலும் செல்வத்தைப் பெருக்கும் முயற்சியிலேயே தலைநின்றான், உண்மையான புகழையுடைய அவ்வூரார் அவனது திருமணத்தினை விரும்பினர் என்பதால் அவன் மிகக் குறுகிய காலத்திலே அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரனானான் என்பதே பொருள். இது அவன் உலகியல் வாழ்விலே பெற்றிருந்த அநுபவத்தைக் காட்டுகின்றது, திருமலி வதுவை என்பதால் தனதத்தனிடம் சீதனம் பெற்றதுபோல இங்கும் மகட்கொடையோடு செல்வமும் பெற்றான் என்ற உண்மையும் உய்த்து உணரத்தக்கதாய் உள்ளது செப்பருங் கன்னி என்று அவன் மறுமணம் செய்த பெண் குறிக்கப் படுவதால் அவளும் அழகுநலம், பண்புநலம் ஆகியன பெற்றவளே என்பது பெறப்பட்டது, ஏறி என்ற வினையெச்சம், குறிப்பாக அவன் பெற்ற ஏற்றத்தையும் புலப்படுத்துகின்றது. அவ்வூர்- இதில் வந்த ஊர் என்னும் சொல் இட வாகுபெயர். அஃது ஊர்மக்களைக்குறிக்கும். 35

பெறலருந் திருவினாளைப் பெருமணம் புணர்ந்து முன்னை
அறலிய னறுமென் கூந்த லணங்கினா டிறத்தி லற்றம்
புறமொரு வெளியுறாமற் பொதிந்தசிந் தனையி னோடு
முறைமையின் வழாமை வைகி முகமலர்ந் தொழுகு நாளில்
36

**பதவுரை:**

**பெறல் அருந் திருவினாளைப் பெருமணம் புணர்ந்து** - பெறுதற்கரிய இலட்சுமி போன்ற பெண்ணைப் பெரியதாகிய திருமணம்புரிந்து முன்னை **அறல் இயல் நறும் மென்கூந்தல் அணங்கினாள் திறத்தில்**—முன்பு கருமணல் போன்ற மென்மையான கூந்தலை உடைய தெய்வப் பெண்ணாகிய புனிதவதியார் பக்கம் தான் நடந்து கொண்டதாகிய (திருமணம் புரிந்து வாழ்ந்துபிரிந்ததாகிய), அற்றமபுறம ஒரு வெளியுறாமல்-வஞ்சகச் செயலை வெளியில் யார்க்கும் தெரியாதவாறு, பொதிந்த சிந்தனையினோடும்- உள்ளத்தில் மறைத்து வைத்ததினால் உண்டான சிந்தனையோடும், முறைமையின் வழாமை வைகி- (தன் செயல்களில் அதனை வெளியிடாது) ஒழுகும் முறைமைகளில் ஒன்றும் தவறாது வாழ்ந்து, முகம் மலர்ந்து ஒழுகும் நாளில்-முகத்தில் மகிழ்ச்சியினைக் காட்டி ஒழுகி வருகின்ற நாளிலே.

**பொழிப்புரை:**

பரமதத்தன் பெறுதற்கு அரிய லட்சுமி போன்ற பெண்ணைப் பெருமணம் செய்துகொண்டான். முன்பு தான் மணம் செய்து பின்

மனைவியாரை விடுத்து வந்த வஞ்சகச் செயலினை அவன் வெளியிடாமல் தன் உள்ளத்திலே மறைத்து வந்தான். இதனால் அவன் உள்ளத்திலேயே சிந்தனையும் கலக்கமும் இருந்தன. எனினும் வெளிப்படையாக முறைமை தவறாது நல்லவன் போல அவன் வாழ்ந்து வந்தான். அகத்தின் கலக்கத்தை மறைத்து முகத்தில் மட்டும் மலர்ச்சி காட்டி அவன் ஒழுகி வருகின்ற நாளில்.. ......

**விளக்கம்:**

பரமதத்தனுக்கு அவனது மறுமண வாழ்வில் அமைதியில்லை: புனிதவதியாராகிய தன் முதல் மனைவியார் தெய்வப்பெண்ணே என்ற அச்சமும் அவனில் நிலைத்திருந்தது: புறத்தே அதனைக் காட்டாது தனது முன்னைத் திருமணத்தின உண்மையையும் வெளியிடாது அவன வஞ்சனை நிறைந்த உள்ளத்தினனாய் வாழ்ந்து வந்தான். அது அவன் சிந்தனையை எந்நேரமும் கலக்கியது என்பதை, 'பொதிந்த சிந்தனையினோடு' என்ற சொற்றொடரால் பெற வைத்தார். முகம் மலர்ந்து ஒழுகும் நாளில் என்பதால் அவன் தன் உள்ள உணர்வுகளையும் இரகசியங்களையும் மறைத்து வைப்பதிலே வல்லவன் என்ற உண்மை புலப்படுத்துகின்றது. முன்பு காரைக்காலிலும் புனிதவதியாரைத் துறந்து செல்லும் தன் முடிவினை மிகத் திறமையாக மறைத்து வாழ்ந்தவனன்றோ? இவ்வாறு தமது எண்ணங்களைத் தம்முள்ளேயே மறைத்து வாழ்வோரின் உள்ளங்கள் எப்போதும் சஞ்சலமடைந்தே விளங்கும். தாம்மறக்க நினைக்கும் சம்பவங்களையும் மனிதர்களையுமே அடிக்கடி அவர்கள் நினைவுகூர்வர். புனிதவதியாரை அவனால் மறந்துவிடல் கூட வில்லை என்பதை, 'பொதிந்த சிந்தனையினோடும்' என்ற சொற்றொடரால் குறிப்பாக அறிந்து கொள்ளலாம். இப்பாடலின் மூலம் ஆசிரியரின் உளவியல் அறிவுத் திறனும் நன்கு புலப்படுகின்றன. 36

முருகலர் சோலை மூதூ ரதன் முதல் வணிக ரோடும்
இருநிதிக் கிழவ னென்ன வெய்திய திருவின்மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும்புகழினான் மனைவி தன்பால்
பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி யரிதிற்
பெற்றான் 37

**பதவுரை:**

முருகு அலர் சோலை மூதூர் அதன் முதல் வணிகரோடும் அழகிய மலர்கள் மலர்கின்ற சோலைகளையுடைய பழமை வாய்ந்த ஊரின் கண்ணேயுள்ள வணிகரிடையே, இருநிதிக் கிழவன் என்ன எய்திய திருவின் மிக்குப் - பெரிய செல்வத்திற்கு தலைவனான குபேரனைப் போன்று தான் தேடிப்பெற்ற செல்வத்தின மிகுதியை உடையவனாகி

பொருகடற் கலங்கள் போக்கும் புகழினான்- அலைகள் மோதுகின்ற கடலின் கண்ணே கப்பல்களைச் செலுத்தும் புகழ் உடையவனான பரமதத்தன் பெருகு ஒளி விளக்குப் போலோர் பெண் கொடி அரிதிற் பெற்றான்- பெருகிய ஒளி மேலும் விளக்கமுறுவதாகிய தீபத்தை ஒத்த பெண் கொடி போலும் மகவு ஒன்றை அரியதாகப் பெற்றான்

**பொழிப்புரை:**

தான் குடியேறிய பழமையான ஊரில் வாழ்ந்த வணிகரிடையே குபேரனைப் போன்று செல்வத்தால் பெருநிலை யடைந்து, வணிகத் திற்குக் கப்பல்களைக் கடலிற் செலுத்துபவன் என்னும் புகழினொடும் வாழ்ந்த பரமதத்தன் தன் குலத்தை முன்னும் பின்னும் விளக்க வந்த தீபத்தைப் போலும் பெண் மகளொன்றை அரிதிற் பெற் றெடுத்தான்.

**விளக்கம்**

செல்வத்தாற் குபேரனை ஒத்து விளங்கிய பரமதத்தன்பிள்ளைச் செல்வத்தில் வறுமையுற்றிருந்தான் என்பதையும் நீண்ட காலத்தின் பின் அவனுக்குக் குழந்தை பிறந்தது என்பதையும், 'அரிதிற் பெற்றான்' என்ற சொற்றொடரால் அறிந்து கொள்ளலாம், புனிதவதியாரை நீங்கிவந்து பலவாண்டுகளாயின என்பதும், இச் சொற்றொடரால் நினைவுபடுத்தப்படுகின்றது. 'முருகு' என்பது அழகு, இளமை, மண முடைமை, தெய்வத்தன்மை என்று பல பொருள் தருவதோர் சொல் என்பர். திரு. வி. க. இங்கு அழகு என்ற பொருள் கொள்ளப்பட் டது. அழகு, அதனையுடைய மலர்களைக் குறித்தமையாற் குணவாகு பெயர்,

37

மடமக டன்னைப் பெற்ற மங்கலம் பேணித் தான்முன்
யுடனுறை வஞ்சி நீத்த வொருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுல மென்றே
கொண்டு
கடன்மைத் தவர்தம் நாமம் காதல்செய் மகவையிட்டான்

**பதவுரை:**

மட மகள் தன்னைப் பெற்ற மங்கலம் பேணி-மென்மை பொருந்திய பெண் மகவைப் பெற்ற மங்கலச் சடங்குகள் யாவும் போற்றிச்செய்து தான் முன்பு உடன உறவு அஞ்சி நீத்த - தான் முன்பு கூடிவாழ்வதற்குப் பயந்து நீங்கி வந்த, ஒரு பெரு மனைவியாரை ஒப்பற்ற பெரியமனைவியா ரின், தொடர்பு அற நினைந்து - முன்னைய தொடர்பினை மிகவும் நினைந்து தெய்வத் தொழுகுலம் எனக் கொண்டு- தெய்வமாகிய தொழுதற்குரிய கூட்டத்தினர் என்றே மனதிற் கொண்டு, கடன் அமைத்து அவர்தம் நாமம்காதல் செய் மகவை யிட்டான்- செய்யவேண்டிய சடங்குகள் யாவும்

செய்து, அவரின் திருப்பெயரான புனிதவதியார் என்பதைத் தான் அன்பு செலுத்தும் குழந்தைக்கு வைத்தான்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் தன்மகளுக்கு மங்கலச் சடங்குகள் யாவற்றையும் செய்தான். தான் முன்பு கூடிவாழ அஞ்சி நீங்கி வந்த மனைவியாரை மிகுதியும் நினைத்து அவர் தெய்வக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்றே முடிவு செய்தான். அவரின் திருப்பெயரான புனிதவதி என்பதை தான் அன்பு பூண்ட தன் மகவுக்கு இட்டான்.

**விளக்கம்:**

பரமதத்தன் தான் முன்பு அஞ்சி நீங்கி வந்த தன் முதல் மனைவியாரான புனிதவதியாரையும் அவரின் தொடர்பையும் மிக நினைந்தான் என ஆசிரியர் இப்பாடலிலே கூறுகின்றார். அற—மிகுதியாக, முப்பதாவது பாட்டிலே 'தொடர்பின்றி ஒழுகினன்' எனக் குறித்தவர் இந்தப் பாடலிலே 'தொடர்பை மிக நினைந்து' என்று கூறுவது சிந்திக்கத்தக்கது. புனிதவதியாரைப் பிரிந்தாலும் அவரின் தொடர்பையோ சிந்தனையையோ அவனால் எத்தனை ஆண்டு சென்றும் மறத்தல் கூடவில்லை. அவன் நினைவிலே பயத்தோடு கூடிய பத்தி நிலவியே வந்தது என்பது இதனால் தெரிகின்றது. இக்காரணத்தினாலேயே அவர்தம் திருப்பெயரைத் தன் மகளுக்கு இட்டான்: அவரை இனித் தன் மனைவியார் என்று நினைப்பதே அவனுக்கு இயலாத ஒன்று என்பதையும் பெயரிட்ட இச்செயல் காட்டுகின்றது. பரமதத்தனின் இருள் (அறியாமை) நிறைந்த வாழ்க்கையில் இந்தத் திருநாமத்தைத் தாங்கிய குழவி பெருகிய ஒளிவிளக்காய் ஒளிவிடப்போகின்றது என்னும் உண்மை இதற்கு முன்னுள்ள பாடலாற் காட்டப்பட்டது. உறைவு+அஞ்சி= உறைவஞ்சி. சில இடங்களில் முற்றியலுகரமும் வருமொழியில் உயிர் வரின் கெடும் என்பதற்கு ஏற்ப உறைவஞ்சி என்றாயிற்று. 38

இந்நிலை இவனிங் கெய்தி யிருந்தன னிப்பா னீடும்
கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிக னான
தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமுங்
மன்னிய கற்பி னோடு மனையறம் புரிந்து வைக 39

**பதவுரை:**

இந்நிலை இவன் இங்கு எய்தி இருந்தனன் - இத்தகைய உயர்நிலையை பரமதத்தன் இங்கு அடைந்திருந்தான், இப்பால் நீடும் கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிகனான-இவ்விடமாகிய நெடிய காவற் கட்டு அழியாத மதிலாலே சூழப்பட்ட மனைகளோடு கூடிய

காரைக்கால் வணிகனாகிய, தன்நிகர் கடந்த செல்வத் தனதத்தன்— தனக்கு நிகர் இல்லாத செல்வனான தனதத்தனின், மகளார் தாமும்— மகளாராகிய புனிதவதியாரும், மன்னிய கற்பினோடு மனையறம் புரிந்து வைக - நிலையான கற்புநெறியினோடும் இல்லத்தின் தருமங்களைப் பேணிச்செய்பவராய் வாழ்ந்து கொண்டிருக்க.

**பொழிப்புரை:**

பரமதத்தன் பாண்டி நாட்டிலுள்ள ஊரொன்றிலே இவ்வாறு வாழ்ந்தான். இவன் நிலை இவ்வாறாக, ஒப்பற்ற பெருஞ் செல்வனான காரைக்கால் தனதத்தனின் மகளாராம் புனிதவதியார் நிலையான கற்பு நெறியோடு இல்லத்தின் தருமங்களைப் புரிந்தவண்ணம் வாழ்ந்து கொண்டிருக்க.

**விளக்கம்:**

பரமதத்தன் கடல்கடந்து சென்று பெரிய செல்வத்தைத் திரட்டினான். ஆயின் தனதத்தனின் செல்வவளமே அப்பொழுதும் மேம்பட்டு விளங்கியது என்பதைத் தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் என்ற சொற்றொடரால் பெறவைத்தார், எந்த நிலையிலும் மனஞ் சோராது அமைதியாகப் புனிதவதியார் தமது மனையறங்களைப் பேணி வந்தார் என்ற உண்மையை இப்பாடல் பெறவைக்கின்றது. மகளார் தாமும் என்பதில் வந்த 'தாம்' சிறப்புநோக்கி அமைந்தது, முன்னுள்ள பாடல் களிலும் பின்வரும் பாடல்களிலும் அவ்வாறே பொருள் கொள்க. 39

விளைவளம் பெருக்க வங்க மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னின் மன்னி
அளவின்மா நிதிய மாக்கி யமர்ந்தினி திருந்தா னென்று
கிளரொளி மணிக்கொம் பன்னார் கிளைஞர்தாங்
கேட்டாரன்றே 40

**பதவுரை:**

விளைவளம் பெருக்க வங்கம் மீதுபோம் பரமதத்தன் – விளைந்து வரும் தன் செல்வ வழத்தினை மேலும் பெருக்க மரக்கலத்தில் போன பரமதத்தன், வளர்புகழ்ப் பாண்டி நாட்டு ஓர் மாநகர் தன்னில்- வளர் கின்ற புகழோடு கூடிய பாண்டி நாட்டில் ஒரு பெரிய நகரத்தில், மன்னி அளவு இல் மாநிதியம் ஆக்கி-நிலைத்து அளவு கூறவியலாத பெரிய செல் வத்தைத் திரட்டி, அமர்ந்து இனிது இருந்தான் என்று – விருப்பத்தோடு இனிது வாழ்கின்றான் என்று, கிளர்ஒளி மணிக்கொம்பு அன்னார் - மேலெழும் ஒளிபொருந்திய அழகிய கொம்புபோன்ற புனிதவதியார் தம், கிளைஞர்தாம் கேட்டார்– உறவினர் கேள்வியுற்றனர்.

பொழிப்புரை:

தனக்கு உண்டாகிய செல்வ வளத்தைப் பெருக்கும் நோக்கோடு கப்பலிற் சென்ற பரமதத்தன் பெருஞ் செல்வனுய்ப் பாண்டி நாட்டி லுள்ள பெரு நகரம் ஒன்றில் நிலைத்து வாழ்கின்ருன் என்ற உண்மை யைப் புனிதவதியாரின் உறவினர் கேள்வியுற்றனர்.

விளக்கம்:

பரமதத்தன் பிரிந்து சென்ற பின்னரும் புனிதவதியார் மனச் சோர்வோ தளர்ச்சியோ அடைந்தார் அல்லர். சிவனடியே சிந்தித்து அவர் தாளினைப் பற்றலே குறியாக அந்தப் பேரானந்த அநுபவத்தைச் சிந்திப்பதும் வந்திப்பதுமே செயலாக அம்மையார் வாழ்ந்தார் என்ப தைக் 'கிளர் ஒளி மணிக் கொம்பு அன்னுர்' என்ற சொற்றெடர் குறித்துக் காட்டுகின்றது

வணிகர்க்குத் தாம் கேள்வியுற்ற செய்திகள் யாவிலும் மேலாகத் தோன்றியது பரமதத்தன் திரட்டிய மாநிதியம் பற்றியதேயாகும் அவ்வாறு திரட்டுவதைப் புகழ்தலும், போற்றுதலுமே அவர் தம் இயல்பு என்பதும் இப்பாடலாற் புலப்படுத்தப்படுகின்றது. 40

அம்மொழி கேட்டபோதே அணங்கனுர் சுற்றத்தாரும்
தம்முறு கிளேஞர்ப் போக்கி யவனிலே தாமுங் கேட்டு
மம்மாகொள் மனத்தராகி மற்றவ னிருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலேயினுனேக் கொண்டுபோய்
விடுவதென்ருர். 41

பதவுரை:

அம்மொழி கேட்ட போதே- அந்தச் செய்தியினைக் கேட்டபொழுது அணங்கு அ(ன்)னுர் சுற்றத்தாரும் - தெய்வப் பெண்ணைப் போன்ற புனிதவதியாரின் உறவினர்களும், தம் உறு கிளேஞர்ப் போக்கி - தம்மோடு நெருங்கி வாழும் உற்ருரை அனுப்பி, அவன் நிலே தாமுங்கேட்டு- அவனது வாழ்க்கை நிலையினைத் தாமும் உறுதியாகக் கேட்டறிந்து மம்மர்கொள் மனத்தராகி மயக்கத்தைத் தருவதாகிய கவலே நிறைந்த உள்ளத்தராகிய, மற்று அவன் இருந்த பாங்கர் மற்று அவன் வாழும் இடத்திலே, கொம்மைவெம் முலேயினுளேக் கொண்டுபோய் விடுவது என்ருர் -திரட்சி பொருந்திய முலேயினுளேக் (புனிதவதியார்) கொண்டு சென்று விடுவது என்று முடிவு செய்தனர்.

பொழிப்புரை:

அந்தச் செய்தியினைப் புனிதவதியாரின் உறவினர் கேள்வியுற்ற னர். அதனை உறுதி செய்யுமுகமாகத் தமது உற்ருர் சிலரை அனுப்

பிப் பரமதத்தனின் வாழ்க்கை நிலையினை அறிந்து கொண்டனர். அதனால் அவர்களுக்குக் கவலை ஏற்பட்டது புனிதவதியாரைக் கொண்டு சென்று பரமதத்தனிடம் சேர்த்து விடுவதே கருமம் என்று அவர்கள் முடிவு செய்தனர்.

**விளக்கம்**

புனிதவதியாரின் பெற்றோரும் மற்றோரும் செவிவழியாகக் கேள்வியுற்ற செய்தியை நம்பிச் செயலில் இறங்கவில்லை. தமது கிளைஞரை அனுப்பி அஃது உண்மையே என்று முடிவாக அறிந்த பின்னரே புனிதவதியாரைக் கொண்டு சென்று பரமதத்தனிடம் விடத் தீர்மானிக்கின்றனர். இவ்வாறு கூறவைத்தது சேக்கிழாரின் அமைச்சியல திறத்தையே எடுத்துக் காட்டுகின்றது. பொய்யா மொழியாகிய திருக்குறளிலே ஒற்றாடல் என்னும் அதிகாரத்தில் அரசன் பகைவர் நாட்டிலே ஒற்றறிய ஒருவனை அனுப்பி அவன் அறிந்து வந்ததை வேறு ஒற்றனால் உறுதி செய்த பின்னரே செயலில் இறங்கல் வேண்டும் என்பது குறிப்பிடப்படுகின்றது.

> ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
> ஒற்றினால் ஒற்றிக் கொளல்,
> (திருக்குறள்: பொருட்பால்: ஒற்றாடல், 8)

சேக்கிழார் இவ்வரசியல் முறைமையை உலகியலிலும் கையாண்டு மக்களுக்கு அறிவுறுத்தும் திறம் போற்றவேண்டுவதாகும். அணங்கு—தெய்வப் பெண், அணங்கு அன்னார். அணங்கனார் எனச் செய்யுளிற் கெடுதல் விகாரம் பெற்று வந்தது. மம்மர்-மயக்கம். இங்குக் கவலையைக் குறித்தது. 41

மாமணிச் சிவிகை தன்னின் மடநடை மயிலன் னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு வென்ன வேற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத்தாரும்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார். 42

**பதவுரை:**

**மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயில் அன்னாரை** - பெரிய அழகமைந்த பல்லக்கிலே மென்மையான நடை பொருந்திய மயிலை ஒத்த புனிதவதியாரை, **தாமரைத் தவிசில் வைகும் தனித்திரு என்ன** ஏற்றி—உச்சித்தானமாகிய ஆயிரம் இதழ்களோடு கூடிய தாமரையின் கண்ணே அமரும் ஒப்பற்ற அம்பிகை என்று சொல்லும் வண்ணம் ஏற்றிக்கொண்டு, **காமரு கழனி வீழ்த்து**- அழகிய திரையினை இட்டு

காதல் செய் சுற்றத்தாரும் தேமொழி அவரும் சூழ - அன்பு செய்கின்ற உறவினரும் தேனைப் போலும் இனிய மொழிபேசும் தோழிப் பெண்களும் சூழ்ந்துவர, சேணிடைக் கழிந்து சென்றார்- தூரமான இடத்தை நோக்கித் (பாண்டி நாட்டை நோக்கித்) தமது சொந்த ஊரினின்றும் நீங்கிச் சென்றனர்.

**பொழிப்புரை:**

புனிதவதியாரின் பெற்றோர் அழகிய பல்லக்கிலே புனிதவதியாரை ஏற்றிக்கொண்டு, அப்பல்லக்கினைத் திரையால் மூடியவராய் அன்புடைய உறவினரும் தோழியரும் சூழ்ந்துவரத் தூர தேயமாகிய பாண்டி நாட்டை நோக்கித் தம் ஊரிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்

**விளக்கம்:**

இப்பாடலிலும் திரு என்பதற்கு அம்பிகை (பராசக்தி) என்ற பொருள் கொள்ளப்பட்டது, விளக்கத்தினை முன்னுள்ள பாடல்களிற் காண்க. தாமரைத் தவிசு பல்லக்கிற்கு உவமையாயிற்று. இதிலிருந்து அதன் அழகினை ஒருவாறு உணரலாம். புனிதவதியாரைச் சுற்றத்தவரான ஆண்கள் மட்டுமன்றித் தோழியரான பெண்களும் அழைத்துச் சென்றனர் என்பதால் அவரின் மெல்லியல்பும், தனதத்தனின் முன்னேற்பாடும் அவனது செல்வச் சிறப்பும் நன்கு புலனாகின்றன. தவிசு—ஆசனம், மாமணிச் சிவிகை என்பதற்குப் பெரிய மணிகள் அழுத்திய முத்துப் பல்லக்கு எனவும் பொருள் கொள்ளலாம். 42

சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர் புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்கு வந்து
குலமுதன் மனைவி யாரைக் கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னுக்குச் சொல்லிமுன்
செல்லவிட்டார் 43

**பதவுரை**

சில பகல் கடந்து சென்று— இவ்வாறு சில நாட்கள் (பகலில்) பல ஊர்களையும் கடந்து சென்று, செந்தமிழ்த் திரு நாடெய்தி செந்தமிழ் நாடாகிய சிறப்புப் பொருந்திய பாண்டி நாட்டினை அடைந்து, மலர் புகழ்ப் பரமதத்தன் மாநகர் மருங்கு வந்து - வளர்ந்து வரும் புகழினனான பரமதத்தனின் பெரிய நகரத்தின் அருகிற்கு வந்து, குலமுதன் மனைவியாரை— நற்குலத்திலே தோன்றிய அவனின் முதல் மனைவியாரை, கொண்டு வந்து அணைந்த தன்மை— அழைத்துக் கொண்டு வந்துள்ள செய்தியினை, தொலைவு இல் சீர்க் கணவனுக்கு - அதிகதொலைவில் இல்லாத சிறப்புப்பொருந்திய கணவனுக்கு, சொல்லி முன் செல்லவிட்டார்- சொல்லி வருமாறு சிலரை அனுப்பிவைத்தனர்.

பெற்றாரும் உற்றாரும் தோழியரும் புனிதவதியாரை அழைத்துக் கொண்டு சில நாட்கள் வழிச்சென்று செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டில், பரமதத்தன் வாழ்ந்த பெரிய நகரத்தின் அருகு வந்தனர். பின்னர்த் தாம் புனிதவதியாரை அழைத்து வந்துள்ள செய்தியினைத் தம்மோடு வந்த சிலர் வாயிலாகப் பரமதத்தனுக்கு அறிவிக்குமாறு அனுப்பினர்.

**விளக்கம்:**

புனிதவதியாரின் பெற்றோரதும் உற்றோரதும் உயர்ந்த பண்பாட்டினை இப்பாடல் மூலம் சேக்கிழார் எடுத்துக் காட்டுகின்றார். ஒருவித காரணமுமின்றித் தம் குலமகளை நீங்கிச் சென்ற ஒருவனை அவனிடத்திற்கு நேரிற் சென்று பழிதூற்றி அவனது வெளிவேடத்தை உலகிற்குக் காட்டிப் பழிவாங்குதலே சாதாரண மாந்தரின் இயல்பு. ஆனாற் புனிதவதியாரின் உறவினரோ அவ்வாறு செய்யாது தாம் பரமதத்தனின் ஊரின் ஒருசார் தங்கிக்கொண்டு, தாம் புனிதவதியாரை அழைத்து வந்துள்ள செய்தியினை அவனுக்குச் சொல்லி அனுப்புகின்றார்கள். இச் செய்கையால் அவர்கள் பரமதத்தனுக்கும், தம் செல்வியார்க்கும், தமக்கும் ஏற்படக் கூடிய இழிவினின்றும் நீங்கியவராயினர் பரமதத்தனின் 'மலர் புகழு'க்கும், புனிதவதியாரின் கற்புச் சிறப்புக்கும் அரணிட்ட பெருமை அவர்க்கு உண்டாக இந்நிகழ்ச்சி வாய்ப்பளிக்கின்றது. தொலை இல் சீர் என்பதற்குத் தொலையாத பெருமையினை உடைய பரமதத்தன் எனப் பொருள் கொள்வதும் பொருந்தும், மனைவியாரை நீங்கின குற்றத்திற்கு அவன் உரியவனாயினும் அவரை என்றும் மறவாது போற்றி உள்ளத்திலே அவர் பற்றிய நீங்கா நினைவுகளுடன் வாழ்ந்த ஒருவனாதலாலும், தன் செல்விக்குப் புனிதவதியாரின் திருநாமத்தினைச் சூட்டி மகிழ்ந்தவனாதலாலும் அவன் தொலைவு இல் சீர் உடையவனாயினான். மலர் புகழ் என்பதற்கு மலர்ந்து மணம் பரப்பும் மலர்போல எவ்விடத்தும் புகழ்பரப்பி வாழ்ந்து வந்த எனவும் பொருள் கொள்ளலாம். தாம் அவதரித்த குலத்திற்கு முன்னும் பின்னும் வேறு எவரும் ஈட்டிக் கொடுக்காத புகழினை ஈட்டித்தந்தவராதலாலே புனிதவதியாருக்குச் சேக்கிழார் 'குலமுதன் மனைவியார்' என அடைகொடுத்தார் என்றும் கூறலாம். குலமுதல்—குலத்தின் முதன்மை

வந்தவ மணந்த மாற்றங் கேட்டலும் வணிகன் றானும்
சிந்தையி லச்ச மெய்திச் செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண் மகவி னோடு
முந்துறச் செல்வே னென்று மொய்குழ லவர்பால் வந்தான்

**பதவுரை:**

வந்து அவர் அணைந்த மாற்றம் கேட்டலும்- (தன் முதல் மனைவியாரும் சுற்றத்தாருமாகிய) அவர்கள் வந்து சேர்ந்த செய்தியினைக் கேட்டலும், வணிகன்தானும் சிந்தையில் அச்சம் எய்தி- வியாபாரியான பரமதத்தனும் மனத்திலே மிகுந்த பயத்தினை அடைந்து, செழுமணம் பின்பு செய்த—சிறந்த திருமணத்தைப் பின்பு செய்துகொண்ட, பைந்தொடி தனையும் கொண்டு- பசுமையானவளையல்களை அணிந்த மனைவியை அழைத்துக் கொண்டு, பயந்த பெண் மகவினோடும் தான்பெற்ற பெண் குழந்தையோடும், முந்துறச் செல்வேன் என்று- யானே முன்னர்ச் செல்வேன் என்று. மெய்க்குழல் அவர்பால் சென்றான் நெருங்கிய கூந்தலை உடையவரான புனிதவதியார் இருந்த இடத்திற்குச் சென்றான்.

**பொழிப்புரை:**

வந்தவர்கள் செய்தியைக் கூற மனத்திலே அச்சம் அடைந்த பரமதத்தன் தன் இரண்டாவது மனையாளோடும், மகளோடும் 'நானே முந்திச் செல்வேன்'' என்று கூறிப் புனிதவதியார் இருந்த இடத்தைச் சென்றடைந்தான்.

**விளக்கம்:**

செய்தியை அறிந்ததும் பரமதத்தன் மிகுந்த பயத்தினை அடைந்தான் என்று சேக்கிழார் உரைக்கின்றார். புனிதவதியார் தெய்வப் பெண் என்பதால் அவரின் கோபத்திற்குத் தான் ஆளாக நேரும் என்ற அச்சம் ஒரு புறம், தனது இரகசியம் தான் புகழுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊரவர்க்கும், இரண்டாம் மனைவியின் பெற்றோர் உற்றாருக்கும் தெரிந்துவிடும் என்ற அச்சம் மறுபுறமாக அவனுக்குக் கலக்கம் ஏற்பட்டது இயல்பே. ஆயினும் அவன் வணிகனதலால் நட்டத்தையும் இலாபமாக மாற்றும் திறம் அவனுக்கு உண்டு. இந்த நெருக்கடியையும் சமாளிக்க அவன் வழிகண்டதில் வியப்பு இல்லை. ஒரு குற்றமும் அறியாத தன் மனையாளையும், குழந்தையையும் அழைத்துச்சென்று புனிதவதியாரின் காலில் விழுந்து தன் பிழையை மன்னிக்குமாறு வேண்டினால் அவர் மன்னித்தருள்வது மட்டுமன்றி, தன்னையும், மனைவியையும், மகளையும் ஆசீர்வதித்து அருள்புரிவார் என்றும் அவன் தீர்மானித்து விடுகின்றான். இங்குச் சேக்கிழாரின் வணிகன் தானும் என்ற சொற்றொடர் இத்தகைய சிந்தனைகளையெல்லாம் தூண்டி நயம் பயந்து நிற்கிறது. தனக்கு வரக்கூடிய பழியினின்றும் நீங்குவதற்குவழி, புனிதவதியாரையும் உறவினரையும் தனது இல்லத்திற்கு வரவிடாது தானே அவர்களை நேரிற்சென்று காண்பதுதான் என்ற அவனின் உபாயத்தினை 'முந்துறச்செல்வேன' என்ற தொடராற் பெறவைத்தார். பைந்தொடி- பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

தானுமம் மனைவி யோடும் தளர் நடை மகவிேனோடும்
மானிளம் பிணையோ னின்ற மனைவியா ரடியிற் றாழ்ந்தே
யானும தருளால் வாழ்வே னிவ்விளங் குழவி தானும்
பான்மையா லுமது நாம மென்றுமுன் பணிந்து வீழ்ந்தான்

**பதவுரை:**

தானும் அம் மனைவியோடும் தளர்நடை மகவினோடும் - பரமதத்தனவன் தானும் தன் மனைவியோடும் தளர்நடை பயிலும் தன் பெண் குழந்தையோடும் மான் இளம் பிணைபோல் நின்ற மனைவியார் அடியில் தாழ்ந்தே— இளமைபொருந்திய பெண்மானைப்போல் நின்ற தன் முதல் மனைவியாரான புனிதவதியாரின் பாதங்களில் வீழ்ந்து யான் உமது அருளால் வாழ்வேன்— நான் உமது திருவருளினாலே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் இவ்விளம் குழவி தானும்-இந்த இளமைபொருந்திய குழந்தையும். பான்மையால் உமது நாமம் - சிறப்புக் காரணமாக உமது திருநாமத்தை பெற்றுள்ளது என்று அவர் முன்பு வீழ்ந்தான்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் தன் மனைவியோடும் பெண் குழந்தையோடும் புனிதவதியார் முன்பு சென்று அவரின் பாதங்களில் வீழ்ந்தான். 'நான் உமது திருவருளால் வாழ்கின்றேன். இந்த இளம் குழவியும் உமது திருநாமம் பூண்டுள்ளது'' என்றான்.

**விளக்கம்:**

எதிர்ப்பவர்கள் தமக்குச் சமமானவரோடும், தம்மை எதிர்த்து நிற்பவரோடும் முரண்பட்டுக் கலகம் விளைவிப்பர். எதிர்ப்பிற்கு உரியவர்கள் தாழ்ந்து பணிந்து நின்றால் அங்குக் கலகத்திற்கு இடம் ஏது? இந்த உலகியல் உண்மையை நன்குணர்ந்த பரமதத்தன் தனது கௌரவத்தையும் பொருட்படுத்தாது புனிதவதியாரின் அடிகளில் வீழ்ந்து விடுகின்றான். அந்தப் பொழுதிலும் அவனது மூளைத் திறம் நன்கு வேலைசெய்யத் தவறவில்லை, தனது இரண்டாம் மனைவிபற்றி ஏதும் பேசாது. தன் இளம் மகளினையே அவன் புனிதவதியாருக்கு அறிமுகம் செய்கின்றான். அவர் உள்ளத்திற் சிறிதாவது கோபம் இருந்தால் அதனையும் சாந்திப்படுத்த எண்ணியவன் போல, 'இக்குழந்தை உமது நாமத்தைத் தரித்துள்ளது' என்றான்.

உண்மையிற் புனிதவதியாருக்குப் பரமதத்தனிலோ வேறு எவரிலுமோ எவ்வித கோபமுமில்லை. எந்நேரமும் இறைதாளைப் பணிவதேயன்றி வே உலகியல் விடயங்களில் ஈடுபாடின்றி இருந்தவர் அவர்

கணவனைத் தேடிப் புறப்பட்டதும், நெடுந் தொலைவு பயணம் செய்ததும், உள்ளூர் உறவினரின் ஆரவாரமும் அவருக்குப் பொருந்தாத ஒரு சூழ்நிலையினையே ஏற்படுத்தியிருந்தன: அதனால் அவருக்கு மிரட்சியும் வெறுப்புமே உண்டாயின என்பதை. 'மான் இளப் பிணைபோல் நின்ற மனைவியார்' என்ற சொற்றொடரால் ஆசிரியர் அழகாகக் கூறிவிடுகின்றார். மானுக்கு மருட்சி இயல்பான குணம். இந்த மானோ இளமை பொருந்திய பெண் மான்! அதற்குப் பொருத்தமற்ற சூழல், எத்துணை மிரட்சியை ஏற்படுத்தியிருக்கும்! சேக்கிழார் பெருமானின் சொற்சிக்கனமும், ஆழ்ந்த பொருளுணர்வும் வெளியாகும் சிறந்த இடங்களில் இதுவும் ஒன்று. ஒவ்வொரு சொல்லும் சிந்திக்கச் சிந்திக்க இன்பம் பயப்பதாய் அமைந்துள்ளது. ''உலகெலாம்'' என இறைவனே அடி எடுத்துக் கொடுக்க, தெய்வப் புலமையிலே தலைநின்று 'பத்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலலர்' அவரன்றோ? 45

கணவன்றான் வணங்கக் கண்ட காமர்பூங் கொடியனாரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பா லச்சமோ டொதுங்கி நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி யுன்றிரு மனைவி தன்னை
மணமலி தாரினாய்நீ வணங்குவ தென்கோ லென்றார் 46

பதவுரை:

கணவன்தான் வணங்கக் கண்ட காமர்பூங் கொடி அன்னாரும்-கணவனானவன் தம்மை வணங்குவதைக் கண்ட அழகிய பூங்கொடி போன்றவரான புனிதவதியாரும், அணைவு உறுஞ் சுற்றத்தார் பால் அச்சமொடு ஒதுங்கி நிற்ப—தமக்குப் பக்கலில் நின்ற உறவினரிடத்தே பயத்தோடு ஒதுங்கி நிற்க, உணர்வு உறு கிளைஞர் வெள்கி—உணர்வினை அடையப் பெற்ற உறவினர்கள் வெட்கமடைந்தவராய், 'உன் திரு மனைவி தன்னை-உன் சிறப்புப் பொருந்திய மனைவியாரை, மணம் மலி தாரினாய்—மணம் நிறைந்த மாலையை அணிந்தவனே! (பரமதத்தனே) நீ வணங்குவது என்கொல் என்றார்'' ''நீவணங்குவது என்ன'' என்று கேட்டனர்.

பொழிப்புரை.

கணவன் தம்மை வணங்குவதைக் கண்ட புனிதவதியார் அச்சத்தோடு தம்மை அணைந்து நின்ற உறவினரிடையே சென்று ஒதுங்கினார். அதுவரை மலைத்து நின்ற உறவினர் உணர்வு வரப்பெற்றவர்களாய், வெட்கமடைந்து, ''பரமதத்தனே! நீ உன் மனைவியாரை வணங்குவது ஏன்''? என்ற கேட்டனர்.

**விளக்கம்**

பூங்கொடி என்றது புனிதவதியாரின் மென்மையைக் காட்டுவதற்கே யாகும். முதற் பாடலில் பெண் மானுக்குப் புனிதவதியாரை உவமித்த ஆசிரியர் இப்பாடலில் மானின் இயல்பான அச்சத்தை அவர் புலப்படுத்தினர் என்று உரைக்கின்றார். பரமதத்தன் வந்த வகையையும் அவன் செயலையும் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்து நின்றனர் உற்றார் என்பதை இப்பாடலில் 'உணர்வுறு கிளைஞர்' என்ற சொற்றொடர் வெளிப்படுத்தி நிற்கின்றது. உலகியலிலே மனைவியைக் கணவன் வணங்குவது என்பது நடவாத ஒரு செயல், வெட்கத்துக்' குரியது என்ற காரணமே அவர்களை மலைத்து நிற்க வைத்தது மனைவியை வணங்கும் நீ ஆண்மகன் போல் மணமலிதார் அணிந்ததும் வியப்பே என்று எள்ளுவார் போல உறவினர் 'மணமலிதாரினும்! எனப் பரமதத்தனை அழைத்தனர்.

மற்றவர் தம்மை நோக்கி மானுட மிவர்தா மல்லர்
நற்பெருந் தெய்வ மாத னறிந் தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டே னாத லாலே
பொற்பதம் பணிந்தே னீரும் போற்றுதல் செய்ம்மி
னென்றான். 47

**பதவுரை:**

மற்று அவர்தம்மை நோக்கி மற்று அங்கு நின்ற உறவினர்களைப் பார்த்து, ''இவர்தாம் மானுடம் அல்லர்'' — இவர் மனிதப் பிறவியர் அல்லர், நற்பெருந் தெய்வம் ஆதல் நான் அறிந்து அகன்ற பின்பு-நல்ல பெருமை வாய்ந்த தெய்வமேயாதலை நான் அறிந்து கொண்டு இவரை நீங்கிய பின்பு, பெற்ற இம் மகவு தன்னைப் பேரிட்டேன்- பெற்றெடுத்த இந்தக் குழந்தைக்கு அவர் திருநாமத்தை இட்டேன். ஆதலாலே பொற்பதம் பணிந்தேன் — அதனாலே அவரின் அழகிய பாதங்களைக் கும்பிட்டேன் நீரும் போற்றுதல் செய்மின் என்றான் - ''நீங்களும் இவரைப் போற்றி வழிபடுங்கள்'' என்று சொன்னான்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் புனிதவதியாரின் உறவினரை நோக்கி, 'இவர் மானிட உருவில் விளங்கினும் மானிடரேயல்லர். இவர் தெய்வமே ஆவர். இதனை நான் அறிந்து இவரை நீங்கிய பின்பு நான் பெற்றெடுத்த இக் குழந்தைக்கு இவரின் திருநாமத்தை இட்டேன். இதனாலேயே இவரின் திருப்பாதங்களை வணங்கினேன். நீங்களும் இவரைப் போற்றுங்கள், என்றான்.

**விளக்கம்:**

இப்பாடலில், தான் புனிதவதியாரை நீங்கியதற்கான காரணத்தினைப் பரமதத்தன் எடுத்துரைக்கின்றான். அவ்வாறு உரைத்தபொழுதும் அவன் தான் மறுமணம் செய்து கொண்டதை உரைப்பதற்குத் தயக்கம் அடைகின்றான். குழந்தையைப் பெற்றெடுத்த செய்தியின் வாயிலாகவும், தன் பக்கலில் நிற்கும் மனைவி வாயிலாகவும் அவர்கள் உண்மையை உறுதி செய்வார்கள் என்று கருதியவன் போல அவனைப் பேசவைக்கும் திறம் நயப்பிற்கு உரியது. 'மலர்புகழ்' 'தொலைவில்சீர்' முதலாகிய சொற்றொடர்கள் இவனுக்குப் பொருந்துவனவே எனக் குறிப்பாக ஆசிரியர் கூறுமிடமும் இதில் உண்டு. புனிதவதியாரின் பெருமையை அறிந்த முதல் ஆளாகவும், அதனைப் பிறர்க்கு எடுத்துரைத்து அவர்களையும் அவரை வணங்குமாறு தூண்டுபவனாகவும் இவை யாவிலும் மேலாகச் சில ஆண்டுகளாயினும் புனிதவதியாரின் கணவனாய் விளங்கியவன் என்பதாலும் முற்கூறிய புகழ்மொழிகள் இவனுக்குப் பொருந்துவனவேயாகும் "மானுடம் இவர்தா மல்லர். நறபெருந் தெய்வமாதல் நான் அறிந்து" எனபதற்குச் சிவக்கவிமணி 'மானுடமல்லவாயின் பின் என்னை? தெய்வப் பிறப்பு அதுவும் மக்களை அச்சுறுத்தித் தீமை செய்துழலும் சிறு தெய்வமல்லர்,, என்று பொருளுரைப்பர்.

47

என்றபின் சுற்றத் தாரு மிதுவென்கொ லென்று நின்றார்
மன்றலங் குழலி னாரும் வணிகன்வாய் மாற்றங் கேளாக
கொன்றைவார் சடையினார்தங் குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கின்மிக்க வுணர்வுகொண் டுரைசெய்கின்றார்

**பதவுரை:**

என்றபின் சுற்றத்தாரும் "இதுவென்கொல்" என்று நின்றார்- (பரமதத்தன்) இவ்வாறு கூறியபின் உறவினர்களும் "இது என்ன அதிசயம்" என்று கூறி நின்றனர். மன்றல் அம் குழலினாரும் வணிகன்வாய் மாற்றம் கேளா—மாலையை அணிந்த அழகிய கூந்தலை உடையவரான புனிதவதியாரும் வணிகன் கூறியவற்றைக் கேட்டு, கொன்றை வார் சடையினார் தம்குரைகழல்போற்றி- கொன்றை மாலையைஅணிந்த திருச்சடையினரான சிவபெருமானின் ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த திருப்பாதங்களை வணங்கி, ஒன்றிய நோக்கின் மிக்க உணர்வு கொண்டு— தமது உள்ளத்தின் கண்ணே ஒருமுகமாய் எழுந்தநோக்கினால் மிகுந்த ஞானம் கைவரப் பெற்றவராய், உரை செய்கின்றார்- உரைக்கலானார்.

**பொழிப்புரை:**

பரமதத்தன் இவ்வாறு கூறியபின் புனிதவதியாரின் சுற்றத்தவரும் "இது என்னே!" என்று அதிசயித்து நின்றனர். புனிதவதியாரும் வணிகன் கூறியதைக் கேட்டு மனத்தை ஒருமுகப்படுத்திச் சிவபெருமானின் திருவருளாகிய ஞானத்தின் உணர்வு மிகப் பெற்றவராய் உரைக்கலானார்.

**விளக்கம்**

பரமதத்தன் கூறியவை உறவினரின் வாய்களைக் கட்டிவிடுகின்றன. அவர்களால் எதுவும் கூறல் இயலவில்லை. வியப்பு மிகுதியாய் எழ அவர்கள் அதிசயித்து நிற்கின்றனர். புனிதவதியாரைப் பொறுத்தவரையிற் பரமத்தனின் தொடர்பு அற்றே போயிற்று என்பதை 'வணிகன்' என்ற சொல்லினாலே அறியலாம். அவன் கூறியவை உலகியலில் எஞ்சியிருந்த சிறு தொடர்பினையும் அறச் செய்துவிடுகின்றன. புனிதவதியார் ஞானத்தின் முழுமையான உணர்வினையும் பெறும் அதிபக்குவ நிலை உருவாகிவிடுகின்றது இனி அவரை அம்மையார் என்ற திருப்பெயரினாலேயே இனிவரும் இடங்களில் அழைப்போம் வணிகன் வாய் மாற்றம் என்பதற்கு அவனின் வாயிலிருந்து அவன் வாழ்வில் நிகழ்ந்த மாற்றத்தினைக் கேட்டு என்றும் பொருள் கொள்ளலாம் அன்றி அவன் வாயினாலே தமது வாழ்வில் ஏற்படவிருக்கும் மாற்றத்தினை அம்மையார் கேட்டு என்றும் உரைக்கலாம். 48

சங்கியவன் குறித்த கொள்கை யிதுவினி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் றாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு மென்று பரமனைப் பரவி நின்றார் 49

**பதவுரை:**

'ஈங்கு இவன் குறித்த கொள்கை இது எனில்— இவ்விடத்தே இவன் எடுத்துக் கூறிய கோட்பாடு இதுவானால், இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்து — இவனுக்கென்றே யான் தாங்கிக் கொண்ட அழகு நிலைத்து நிற்கும் இத்தசையாகிய மூட்டையினை நீக்கி, உன்பால்- உன்னிடத்தே, ஆங்குநின் தாள்கள் போற்றும்- திருக்கயிலையாகிய ஆங்கு உனது தெய்வகம பொருந்திய திருப்பாதங்களினை வணங்கும், பேய்வடிவு அடியேனுக்குப் பாங்கு உற வேண்டும் — பேயின் வடிவமானது அடியேனுக்குச் சிறப்பு உறும் வண்ணம் அளித்தருளல் வேண்டும்.'' என்று பரமனைப் பரவி நின்றார்— என்று சிவபெருமானைத் துதித்தவாறு வேண்டி நின்றார்

**பொழிப்புரை:**

"இவனுடைய கோட்பாடு இதுவானால் இவனுக்கென்றே யான் இதுநாள்வரை தாங்கி நின்ற தசை முட்டையானது என்னை நீங்க வேண்டும். கயிலையின் கண்ணே தேவரீரை நான் வழிபடுவதற்கு அடியேனுக்குப் பேயின் வடிவினை அருள்வீராக" என்று அம்மையார் பரமனின் திருப்பாதங்களைத் தொழுது வேண்டி நின்றார்.

**விளக்கம்:**

இனிவரும் நிகழ்ச்சியிற் கயிலாயபதியான சிவபெருமானே அம்மையாரை "நம்மைப் பேணும் அம்மை" என்று உமாதேவியாருக்குத் திருவாய் மலர்ந்தருளப் போகிறார். உலக ஏக நாயகரான இறைவரே அவ்வாறு அழைப்பாராயின் உலகத்திலுள்ளார் யாவருக்கும் இப்பெருமகளார் தாயாவது வியப்போ? இக்காரணத்தைக் கொண்டே முன்பு தம் கணவனாக விளங்கிய பரமதத்தனை அம்மையார் இவன் என்று இப்பாடலில் ஒருமையில் அழைக்கின்றார். காரைக்காலம்மையார் புராணத்தின் எவ்விடத்திலும் அம்மையார் தம் கணவனோடு உரையாடிய வாக்குகள் குறிக்கப்படவில்லை என்பதையும் நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும். சேக்கிழார் தமது கதையினை எத்துணை நுட்பமாகவும் பத்தி மலியவும் நடத்திச் செல்கின்றார் என்பதை இந்த வார்த்தைப் பிரயோகத்தினாலும் நாம் அறிந்து கொள்ளலாம். உலக வாழ்க்கையில் எத்துணை வெறுப்பும் தமது வனப்பு நிறை உடலில் எத்தகைய உவர்ப்பும் அம்மையாருக்கு இருந்திருக்கும் என்பதைத் 'தசைப்பொதி' என்றசொற்றொடரால் நாம் அறிந்து கொள்ளலாம். இஃது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை தசையாகிய பொதி என விரியும். இங்கு என இரண்டாமடியில் வரும் சொல் வினைமாற்றின் கண் வந்தது.

ஆனவப் பொழுது மன்று ளாடுவா ரருளி னாலே
மேனெறி யுணர்வுகூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வளப்பை யெல்லா முதறியெற் புடம்பே யாகி
வானமு மண்ணு மெல்லா வணங்குமேய் வடிவமானார். 50

**பதவுரை**

ஆன அப்பொழுது-(அவ்வாறு அம்மையார்) வேண்டி நின்ற அந்த வேளையில், மன்றுள் ஆடுவார் அருளினாலே- தில்லைத் திருச்சிற்றம்பலமாகிய மன்றிலே நின்று ஆடும் பெருமானது திருவருளினாலே, மேல் நெறி உணர்வுகூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்—உயர்ந்த மார்க்கத்தினை அடையும் ஞானமானது மிகுதியாய் எழப் பேய்வடிவினை வேண்டியே பெறுபவராகிய அம்மையாரின் உடலில், ஊன் அடை வனப்பை— தசை

யினால் அடைந்த அழகுயாவற்றையும், உதறி-நீக்கி, ஏற்பு உடம்பேஆகி-எலும்பால் ஆன உடலின் வடிவினையே பெற்று வானமும் மண்ணும் எல்லாம் வணங்கு பேய் வடிவ மானார்-வானத்துத் தேவர்களும், பூவுலகத்து மானிடர்களும் வணங்குவதாகிய பேயின் வடிவத்தினை உடையவரானார்.

**பொழிப்புரை:**

அம்மையார் பேய்வடிவத்தை வேண்டி நின்ற அந்த வேளையில் மன்றிலாடும் ஆடலழகரின் திருவருளினால் அவர்தம் உடம்பிலிருந்த அழகிய தசை யாவும் மறைந்தொழிந்தன. அம்மையார் விண்ணவரும் மண்ணவரும் வணங்கும் எலும்பேயுருவான பேயின் வடிவத்தினை அடைந்தார்.

**விளக்கம்:**

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவதே மேலான வழி. அந்த வழியே அம்மையார் விரும்பிய பெரும் வழி. அதுவே இங்கு மேல் நெறி எனப்பட்டது. அந்த நெறியினை அதுகாலை அவர் பெறத்தக்க ஞானமும் அவருக்குக் கைகூடிற்று. அதனை உணர்வு என்ற சொல்லினாலே ஆசிரியர் பெறவைத்தார். உடற்பொதியை நீக்க அம்மையார் கொண்ட பெருவிருப்பினை 'ஊன் அடை வனப்பை யெல்லாம்' அவர் உதறி' எறிந்ததனாலே அறியலாம். உடம்பே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலைக் கண்வந்தது.

மலர்மழை பொழிந்த தெங்கும் வானதுந் துபியி னாதம்
உலகெலா நிறைந்து விம்ம வும்பரு முனிவர் தாமும்
குலவினர் கணங்க ளெல்லாம் குணலையிட் டனமுன் னின்ற
தொல்லையில் பல் சுற்றத் தாருந் தொழுதஞ்சி
யகன்று போனார். 51

**பதவுரை:**

எங்கும் மலர்மழை பொழிந்து — எல்லாவிடத்திலும் மலர்மாரி பொழிந்தது. வானதுந் துபியின் நாதம் உலகு எலாம் நிறைந்து விம்ம-வானத்துப் பேரிக்கைகளின் ஓசையானது உலகம்எல்லாம் நிறைந்துபெருக உம்பரும் முனிவர் தாமும்- தேவர்களும், முனிவர்கள் தாமும் குலவினர்-மகிழ்ந்து இன்புற்றனர். கணங்களெல்லாம் குணலையிட்டன- பூதகணங்கள் யாவும் மகிழ்ச்சியைப் புலப்படுத்தும் குணலை யென்னும் கூத்தினை ஆடின. முன்நின்ற தொலைவு இல்பல சுற்றத்தாரும் — அம்மையாரின் முன்பு நின்று நீங்காதவரான சுற்றத்தார் பலரும், தொழுது அஞ்சி அகன்று போனார்-அம்மையாரை வணங்கிப் பயத்தோடு அவ்விடத்தினின்றும் நீங்கிச் சென்றனர்.

**பொழிப்புரை:**

அம்மையாரும் பேய்வடிவினை வேண்டிப் பெற்றார். அதுகாலை எங்கும் மலர்மாரி பொழிந்தது. வானத்துப் பேரிகைகள் முழங்கின. தேவர்களோடு முனிவர்களும் மகிழ்ந்தனர். பூதகணங்கள் ஆனந்தத் தினாலே குணலைக் கூத்தாடின. முன்னால் நின்று விட்டு நீங்காத சுற்றத்தார் பலரும் அம்மையாரை வணங்கி, அச்சத்தோடு அவ்விடத் தினைவிட்டு நீங்கிச் சென்றனர்.

**விளக்கம்**

தேவர் மட்டுமன்றி முனிவரும் மகிழ்ந்தனர். முனிவர் தாமும் என்றதால், தேவரிலும் முனிவர் உயர்ந்தோர் என்பதும், அவர்கள் தாமும் வணங்கினர் என்பதும் அம்மையாரின் பெருமையினை விளக்கி அமைகின்றது, தொலைவு இல் சுற்றத்தார் பலரும் என்ற சொற்றொடரிலே தொலைவு இல் என்பதற்குத் தனது பிறவியைத் தொலைக்கும் பேறும், பக்குவமும் அடையாத சுற்றத்தவர் பலரும் எனப் பொருள் உரைக்கலாம். பலர் என்றதனாலே சிலர் அஞ்சாது நின்ற அம்மை யாரை வணங்கினர் என்பதும் பெறப்படும். அவர்கள் பரிபக்குவம் அடைந்த ஆன்மாக்களாவர்.

உற்பவித் தெழுந்த ஞானத் தொருமை னுமைகோன் றன்னை
அற்புதத் திருவந் தாதி யப்பொழு தருளிச் செய்வார்
பொற்புடைச் செய்ய பாத புண்டரீகங்கள் போற்றும்
நற்கணத் தினிலென் றானே னென்று நயந்து பாடி. 52

**பதவுரை:**

உற்பவித்து எழுந்த ஞானத்து ஒருமையின்- உள்ளத்தின் கண்ணே, உண்டாகி எழுந்ததான ஞானத்தின் ஒருமைப்பாட்டினால், உமை கோன் தன்னை- உமாதேவியாருக்குத் தலைவரான சிவபிரான் மீது, அற்புதத் திருவந்தாதி அப்பொழுது அருளிச் செய்வார்- அற்புதத் திருவந் தாதி என்ற பிரபந்தத்தினை அப்பொழுதே அருளிச் செய்வாராயினர். பொற்புடைச் செய்ய பாத புண்டரீகங்கள் போற்றி- சிறப்புப் பொருந்திய சிவந்த திருப்பாதங்களாகிய தாமரைகளை வணங்கி, நற்கணத்தினில் ஒன்று ஆனேன் நான் என்று நயந்து பாடி- இறைவனின் பூதக்கூட்டத் தினில் ஒன்றாய் நான் ஆகிவிட்டேன் என்று விரும்பிப் பாடுபவராய்

**பொழிப்புரை:**

அம்மையாரின் திருவுள்ளத்திலே ஞானத்தின் ஒருமைப் பாடா னது தோன்றி வளர்ந்தது. அதனால் அவர் உமாபதியாம் சிவபிரான் மீது அற்புதத் திருவந்தாதி என்னும் பிரபந்தத்தினைப் பாடியருளினார்.

அப்பெருமானின் திருப்பாதத் தாமரைகளை வணங்கி அவரின் நல்ல பூதகணத்தில் யானும் ஒன்றானேன் என்று விரும்பிப் பாடியவராய்

**விளக்கம்:**

உலகியல் வாழ்வினையும், தசைச் சுமையையும் நீங்கிய அந்தவேளையிலே அம்மையாரின் திருவுள்ளம் முழுமையான பரிபக்குவ நிலையை அடைந்து, அதனால் அங்கு ஒருமுகமாக ஞானம் உதிப்பவித்த. 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்' அது அதன் பயனாக அற்புதத் திருவந்தாதியும் எழுந்தது. சிவஞானத்தினை அருளி இறைவன்பாற் சேர்ப்பவர் உமாதேவியாராகிய பராசக்தியாதலாலேயே, அதனை நினைவூட்டும் வகையில் உமைகோன் என்றார். தம்மை ஒன்றுக்கும் பற்றாத சிறியராய் மெய்ம்மறந்த நிலையில் அம்மையார் அஃறிணைப் பொருள்களுள் ஒன்றாய்த் தம்மைப் பாவித்தனர் என்பதற்கு 'ஒன்று ஆனேன்' என்ற சொற்றொடர் சான்றாகும். உமைகோன் மீது என ஏழாம் வேற்றுமை இடப்பொருள் வரவேண்டிய இடத்தே இரண்டாம் வேற்றுமை ஐ உருபு வந்தது. அது வேற்றுமை மயக்கம்.

ஆய்ந்தசீ ரிரட்டை மாலை யந்தாதி யெடுத்துப் பாடி
ஏய்ந்தபே ருணர்வு பொங்க வெயிலொரு மூன்று முன்னாள்
காய்ந்தவ ரிருந்த வெள்ளிக் கயிலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருண்முன் கூர வழிப்படும் வழியால் வந்தார்

**பதவுரை:**

**ஆய்ந்தசீர் இரட்டை மாலை அந்தாதி எடுத்துப்பாடி** — ஆராய்ந்த சிறப்புப் பொருந்திய திருவிரட்டை மணிமாலையை அந்தாதியாக எடுத்துப் பாடியருளி, ஏய்ந்த பேர் உணர்வு பொங்க-பொருந்திய பெரிய உணர்வானது நிறைந்து எழ, ஏயில் ஒருமூன்றும் முன்னாள் காய்ந்தவர்— புரங்களாகிய ஒப்பற்ற மூன்றினையும் அழித்தவரான சிவபெருமானது, **வெள்ளிக் கையிலைமால் வரையை நண்ண**—வெள்ளியங்கிரியாகிய பெரிய கயிலைமலையினை அடைய, **வாய்ந்தபேர் அருள்முன் கூர** — வாய்ந்ததான பெரியஅருளானது முன்பு வளர்ந்தமையால், **வழிபடும் வழியால் வந்தார்**— இறைவனின் வழியிற் செல்கின்ற பாதையாலே வரலானார்.

**பொழிப்புரை:**

அம்மையார் திருவிரட்டை மணிமாலையையும், அற்புதத் திருவந்தாதியையும் பாடியருளினார். அவரின் திருவுள்ளத்திலே பொருந்திய ஞானம் பொங்கி எழுந்தது. அதனால், திரிபுராந்தகரான சிவ

பெருமானின் திருக்கைலாயத்தினைச் சென்றடையும் அவா உண்டா யிற்று. சிவனின் வழியிற் செல்லும் பாதையாலே அவர் கயிலையங் கிரியை நோக்கிச் செல்லலானார்.

**விளக்கம்:**

திருவிரட்டை மணிமாலையும், முதற் பாடலின் முடிவுச் சொல் அடுத்த பாட்டின் தொடக்கமாக அமையும் அந்தாதியாகப் பாடப்பட் டது என்பதைக் காட்ட, 'அந்தாதி எடுத்துப் பாடி' என்றார், எடுத்துப் பாடி என்பதற்கு உள்ளமாகிய பக்திக்கருவூலத்திலிருந்து சொல் எடுத் துப் பாடி என நயங் காணலாம். அவர் எடுத்துப் பாடிய பிரபந்தம்

'கிளர்ந்து வெந்துயர் வந்திடும் போதஞ்சி நெஞ்சம் என்பாய்'

என நெஞ்சிற்கு அறிவுறுத்துவதாகத் தொடங்குகின்றது நெஞ்சம் என்பாய் - நெஞ்சம் என்று சொல்லப்படும் பொருளே! சிவபெருமான் முப்புரம் எரித்த திருவருட் செயலே இங்கு நினைவூட்டியது. மும்மல வாசனையும் அவரருளால் அம்மையாரை விட்டு நீங்கின என்பதைக் காட்டற்குப் போலும் முப்புரம் என்பது மும்மல காரியம் என்பது திருமூலர் வாக்கு. 'வழிப்படும் வழி' என்ற தொடரில் வழிப்படும் என் பதற்கு இறைவன் திருவருளின் வழிபட்டுச் செல்வதற்கான வழி எனப் பொருள் கொள்ளப்பட்டது. 'வழிபடும் வழி' எனக் கொண்டு வழிபடு வதற்குரிய வழி என்பதும் பொருந்துவதே. 53

கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றோடுவார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை உள்ளவா கூறக்கேட்டே
அண்டர்நா யகனு ரென்னை அறிவரே லறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கியா னெவ்வுரு வாயெ னென்பார்

**பதவுரை:**

**கொண்டது ஓர் வேடத்தன்மை உள்ளவா கூறக்கேட்டே**- அம்மை யார் கொண்டதாகிய ஒப்பற்ற வேடமான பேய் வடிவத்தின் தன்மை யினை (அதன் வரலாறு அறிந்தோர்) உள்ளவாறு கூறக்கேட்டு, **கண்டவர் வியப்புற்று அஞ்சிக்கை அகன்று ஓடுவார்கள்** (அந்த வடிவத்தைக்) கண்டு வியந்து பயந்து விட்டு ஓடுவார்கள், '**அண்டர் நாயகனார் என்னை அறிவ வரேல்**—தேவர்தம் தலைவரான பெருமான் என்னை அறிவாராயின் **வாய்மை அறியா எண்திசை மாக்களுக்கு** உண்மையை உணராத எட்டுத் திசையிலும் உள்ள மனிதர்களுக்கு. **யான் எவ்வுரு ஆயின் என**'' என் பார்- யான் எந்தவடிவிலே தோன்றினாலும் என்ன?'' என்றுகூறுவாராகி

**பொழிப்புரை:**

அம்மையார் கொண்ட வேடத்தின் உண்மையினை அறியாத மாந்தர் அவரின் பேய் வடிவினைக் கண்டு வியப்பும் பயமும் மிக்கு ஓடுவார்கள். அம்மையசரோ "தேவதேவன் எனது உண்மையை அறிவாராயின், அதனை அறியாத மாந்தர்க்கு நான் எவ்வடிவாகத் தோன்றினாலும் என்ன?" என்பாராகி,

**விளக்கம்:**

சித்தத்தினைச் சிவன்பால் வைத்தவர் உலகத்தவரின் பழிப்புரைகளுக்கோ புகழுரைக்கோ அஞ்சுவதும் இல்லை. உள்ளத்திற் கொள்வதுமில்லை என்பதற்கு இப்பாடலிலே காட்டப்படும் அம்மையாரின் மனநிலை நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றும் பேசாமல் நில்.

என்பர் உமாபதி சிவாசாரியரும். அம்மையார் எடுத்த வடிவம் பித்தாய தவவேடமே. அதனை உணராத மாந்தரை அம்மையார் "மாக்கள்" என்கிறார். மாக்கள்—விலங்குகள்,

அம்மையார் பேய் வடிவம் கொண்ட வரலாற்றினை உள்ளவாறு கண்டோர் எடுத்துக் கூறினாலும் அது உண்மையன்று. ஏனெனில் அவர்களுக்கு அம்மையாரின் பரிபக்குவ நிலையைத் தெளியும் ஞானம் இல்லை. உடலை உண்மையென்று நம்பி அதன் அழகில் மயங்கியிருப்போர்க்கு ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருக்கிக் கொண்ட உத்தமியாரின் பேய்க்கோலம் அச்சத்தை விளைவித்ததன்றி, உண்மை புலனாகவில்லை, வேடத்தின் இரகசியம் வெளியாகவில்லை, இதனையே,

'அறியா வாய்மை எண்டிசை மாக்கள்'

என்ற சொற்றொடர் புலப்படுத்துகின்றது. 54

வடதிசைத் தேச மெல்லா மனத்தினுங் கடிதிற் சென்று
தொடையவி ழிதழி மாலைச் சூலபா ணியனார் மேவும்
படரொளிக் கைலை வெற்பிற் பாங்கணைற் தாங்குக் காலில்
நடையினைத் தவிர்ந்து பார்மேல தலையினால் நடந்துசென்றார் 55

**பதவுரை:**

வடதிசைத் தேசமெல்லாம் மனத்தினுங்கடிதிற் சென்று-வடதிசையின்கண் உள்ள தேசங்கள் யாவற்றையும் தம் மனத்தினும் விரைவாகக் கடந்து சென்று, தொடை அவிழ் இதழிமாலைச் சூலபாணியனார் மேவும்கட்

டவிழ்ந்து மலரும் கொன்றை மலர் மாலையினை அணிந்தவரும், சூலத்தைத் திருக்கரத்தில் ஏந்தியருள்பவருமான சிவபெருமானின், படர்ஒளிக் கைலை வெற்பிற் பாங்கணைந்து—விரிந்த ஒளியையுடைய கயிலைமலையின் பக்கத்தினைச் சென்றடைந்து காலில் நடையினைத் தவிர்ந்து- காலால் நடந்து செல்வதை நீங்கி, பார்மேல் தலையினால் நடந்து சென்றார்— தரைமீது தலையாலே நடந்து செல்லலானார்.

**பொழிப்புரை**

அம்மையார் திருக்கயிலையை அடையும் பேரவாவினாலே தமது மனத்தினும் விரைவாகச் சென்றார். சிவபிரான் இருந்தருளும் அப் புனித மலையினைக் காலாலே நடத்தற்கு அஞ்சித் தம் தலையாலே தரையில் நடந்து சென்றார்.

**விளக்கம்**

இறைவன் இருந்தருளும் புனிதமும், தெய்விகமும் பொருந்திய மலையினைக் காலால் நடக்க அஞ்சித் தலையாலே நடந்த அம்மையாரின் செய்கை அவரது பத்திப் பெருக்கினை வெளிப்படுத்துவதாகும். வட திசைத் தேசமெல்லாம் மனத்தினும் விரைவாகக் கடந்து சென்றமை அவரது பெருவிருப்பத்தை மட்டுமன்றிப் பரிபக்குவ நிலையையும் காட்டுகின்றது. அவர் பேய்வடிவினை வேண்டிப் பெற்றதன் பயனை உடனேயே அநுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றமை அவருக்குத் திருவருள் கைகூடிய வகையினைப் புலப்படுத்துகின்றது. 'சூலபாணியனார் மேவும் படரொளிக் கைலை' என்பதற்குச் சூலத்தைத் திருக்கரத்திற் கொண்டருளும் இறைவன் இருந்தருளும் திறத்தினால் ஒளிபடரப் பெற்ற கைலை என்று பொருள் கொள்வது சிறப்பு. வேறு எந்த மலைக்கும் கிடைக்காத பெருமை அதற்குக் கிடைத்திருப்பதும், இறைவனின் ஒளிப்பிழம்பான திருமேனியின்றும் கிளர்ந்தெழும் ஒளியினைத் தாங்கும் பேறு பெற்றிருப்பதும் அதற்குரிய தனிச் சிறப்பாகும். காலில் என்ற பெயரில் ஏழாம் வேற்றுமை உருபு வரினும் அதனை மூன்றாம் வேற்றுமையாக விரித்தல் வேண்டும். எனவே அது வேற்றுமை மயக்கம். 55

தலையினா னடந்து சென்று சங்கர னிருந்த வெள்ளி
மலையின்மே லேறும் போது மகிழ்ச்சியா லன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுத லொருபா கத்துச்
சிலைநுத லிமய வல்லி திருக்கணோக் குற்ற தன்றே. 56

**பதவுரை:**

தலையினால் நடந்து சென்று — (திருக்கயிலாயத்தின் மீது) தமது தலையினாலே நடந்து சென்று, சங்கரன் இருந்த வெள்ளி மலையின்மேல்

ஏறும்போது-சுகத்தைச் செய்பவனாகிய சங்கரன் இருந்தருளும் வெள்ளி மலையாம் கயிலாய மலையின்மேல் ஏறும்பொழுது, மகிழ்ச்சியரல் அன்பு பொங்க—(தமக்கு ஏற்பட்ட) மகிழ்ச்சியினாலே அன்பானது பெருகி எழ, கலை இளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல் ஒரு பாகத்து — கிரணங்களோடு கூடிய இளம்பிறையினையும், தலைமாலையினையும் சூடியருளும் நெற்றிக் கண்ணரான சிவபெருமானது ஒப்பற்ற இடப்பாகத்தின் கண்ணே, சிலை நுதல் இமய வல்லி திருக்கண் நோக்கு உற்றது சிலை போன்ற நுதலினை யுடைய இமயத்துவசனின் திருமகளாரான கொடிபோலும் உமாதேவி யாரது திருக்கண் பார்வை அம்மையாரை நோக்கிச் சென்றது.

**பொழிப்புரை**

அம்மையார் தமது தலையினாலே சங்கரன் வீற்றிருந்தருளும் திருக் கயிலாய மலையின் மேல் ஏறிக்கொண்டிருந்த பொழுது இமய வல்லி யாகிய உமாதேவியின் திருக்கண் பார்வை அவரை நோக்கிச் சென்றது.

**விளக்கம்**

சங்கரன் என்ற சொல் ச+கரன் என பிரிக்கப்படும். ச=சுகம் மகிழ்ச்சி: கரன் — செய்பவன். சுகத்தைச் செய்பவனாகிய சங்கர னின் திருமலைமீது ஏறும்பொழுது அம்மையாருக்கு மகிழ்ச்சி ஏற்ப ட்டதில் வியப்பு இல்லை. அந்த மகிழ்ச்சியிலிருந்து அன்பு கிளர்ந்து எழுவதும் இயற்கையே. கண்ணுதல் என்பது கண்ணை நெற்றியிற் கொண்டவன் என விரியும். எனவே இது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 56

அம்பிகை திருவுள் ளத்தி னதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் தலையினா லடந்திங் கேறும்
எம்பெரு மானோ ரெற்பின் யாக்கையன் பென்னே என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான். 57

**பதவுரை.**

அம்பிகை திருவுள்ளத்தின் அதிசயித்தருளி—அம்மையானவர் தம் திருவுள்ளத்தின் கண்ணே வியப்பைக் காட்டியருளி, தாழ்ந்து தம்பெரு மானை நோக்கி- (இறைவனுக்கு) வணக்கம் செய்து தம் தலைவரைப் பார்த்து எம்பெருமான் — எம்பெருமானே! ஓர் என்பின் யாக்கை- என் பினாற் பொதிந்த உடல்ஒன்று, தலையினால் நடந்து இங்கு ஏறும்- தனது தலையினாலே நடந்து இங்கு ஏறி வருகின்றது, அன்பு என்னே! — அதன் அன்புதான் இருந்தவாறு என்னே! என்ன - என்று உரைத்தருள, நம

பெருமாட்டிக்கு அங்கு—எமது பெருமாட்டிக்கு அப்பொழுது, நாயகன் அருளிச் செய்வான்-தலைவரானசிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினார்.

**பொழிப்புரை:**

அம்பிகையானவர் அக்காட்சியினைக் கண்டு தமது திருவுள்ளத்தின் கண்ணே வியப்புற்றருளினார். ''எம்பெருமானே! எலும்பு பொதிந்த யாக்கை ஒன்று இங்குத் தலையாலே நடந்து வருகின்றது. இதன் அன்பு என்னே'' என்று அவர் திருவாய்மலர்ந்தருளுவாராகி,

**விளக்கம்:**

உலகம் யாவுக்கும் தாயானவரும், அப்பனின் இடப்பாகத்தே பங்குகொண்டு எழுந்தருளியுள்ளவருமான உமாதேவியார், தங்களை நோக்கிக் காலால் நடவாது தலையாலே நடந்துவரும் எலும்பு உருவத்தை முன்னரே அறியாதிருந்தார்; இப்பொழுது அதைக் கண்டதும் வியப்புற்றார் என்று கூறுவது பொருந்துமோ என்ற கேள்வி இப்பாடலைப் படிக்கும்போது எழலாம். அம்மையார் யாவும் தாமாகவே அறியும் இயற்கை அறிவினரே. அவரே அறியாதார்போல வியப்புற்றதாகக் காட்டியருளியமை உலகினர்க்கு அம்மையாரின் பெருமையை உணர்த்தவேயன்றி வேறன்று. இதனைப் புலப்படுத்தவே சேக்கிழார் 'திருவுள்ளத்தின் அதிசயித்து அருளி'' என்றார்.

வருமிவள் நம்மைப் பேணு மம்மைகா ணுமையே மற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றனளென்று பின்றை
அருகுவந் தணையநோக்கி யம்மையே யென்னுஞ் செம்மை
ஒருமொழி யுலக மெல்லா முய்யவே யருளிச் செய்தார்

**பதவுரை**

'உமையே-உமாதேவியே, வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண் — வந்து கொண்டிருக்கும் இவள் நம்மைத் தனது பக்தியினாலே போற்றுகின்ற அம்மை என்பதை அறிவாயாக, மற்று இப் பெருமை சேர் வடிவம் வேண்டிப் பெற்றனள் — மற்று இந்தப் பெருமை அமைந்த உருவத்தினையும் நம்மிடம் வேண்டிப் பெற்றாள்'' என்று பின்றை-என்று திருவாய் மலர்ந்தருளிய பின்னர், அருகு வந்து அணைய நோக்கி- அம்மையார் அருகில் வந்துசேர அவரை நோக்கி, ''அம்மையே'' என்னும் செம்மை ஒரு மொழி— ''அம்மையே'' என்னும் செவ்விய ஒப்பில்லாத மொழியினை, உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார்- உலகங்களெல்லாம் உய்யும் நோக்கத்திற்காகவே அருளிச் செய்தார்.

**பொழிப்புரை:**

''உமையே! இவ்விடம் நாடிவரும் இவள் எம்மைப் போற்றுகின்ற அம்மை என்பதை அறிவாயாக, இந்த எலும்பு வடிவினையும் எம்மை வேண்டி அவள் பெற்றனள்'' என்று இறைவர் திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறு கூறியருளிய பின்னர், அம்மையார் அருகில் வர அவரை நோக்கி, ''அம்மையே'' என்னும் செவ்விய ஒப்பற்ற மொழியினை உலகங்கள் யாவும் உய்யும் வண்ணம் உரைத்தருளினார்.

**விளக்கம்:**

இறைவர் அநாதியானவர். 'தாயும் இலி, தந்தை இலி'. அவரே உலகிலுள்ள உயிர்கள் யாவிற்கும் தந்தை. இவ்வாறிருக்கவும் அவர் ''நம்மைப் பேணும் அம்மை'' என்று உமாதேவியார்க்கு அம்மையாரை அறிமுகம் செய்தருளியதோடு நில்லாது தாமும் தமது திருவாயினால் அப்பெருமாட்டியை ''அம்மையே'' என்று அழைத்தாரெனின் அவரின் பெருமையை என்னவென்பது!''தோழமையாக வுனக்கு நம்மைத் தந்தனம்'' என்று பின்னொருகாற் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அருளப்போகும் பெருமானின் பேரருட்டிறம் எத்துணை உயர்ந்தது என்பதற்கு இந்த 'அம்மையே' என்ற அழைப்பினைவிடச் சிறந்த சான்றும் வேண்டுவதோ? சேக்கிழார் இவ்விடத்திலே நின்று அத்திருவாக்கின் சிறப்பை நுனித்து நுனித்து உளங்கொண்டு உளங்கொண்டு உருகியிருப்பார் என்பதனை அவர் இத்திருவாக்கிற்கு அளித்துள்ள அடைமொழி மூலம் நாம அறிந்து கொள்ளலாம்

'ஒருமொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார்' என்ற அடியினை நோக்குக. உலகம் என்ற ஒருமைச் சொல் எல்லாம் என்ற சொல்லைப் பெற்றுப் பன்மைப் பொருள் தந்தது. மூவுலகங்களும் எனப் பொருள் கொள்ளலாம்.

அங்கண னம்மை யேயென் றருள்செய வப்பா வென்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னாருந் தாமெதிர் நோக்கி நம்பால்
இங்குவேண் டுவதே னென்ன விறைஞ்சிநின் றியம்பு கின்றார்.

**பதவுரை:**

அங்கணன் அம்மையே என்று அருள்செய—அழகிய திருக்கண்கள் உள்ள சிவபிரானானவர் அம்மையே என்று அருளிச் செய்ய, ''அப்பா! என்று பங்கயச் செம்பொற் பாதம் பணிந்து வீழ்ந்து எழுந்தார் தம்மை- ''அப்பா'' என்று அழைத்தவராய்த் தாமரை போலவும், பொன் போல

வும் அழகும் ஒளியும் அமைந்த் திருப்பாதங்களைப் பணிந்து வீழ்ந்து எழுந்தவரான அம்மையாரை சங்கவெண் குழையினாரும் தாம் எதிர் நோக்கி—வெண்மையான சங்காலான வெள்ளிய தோட்டினை அணிந்தருளும் அப்பன் தானும் எதிர் நோக்கியருளி, "நம்பால் இங்கு வேண்டுவதுஎன்" என்ன- அம்மையிடத்தே நீ இவ்விடத்தில் வேண்டுவது யாது?"என்று கேட்டருள, இறைஞ்சி நின்று இயம்புகின்றார்- வணங்கி நின்று கூறுகின்றார்.

பொழிப்புரை:

சிவபெருமான் 'அம்மையே' என்று அருள அம்மையாரும் 'அட்பா' என்று அழைத்த வண்ணம் பெருமானின் திருப்பாதங்களிலே வீழ்ந்து எழுந்தார். அவ்வாறு எழுந்தவரை இறைவன் கடைக்கண் சாத்தியருளி 'எம்மிடத்தில் இங்கு நீ வேண்டுவது யாது என்று கேட்டருளினார். அதற்கு அம்மையார் பதில் கூறுகின்றார்.

விளக்கம்:

அங்கணன் என்று இறைவனின் அழகுத் திருவிழிகளைச் சேக்கிழார் முதலிலே குறித்ததன் நோக்கம், பெருமான் அம்மையாரை எதிர் நோக்கியருளும் செயலின் திறத்தினைப் புலப்படுத்துவதேயாம். சங்கவெண் குழையினார் எனக் காதணிகளைக் கூறியது அடியவரான அம்மையாரின் வேண்டுகோளை அவர் கேட்டருளுவதைக் குறித்துக் காட்டவே. வீழ்ந்து எழுந்து அம்மையார் வணங்குதற்கு உரியனவாயமைந்த திருப்பாதங்களின் அழகினையும் ஒளியையும் தாமரைக்கும் செம்பொலனுக்கும் உருவகித்த திறனும் நோக்குதற்குரியது. 'இங்கு வேண்டுவது என்' என இறைவன் கேட்டருளியது, 'அங்கு என்புருவை வேண்டிப் பெற்றாய், இங்கு என்ன புதியவாகக் கேட்பாயோ?' என்ற குறிப்பினைப் புலப்படுத்தியது சேக்கிழார், இறைவன் 'அம்மையே' என்று அழைத்தமை ஆராத பக்தியுணர்வினை மேலும் மேலும் கிளரச் செய்தமையால் அதனை இப்பாடலிலும் "அங்கணன் அம்மையே என்று அருள் செய" என அமைத்துக் காட்டியுள்ளார் எனலாம். சொற்சுருக்கமும் செறிவும் சேக்கிழாரின் தனித்தன்மை என்பதை அறிந்தாற்றான் இதன் நயம் புலனாகும்.

இறவாத இன்ப வன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை
யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீழிருக்க வென்றார்

பதவுரை

இறவாத இன்ப அன்பு வேண்டி—என்றும் அழியாத இன்பம் நிறைந்த அன்பினை வேண்டிக் கொண்டு, பின் வேண்டுகின்றார் பின்னை

றும் அம்மையார் வேண்டுகின்றாராகி, பிறவாமை வேண்டும் - யான் பிறவாதிருத்தல் வேண்டும் மீண்டுக் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும் - மீண்டும் யான் பிறக்க நேரிட்டால் தேவரீரை என்றும் மறவாதிருத்தல் வேண்டும், அறவா - அறத்தின் வடிவான பெருமானே! இன்னும் நீ ஆடும் போது உன அடியின்கீழ் இருக்க வேண்டும் என்றார்—இன்னமும் நீ திருவாடல் புரிந்தருளும் போது உன் திருவடிக்கீழ் யான் இருத்தல் வேண்டும் என்றார்.

**பொழிப்புரை:**

அம்மையார் முதலிலே இறைவனிடத்தே அழியாத இன்ப அன்பினை வேண்டினார்; பின்னர், "பிறவாமை வேண்டும் பிறப்பு உண்டேல் உன்னை மறவாமை வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார். 'இன்னும் யான் வேண்டுவது, அறக் கடவுளே! - நீ ஆடல் புரியும் போது உன் திருப்பாதங்களின் கீழ் இருத்தலே" என்று வேண்டிக் கொண்டார்.

**விளக்கம்:**

'பிறந்ததின் பயன் எது' என உணர்ந்த அம்மையார் முதலில் வேண்டுவது இறைவனின் இன்ப அன்பினையே. அடுத்துப் பிறவி என்ற கடலினின்றும் நீங்கும் வேட்கை உண்டாக அதனைக் கேட்கின்றார். அடுத்து இறைவனின் நியதியைப் பற்றிய எண்ணம் ஏற்பட்டதால் தமக்குப் பிறவி இன்னமும் இருப்பின் அதனை வேண்டா என்று சொல்லத் தாம் அதிகாரி அல்லர் என்ற எண்ணம் உண்டாகின்றது. ஆனால் அவ்வாறு ஏற்படும் பிறவியையும் பண்பும் பயனும் உள்ளதாக மாற்ற அவருக்கு உபாயம் தோன்றுகிறது. இறைவன் ஆடும்பொழுது அவனின் திருப்பாதத்தின் கீழ் அமர்ந்திருக்கும்போதும், பாதுகாப்பும் வேறு இல்லை என்ற முடிவிற்கு வருகின்றார். இந்நிலையில் தமது உணர்ச்சி வேகத்தில் "வேண்டும்" என்று தமது கோரிக்கையை முதலிற் கூறி அடுத்துத் தேவையை உரைக்கின்றார். இந்த அமைப்பு முறை சேக்கிழாரின் ஆழ்ந்த நோக்கினைப் புலப்படுத்துவதாயுள்ளது. "அறவா" என்ற விளியின் வாயிலாக இறைவன், ஆன்மாக்களுக்கு அவ்வவற்றின் வினைக் கேற்பப் பயனையருளும் தருமப் பெருங்கடல் என்ற உண்மையும் விளக்கமாகின்றது. 60

கூடுமா றருள்கொ டுத்துக் குலவுதென் றிசையிலென்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய வாலங் காட்டில்
ஆடுமா நடமு நீகண் டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை யென்றான் பரவுவார் பற்றாய் நின்றான்

**பதவுரை:**

பரவுவார் பற்றும் நின்றான - தன்னை வழிபடுபவர்களின் பற்றுக் கோடாய் நிற்பவரான கயிலாயபதி, கூடுமாறு அருள் கொடுத்து— (அம்மையார்வேண்டியவை யாவும்) கைகூடும்வண்ணம் அருள் பாலித்து குலவு தென் திசையில் என்றும்— "விளங்கும் தெற்குத் திசையிலுள்ள நாட்டின் கண்ணே எக்காலத்தும் நீடு வாழ் பழனமூதூர் நீடித்து வாழ் கின்ற திருப்பழனம் என்னும் பழமையான ஊரின் கண், நிலவிய ஆலங் காட்டில்- விளங்கிய திருவாலங்காட்டிலே, ஆடுமா நடமும் நீகண்டு ஆனந் தம் சேர்ந்து யாம ஆடுகின்ற பெரிய திருநடனத்தையும் நீ தரிசித்து ஆனந்தம் அடைந்து, நம்மை எப்போதும்பாடுவாய்" என்றான — எம்மை எக்காலத்திலும் பாடுவாய் என்று திருவாய் மலர்ந்தருளினார்

**பொழிப்புரை:**

கயிலாயபதி, அம்மையார் வேண்டியன யாவும் கைகூடும் என அருள் செய்தார். "தென திசையிலுள்ள திருவாலங்காட்டுத் திருப் பதியிலே யாம் ஆடும் திருநடனத்தைத் தரிசித்து எப்போதும் ஆனந்தம் சேர்ந்து எம்மைப் பாடுவாயாக" என்றருளினார்.

**விளக்கம்:**

"பரவுவார்பற்று" என்று இறைவனைக் குறித்த பகுதி அவன் அடியவர்களுக்கு அருளும் திறத்தினை வியந்தமையைக் காட்டுகின்றது. 'எமக்கு அடியாரின் திருப்பாடலைக் கேட்பதில் ஆர்வம் உண்டு. உனக்கோ எமது திருநடனத்தை தரிசிப்பதில் ஆர்வம் உண்டு. வணி கப் பெண் நீயாதலால் இந்தப் பண்டமாற்று உனக்கு ஏற்றதுதான் என்று அருள்வார போலத் தமது திருவுள்ள விருப்பையும் அம்மை யாரின் மனக்கருத்தையும் இறைவர் வெளிப்படுத்தியருள்வது போல இப்பகுதி அமைந்துள்ள சிறப்பை நோக்குக. நின்றான்—வினையாலணை யும் பெயர், எழுவாயாக வந்துஎன்றான் என்ற பயனிலை பெற்றது. 61

அப்பரி சருளப் பெற்ற வம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொரு ளானார் தம்மை விடைகொண்டு
வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை யன்பாற் றிகழ்திரு வாலங் காடாம்
நற்பதி தலையினாலே நடந்துபுக் கடைந்தா ரன்றே. 62

**பதவுரை.**

அப்பரிசு அருளப் பெற்ற அம்மையும் - அந்தவகையாக 'அருளப் பெற்ற அம்மையாரும், செம்மை வேத மெய்ப்பொருளானார் தம்மை- பெருமை பொருந்திய வேதங்களின் உண்மைப் பொருளான சிவபெரு மானை, விடை கொண்டு வணங்கிப் போந்து - விடைபெற்று வணங்கிச்

கொண்டுபோய் செப்பருங் பெருமை அன்பால்- கூறவியலாத பெருமையோடு கூடிய அன்போடு, திகழ் திரு ஆலங்காடாம் நற்பதி- திகழ்கின்ற சிறப்புடைய திருவாலங்காட்டுத் திருப்பதியினை, தலையினாலே நடந்து புக்கு அடைந்தார்-தமது தலையினாலே நடந்துசென்று புகுந்துஅடைந்தார்

**பொழிப்புரை:**

இவ்வாறு இறைவரால் அருளப்பெற்ற அம்மையாரும் சிவபெருமானிடம் விடை கொண்டவராய் ஒப்பற்ற திருவாலங்காட்டிற்குப் பெருகிய அன்போடு தலையால் நடந்து வந்து புகுந்தார்.

**விளக்கம்:**

வேதத்தின் முடிந்த முடிவும் உண்மைப் பொருளும் சிவனே யாதலால் 'வேதத்தின் மெய்ப்பொருள்' என்றார். இது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. அன்பால் என்பது மூன்றும் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. அம்மையாரின் அன்பு ஈடு இணையற்றது என்பதைச் 'செப்பரும் பெருமை அன்பு' என்ற சொற்றொடர் குறிக்கின்றது. என்புருவம் வேண்டிப் பெற்றது, எனறும் இறை நினைவாய் இருந்ததும், பெற்ற வரங்களும், இறைவனே அம்மை என்று அழைத்ததுமாகிய பெருமைகள் செப்புதற்கு அரியவை என்பதில் ஐயம் இல்லை,

ஆலங்கா டதனி லண்ட முறநிமிர்ந் தாடுகின்ற
கோலங்காண் பொழுது கொங்கை திரங்கியென்
றெடுத்துத் தங்கு
மூலங்கா ணுதார் தம்மை மூத்தநற் பதிகம்பாடி
ஞாலங்கா தலித்துப் போற்று நடம்போற்றி
நண்ணும் நாளில்

**பதவுரை:**

ஆலங்காடு அதனில்- திருவாலங்காடு என்னும் அந்தக் திருப்பதியிலே, அண்டம் உற நிமிர்ந்து ஆடுகின்ற கோலம் காண் பொழுது - அண்டங்களை அடையும் வண்ணம் நிமிர்ந்து ஆடல்புரிந்தருள்கின்ற திருக் கோலத்தினைத் தரிசித்த அந்தப்பொழுதில், கொங்கை திரங்கி யென்று எடுத்து—'கொங்கை திரங்கி' எனத்தொடங்கி, தங்கும் மூலம் காணுதார் தம்மை - தங்கியிருந்தற்கான அடியினைக் காணவெண்ணுதவரான பெருமானை, மூத்தநற் பதிகம் பாடி - மூத்த திருப்பதிகம் கொண்டு பாடியருளிய, ஞாலம் காதலித்து போற்றும் நடம் போற்றி - உலகம் விரும்பிப் புகழ்வதாகிய திருநடனத்தைப் போற்றுதல் புரிந்து, நண்ணும் நாளில் - வாழ்ந்து வரும் நாளில்,

**பொழிப்புரை:**

திருவாலங்காட்டுப் பதியிலே வந்து அண்டம் உற ஆடும் ஆடலழகரின் திரு நடனத்தைத் தரிசித்து அம்மையார் 'கொங்கை திரங்கி

எனத் தொடங்கித் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தினைப் பாடியருளினார். இவ்வாறு உலகோர் போற்றித் துதிக்கும் திருநடனத்தைக் கண்டு வாழ்ந்து வரும் நாளில்......

**விளக்கம்:**

அண்டம் உற நிமிர்ந்து' என்பதால் இறைவனின் திருமுடியைக் கூறியவர், 'தங்கும் மூலம் காணுதார்' என்பதாற் பெம்மானின் திருவடியைக் குறித்தார். திருவாலங்காட்டுத் திருப்பதியிலே பாடிய திருப்பதிகமே தமிழிலே தோன்றிய முதற்பதிகமாதலால் அது மூத்ததிருப்பதிகம் என வழங்கும். இதுவும், அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டைமணிமாலையும், மற்றொரு திருவாலங்காட்டுத் திருப்பதிகமும் ஆகிய நான்கும் அவற்றின் சிறப்பு நோக்கிப் பதினோராந் திருமுறையிலே தொகுக்கப் பெற்றுள்ளன. இவையே அத் திருமுறையிலே முதலானவையாயும் உள்ளன.

63

மட்டவிழ் கொன்றையினார் தந் திருக்கூத்து முன்வணங்கும்
இட்டமிகு பெருங்காத லெழுந்தோங்க வியப்பெய்தி
எட்டியில வம்மீகை யெனவெடுத்துத் திருப்பதிகங்
கொட்டமுழ வங்குலக னாடுமெனப் பாடினார்

**பதவுரை:**

**மட்டு அவிழ் கொன்றையினார் தம் திருக்கூத்து முன் வணங்கும்**— தேனசொரியும் கொன்றை மாலையணிந்த பெருமானின் திருக்கூத்தினை முன் நின்று வணங்கும், **இட்டம்மிகு பெருங்காதல் எழுந்து ஓங்க வியப்பு எய்தி**— விருப்பம் மிகுந்த பெரிய காதலாய் எழுந்து ஓங்கிட அதிசயத்தினை அடைந்து, **'எட்டி இலவம் ஈகை' என எடுத்து**—'எட்டி இலவம் ஈகை' எனத் தொடங்கி, **திருப்பதிகம்**- திருப்பதிகத்தினை, **'கொட்ட முழவம் குலகன் ஆடும்,' எனப் பாடினார்**—முழவம் கொட்டக் குழகன் ஆடும் என்று பாடியருளினார்.

**பொழிப்புரை:**

சிவபெருமானின் திருக்கூத்தினை முன்நின்று வணங்கும் பெருங் காதலால் எழுந்து ஓங்கிட வியப்பினை அடைந்த அம்மையார், பெருமான்மீது 'எட்டி இலவம் ஈகை' எனத்தொடங்கிக் 'கொட்ட முழவம் குழகன் ஆடும்' என்று திருப்பதிகம் பாடியருளினார்.

**விளக்கம்**

அம்மையாரின் ஆராமை நிறைந்த பேரன்பினைப் புலப்படுத்தச் சேக்கிழார் இட்டம், மிகு, பெரும் ஆகிய அடைகளைக் கொடுத்து அத்தகைய காதல் என முடிக்கும் திறம் நயத்தற்குரியது. எட்டி— ஊமத்தை, இலவம்-இலவமரம், ஈகை-கற்பகமரம், குழகன் - அழகன். 64

மடுத்தபுனல் வேணியினு ரம்மையென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றுரைக் குலவியதாண் டத்திலவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீ ழென்றுமிருக் கின்றுரை
அடுத்தபெருஞ் சீர்பரவ லாரளவா யினதாம்மா 35

**பதவுரை:**

மடுத்தபுனல் வேணியினுர் - உள்ளடக்கிய கங்காநதியினைச் சடையின் கண்ணே தரித்தருளிய பெருமான், அம்மை என மதுரமொழி கொடுத்து அருளப்பெற்றுரை—'அம்மையே' எனும் இனிய சொல்லைக் கொடுத்து அழைத்து அருளப் பெற்றவரை; குலவிய தாண்டவத்தில் அவர் எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றும் இருக்கின்றுரை - விளங்கும் திருத்தாண்டவத்தின்போது அப்பெருமான் எழுந்தருளும் சிவந்த திருவடிக்கீழ் எப்பொழுதும் இருக்கின்றவரை, அடுத்த பெரும் சீர் பரவல் ஆர் அளவாயினது அம்மா - அடைந்த பெரிய சிறப்பினைப் புகழ்ந்து பாடுதல் எவரின் அளவினது அம்மா!

**பொழிப்புரை:**

கங்காதரரான சிவபெருமானுலே "அம்மையே" என்ற இனிய சொல்லினைக் கொடுத்து அருளப் பெற்றவரும், இறைவனின் திருத்தாண்டவத்தின்போது அவரின் திருப்பாதங்களில் இருக்கின்ற பேற்றினைப் பெற்றவரும், ஆன அம்மையாரின் பெரிய சிறப்புகளை எடுத்துச் சொல்ல எவரால் முடியும் அம்மா!

**விளக்கம்**

சேக்கிழார் தன்னடக்கம் மிக்கவர். அடியவரின் சிறப்பினை உரைக்கும் போதெல்லாம் அவற்றைத் தம்மால் உரைத்தல் இயலாத காரியம் என்று ஆராமையுடன் கூறுவது அவர் வழக்கம். இவ்விடத்தும் அந்த முறைமைக்கிசைய 'அம்மையாரின் சிறப்பினை உரைக்கவல்லவர் யார்' என்று திகைப்புடன் கூறுகின்றுர். அம்மா! என்ற வியப்பினைக் குறித்து வந்த இடைச்சொல் அவரின் திகைப்பினைப் பூரணப்படுத்தல் காணலாம். சேவடி பண்புத்தொகை. செம்மையாகியஅடிஎன விரியும்.

ஆதியோ டந்த மில்லா னருள்ட மாடும் போது
கீதமுன் பாடுமம்மை கிளரொளி மலர்த்தாள் போற்றிச்
சீதநீர் வயல்சூழ் திங்க ளூரினப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த திருத்தொண்டு புகல லுற்றேன்

**பதவுரை:**

ஆதியோடு அந்தம் இல்லான் அருள்நடம் ஆடும்போது - தொடக்கத்தோடு முடிவும் இல்லாராகிய இறைவன் அருள் நடனத்தினை

ஆடும்பொழுது. கீதம் முன்பாடும் அம்மை கிளர்ஒளி பாதம் போற்றி— பாடல்களை முன்பு பாடும் அம்மையாரின் கிளர்ந்தெழும் ஒளிபொருந்திய திருப்பாதங்களினை வணங்கி, சீதநீர் வயல்சூழ் திங்களூரின் அப்பூதியாராம் - குளிர்ச்சி பொருந்திய வயலாலே சூழப்பெற்ற திங்களூரில் வாழ்ந்த அப்பூதியாராம். போதமா முனிவர் செய்த திருத்தொண்டு புகலல் உற்றேன்—ஞானம் நிறைந்தவரான பெருமுனிவரின் திருத்தொண்டினைச் சொல்லத் தொடங்குவேன்.

## பொழிப்புரை:

ஆதி அந்தம் இல்லாத ஆடலழகன் திருநடம் ஆடும்பொழுது திருப்பாடல்களை எடுத்துப் பாடியருளும் காரைக்காலம்மையாரின் திருப்பாதங்களைப் போற்றி, திங்களூரில் வாழ்ந்த ஞானப் பெருந்தவரான அப்பூதியடிகள் நாயனாரின் திருத்தொண்டினை எடுத்துக்கூறத் தொடங்குவேன்.

## விளக்கம்

அடியார் ஒவ்வொருவரது வரலாற்றினையும் கூறி அவ்வரலாற்றிறுதியிலே அடுத்துவரும் அடியவரின் வரலாற்றிற்குத் தொடக்கம் செய்வது சேக்கிழாரின் வழக்கம். அவ்வழக்கத்திற்கிசைய இவ்விறுதிப் பாடலிலே அம்மையாருக்கு வணக்கம் கூறித் தொடர்ந்து அப்பூதியடிகளின் வரலாறு கூறுவேன் என்று தொடங்குகின்றார். புகலலுறுவேன் என எதிர்காலத்தில் வரவேண்டியது இறந்தகாலத்திற் கூறப்பட்டமை துணிவுபற்றி வந்த காலவழுவமைதி. தாம் தலையங்கத்திற் கொடுத்த காரைக்காலம்மையார் என்ற திருநாமத்தினை வலியுறுத்த இப்பாட்டிலே சேக்கிழார் 'அம்மை' எனக் குறித்த திறம் நோக்கத் தக்கது. 69

முற்றும்.

# மாதிரி வினாக்கள்

1. காரைக்காலம்மையார் புராணத்தின் வாயிலாகச் சேக்கிழார் சுவாமிகளின் பத்தித் திறன் புலப்படுமாற்றை விளக்குக.

2. "காரைக்காலம்மையார் குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும் அவரின் உள்ளம் எக்காலத்தும் இறையடியையே சிந்தித்திருந்தது" என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் காட்டி விபரிக்குக.

3. "பரமதத்தனுக்கும் காரைக்காலம்மையாருக்கு மிடையே காணப்பட்ட இலட்சியமுரண்பாடுகளைச் சேக்கிழார்சுவாமிகள் நயம்பட எடுத்துக் காட்டியுள்ளார்" இக் கூற்றினை ஆராய்க.

4. காரைக்காலம்மையார் புராணத்தில் உவமை நயம் சொல்லாட்சி ஆகியன சிறந்துள்ள இடங்களை ஆராய்க.

5. "சேக்கிழார், காரைக்காலம்மையார் புராணத்தின் வாயிலாகத் தங்காலத்து வணிகர்தம் வாழ்க்கையின் பல்வேறு இயல்புகளையும் நன்கு சித்தரித்துள்ளார்" இக்கூற்றின் பொருத்தத்தினைப்போதிய சான்றுகள் தந்து நிறுவுக.

6. காரைக்காலம்மையார் புராணம் நாடகத் தன்மை பொருந்தயாக்கப்பட்டுள்ளதோ என ஆராய்க

7. "சேக்கிழார் மிகவும் நுட்பமாகவும், சுருக்கமாகவும் கதை நடத்திச் செல்வதில் வல்லவர்." இக் கூற்றினை ஆராய்க.

8. காரைக்காலம்மையார் கைலாய பதியினைத் தரிசிக்கும் இடம் அவர் வரலாற்றின் உச்சக்கட்டம் என்பதற்கு ஆதாரங்கள் காட்டி விளக்குக.

9. காரைக்காலம்மையார் இரண்டாவது முறையாக இறைவனிடம் மாங்கனி பெற்றதிலிருந்து அவரின் வாழ்க்கையிலேதிருப்புழனை ஏற்படுவதைச் சேக்கிழார் சுவாமிகள் சித்தரிக்குமாற்றினை ஆராய்க.

10. புனிதவதியாரைப் பரமதத்தன் பிரிந்தது தொடக்கம் அவனை அவர் பாண்டிநாட்டிற் சென்று காண்பதுவரையுள்ள இடைக்காலத்திலே புனிதவதியாரின் வாழ்க்கை பற்றிச் சேக்கிழார் விரித்துக் கூறுது விட்டமை பொருந்துமா? ஆராய்க.

11. சேக்கிழார் புராணத்தில் வரும் பின்வரும் பாத்திரங்களுள் இரண்டு பற்றி ஆராய்க.

1. புனிதவதியார் 2. தனதத்தன் 3. பரமதத்தன்